

தேர்தலே சிறந்த வழி 9



அதிர்ந்தது அமெரிக்கா 10

தேசிய அணி வீரன் 23



பெருஞ்சுவரின் அருஞ்சாதனை 25





விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

★

# உதயன்

சுடர் 27
கதிர் 52

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 03 செவ்வாய்க்கிழமை (17/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


# பேச்சு காத்திரமாக நகர இந்தியா இலங்கைக்கு அழுத்தம் தரட்டும்

## கிருஷ்ணாவிடம் கூட்டமைப்பு நேற்று வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 17

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியாதான் காரணகர்த்தாவாக இருந்தது. ஆகவே பேச்சு சரியான தடத்தில் போக வேண்டுமாயின் இந்தியா தனதுகாத்திரமானபங்களிப்பை வழங்க வேண்டும். இலங்கை அரசு உணரக்கூடிய வகையில் இந்தியாவின் அழுத்தம் இருந்தால்தான் கொழும்பு ஆட்சியாளர்கள் தீர்வு ஒன்றை காண இணங்கி வருவார்கள். இல்லாவிடின் இந்தப் பேச்சால் எதுவித பயனும் இல்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு 8 மணி முதல் 8.45 வரை இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், பொன்.செல்வராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்குபற்றினர். இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக்.கே.காந்தா மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவுக்கு கூட்டமைப்பு தெரிவித்தவை வருமாறு:

எமக்கும் அரசுக்கும் இடையில் ஒரு வருட காலமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை ஒரு அங்குலமும் நகரவில்லை. இலங்கை ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் இந்திய அரசுக்கு பல உறுதி

» 27



நேற்று கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சந்தித்தார்.

# புலியுடன் சேர்ந்து நாட்டை குழப்ப ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழு முயற்சி

## இடமளியேன் என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஜன.17

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்குப் பயங்கரவாதத்தைப் போதித்து மீண்டும் நாட்டில் அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக்குழு முயற்சிக்கின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிங்கள இணையதளமொன்றுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்ட முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குள் பலவந்தமாகச் சென்று அவர்களுக்கு உபதேசம் வழங்க ஜே.வி.பியின் மாற்றுக்குழு முயற்சித்துள்ளது. புலனாய்வுப் பிரிவினரின் மத்தியஸ்தத்துடன் இந்த முயற்சி தோற

» 27

# சபையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் அதிகாரம்

## வவுனியா தமிழ்ப் பிரதேச சபையின் முன்மாதிரி

வவுனியா,ஜன.17

சபைக்குத் தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி பேதமின்றிக் கடமைகளையும் பொறுப்புக்களையும் பகிர்ந்து வழங்கியுள்ளது வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபை.

இதன் மூலம் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு, உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி செயலாற்றச் கூடிய ஒரு முன் மாதிரிகையான நடவடிக்கையை பிரதேச சபையின் தலைவர் த.சிவலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இதற்கான நிகழ்வு ஒன்று நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வசம் உள்ள சபையின்

» 27

# முகத்துவாரத்தில் மீள்குடியமர தமிழருக்கு அனுமதி மறுப்பு

## ஆயினும் அங்கு 247 சிங்களவர்

முல்லைத்தீவு, ஜன.17

முல்லைத்தீவு முகத்துவாரப் பகுதியைச் சேர்ந்த சுமார் 105 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுப் புளியமுனைக் கிராமத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், முகத்துவாரப் பகுதியில் 247 பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முகத்துவாரப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த சுமார் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் இருந்து கடந்த 1983 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டனர்.

29 ஆண்டுகளுக்குப் பின்

» 27

# வடமராட்சிக் கடலில் திடீரென தோன்றி மறைந்த தீப்பிளம்பு

யாழ்ப்பாணம், ஜன.17

பருத்தித்துறை இன்பருட்டிக் கடலில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் பெரிய தீப்பிளம்பு ஒன்று தென்பட்டதுடன் கடும் புகையும் மேலெழுந்தது. இந்தக் காட்சியைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் என்ன நடக்கின்றது என்பதை புரிந்துகொள்ள முடியாதவர்களாக சிறிதுநேரம் திகைத்துப்போனார்கள்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

» 27

### யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் லலித், குகன் ஆகியோரை உடனடியாக விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தி, இன்று காலை 10 மணிக்கு யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது. மக்கள் போராட்ட இயக்கம், காணாமற்போனோரைத் தேடியறியும் குழு உட்பட 10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. (த)

### இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

போதைப் பொருள் கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த வருடம் நவம்பர் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஐவரையும் இம்மாதம் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார். (ந)

### விசாரணை ஜனாதிபதியை பொறுத்தது

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறு குளறுபடிகள் தொடர்பாக விசாரணை நடத்திய ஐவர் கொண்ட குழு, சில குளறுபடிகளுக்கு பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பெனக் கூறியுள்ளபோதும் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்ததாகும் என அக்குழுவின் செயலாளர் தாரா விஜேதிலக்க கூறியுள்ளார். இக்குழுவை ஜனாதிபதி நியமித்த நிலையில், அவரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த நடவடிக்கை மேற்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்ததாகும் என அவர் கூறினார்.

### விகாரைக்கு நிதி சேகரித்தவருக்கு சிறை

தென்னிலங்கையில் உள்ள பௌத்த விகாரையின் புனரமைப்புக்கென தென்மராட்சிப் பகுதியில் நிதி சேகரித்த ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட, குறித்த வழக்கில் சந்தேக நபர்களான இருவர் பிணையில் விடப்பட்டிருந்தனர். எனினும் இவர்கள் இருவரும் நீண்ட நாள்களாக நீதிமன்றுக்கு வருகை தராமல் தலைமறைவாகி விட்டனர். இவர்களில் சரத் பிரேமஸ்ரீ என்பவரை கடந்த வாரம் கைது செய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான் எதிரிக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து 1500 ரூபா அபராதமும் விதித்தார்.

(ந-207)


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்னும் 3 நாட்களில்

கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதிவிசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2011 HYBRID கார் (வெள்ளை நிறம்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777289283 0778096873

(13167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக் குழு கூட்டத்தில் நேற்று அரசியல் கட்சிகள் உக்கிர சொற்சமர்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று அரசியல் கட்சிகளின் சண்டைக் களமானது.

யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் கூட்டம் நீண்ட காலங்களின் பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் இடம் பெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள், யாழ்.மாவட்டப் பிரதேச செயலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வருகை தராத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கும் போதே கட்சிச் சண்டை மூண்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இது அவசரமாகக் கூட்டப்பட்ட கூட்டம். வழமையாக அவகாசம் கொடுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் வருவதில்லை என்றார். அதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "எல்லோரும் வரவேண்டும் என்று இல்லை" எனத் தெரிவித்தார். அத்துடன் "நான் கூட்டமைப்பு சார்பாக வந்திருக்கின்றேன் தானே" என்றார்.

அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "நீங்கள் வந்தால் சரி. இருப்பினும் சகலரையும் பிரதிநிதித்துவப்படுத்தி நீங்கள் வந்திருப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உங்களுக்குள் பல கட்சிகள் இருக்கின்றன" என்று சிறீதரனைப் பார்த்துச் சொன்னார்.

உடனடியாக சிறீதரன், "அது வேறு விடயம். கட்சிகளைப் பற்றிக் கதைக்க வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றி மட்டும் கதையுங்கள்" என்றார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "அதைப் பற்றித்தான் நான் கூறுகின்றேன்" என்றார்.

**"கட்சிகளைப் பற்றிக் கதைக்க வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றி மட்டும் கதையுங்கள்"**

"உங்களுக்குள்ளேயும் பல வேறுபாடுகள் இருக்கிறது" என்றார் சிறீதரன். உடனேயே அமைச்சர் தேவானந்தா "நீங்கள் மட்டும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிரதிநிதிப்படுத்த முடியாது தானே" என்றார்.

அதற்குப் பதிலளித்த சிறீதரன் "நான் அவ்வாறு கூறவில்லை. கிருஷ்ணாவுடன் சந்திப்பை நடத்த எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று விட்டார்கள்" என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் "பின்னர் உங்களைக் கூட்டங்களுக்கு அழைக்கவில்லை என்று பத்திரிகைகளுக்கு சொல்லக் கூடாது" என்றார்.

உடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் "நாங்கள் அப்படியொன்றும் சொல்வதில்லை. நீங்கள் எல்லோரும் கதைப்பதைப் பார்க்கும்போது என்னை விசாரணை செய்கின்ற மாதிரி இருக்கின்றது. அப்படியானால் நான் இந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறுகின்றேன். எல்லோரும் திரும்பி வந்தபின் வருகிறேன்" என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மீண்டும் குறுக்கிட்டார். அதற்கு சிறிதரன் "நீங்கள் பேசாமல் இருங்கள். நான் தலைவருக்குப் பதில் சொல்கின்றேன். நீங்கள் இதில் தலையிட வேண்டாம்" என்றார்.

"பேசுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது" என்றார் சந்திரகுமார். "நான் தலைவருக்குப் பதில் சொல்கின்றேன். நீங்கள் குறுக்கீடு செய்ய வேண்டாம்" என்று கடுந்தொனியில் தெரிவித்தார் சிறீதரன் எம்.பி.

**அரசைக் காப்பாற்றப் போராடிய அமைச்சரும் ஆளுநரும்**

இந்திய வீட்டுத் திட்டம் தாமதமடைவது தொடர்பில் இலங்கை அரசே காரணம் என்று பல தவறான அபிப்பிராயங்கள் இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய வீடமைப்புத் திட்டம் தாமதமடைவதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார்.

இதில் இந்திய ஒப்பந்தகாரர்களால் இந்திய வீட்டுத் திட்டம் தாமதமடைவதாக பிரதேச செயலர்கள் தெரிவித்ததும், ஆளுநர் இந்திய வீடமைப்புத் திட்டம் தாமதமடைவதற்கு இலங்கை அரசு காரணமில்லை என்று தெரிவித்தார். (ந-15)

## படையினருக்கு காணியை வழங்க முடியாது

கிளிநொச்சியில் 155 ஆம் கட்டையில் படையினர் சுவீகரிப்பதற்குக் கோரிய காணியை வழங்க முடியாது என்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதன்போது கிளிநொச்சியில் 155 ஆம் கட்டைப் பகுதியில் இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் 7 ஏக்கர் காணியைப் படைத்தரப்பு தமக்கு வழங்குமாறு கேட்டிருந்தமை தொடர்பாகக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திர குமார் மற்றும் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீ தரன் ஆகியோர் படையினருக்கு இந்தக் காணியை வழங்க முடியாதெனத் தெரி வித்தனர். இதையடுத்து காணியை வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

(த-15)

## சைக்கிள்களைக் கவரும் கட்சியின் மோசடிக்கு இராணுவமும் உடந்தை

யாழ்ப்பாணம், ஜன.17

இந்திய சைக்கிள்களைக் கவரும் அரசியல் கட்சியின் மோசடிக்கு இராணுவத்தினரும் உடந்தையா? என்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும்முணுமுணுத்துக் கொண்டனர்.

இந்திய அரசினால் யாழ். மாவட்டத்துக்கு வழங்கப் படவுள்ள 1,500 சைக்கிள்களின் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதில் மோசடி இடம்பெற்றிருந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி ஆதரவாளர்களின் பெயர்களை உள்ளடக்கியே பயனாளிகளின் பெயர்ப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

இந்தமுறைகேடுகள் தொடர்பாகக் கிடைத்த தகவலை அடுத்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் அதனை மீளாய்வு செய்து முறைகேடுகள் நடந்ததை உறுதிப்படுத்தியது.

இந்தப்பெயர்ப்பட்டியல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியின் பிரதேசக் கிளைகளால் தயாரிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களே.இவை சமூகசேவைகள் அலுவர்கள் மூலமாக பிரதேச செயலர்களிடம சமர்ப்பிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

மாவட்ட அபிவிருத்திக்

### மக்கள் விசனம்

குழுக் கூட்டத்தில் வைத்து, பயனாளிகள் தெரிவில் பிரதேச இராணுவத் தளபதி கட்டாயம் கையொப்பம் இட வேண்டும் எனக் கூறப்பட்டது. எனவே டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்கள் தயாரித்த பெயர்ப் பட்டியலிலும் இராணுவத்தினர் கையொப்பம் இட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக் கப்படுகிறது.

இதன்மூலம் இராணுவமும் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவின் கட்சியினர் செய்யும் மோசடிக்கு உடந்தையாக இருக்கிறதா எனப் பலரும் கேட்டுக் கொண்டனர். (ந-15)

## இந்திய அரசின் சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள்

யாழ்ப்பாணம், ஜன.17

இந்திய அரசினால் நாளை வழங்கப்படவுள்ள சைக்கிள்களுக்கான பயனாளிகள் பெயர் விவரம் வருமாறு:

**நல்லூர்**

மதியாபரணம் மனோஜினி (ஜே/89), எட்லேலியஸ் மேரி எமல்டா (ஜே/89), ஜேசுதாசன் ஜேன்சன் (ஜே/89), கொன்ஸ்ரெய்ன் ஜீவஜோதி (ஜே/89), சந்திரகுமார் ஜீவசுதன் (ஜே/89), கனிமிலா (ஜே/89), அருள்ராஜ் கனிஸ்ரன் (ஜே/89), ஜோன் டானியல் (ஜே/89), றெஜி ஜக்ஸன் ருபின்டிக்சோபன் (ஜே/89), அருள்ராஜ்அனுஸ்ராஜ்(ஜே/89).

**ஊர்காவற்றுறை**

மயில்வாகனம் சர்மிளா (ஜே/54), நடேஸ்வரன் சோதிவரன் (ஜே/50), கௌரி கிறிஸ்தோத்திரம் (ஜே/49), உதயகுமார் உதயசீலி (ஜே/50), கனகரட்ணம் விக்னேஸ்வரன் (ஜே/51), செல்வநாயகம் சுரேகா (ஜே/52), பெனடிக் பிரேம்குமார் (ஜே/57), அருளப்பு ரம்ஸி (ஜே/57), மரியகலியுகன் பிரணா (ஜே/60),சூசைப்பிள்ளை நிறோஜன் (ஜே/60).

**மருதங்கேணி**

முருகேசு ஜீவனேஸ்வரி (ஜே/428), சந்திரசேகரம் சந்தியா (ஜே/428), ஈஸ்வரபாதம் ஜெசிந்தாதேவி (ஜே/428), பூபாலசிங்கம் விஜயகுமாரி (ஜே/428), சின்னையா தனபாலசிங்கம் (ஜே/ 428), சங்கரப்பிள்ளை குலசேகரம் (ஜே/428), சண்முகையா விஜிதரன் (ஜே/430), பாலச்சந்திரன் ரஜினி (ஜே/430), சிங்கராசா அன்ரன் மரியதாஸ் (ஜே/433), அற்புதமாலா (ஜே/433).

**சாவகச்சேரி**

முகுந்தன் தர்ஸ்ஸனா (ஜே/299), பிரபாகரன் நிதர்ஸன் (ஜே/299), ரவிச்சந்திரன் கஜந்தினி (ஜே/299), பிரகாஷ் இந்துஜா (ஜே/299), சிவபாலன் தர்ஷாயினி (ஜே/299), ராஜலிங்கம் விமலன் (ஜே/299), மகேந்திரன் மதுசாலினி (ஜே/299), அதிபாராயணம் ஜிந்துயா (ஜே/299), குலேந்திரன் இந்துஜா (ஜே/299), பொன்சேகரா தனோஜன் (ஜே/299).

**தெல்லிப்பழை**

கணேசன் மதுசன் (ஜே/222), பாலசுப்பிரமணியம் துஷ்யந்தன் (ஜே/222), சிவராசா தீபிகா (ஜே/222), சண்முகரத்தினம் லக்ஷிகா (ஜே/222), அருகுலராசா பொபினா (ஜே/222), ஜெயந்தன் நகுலேஸ்வரி (ஜே/222), விக்னேஸ்வரன் பிரியங்கா (ஜே/222), தேவராசா றொசாந்தன் (ஜே/222), சின்னத்துரை சிலாஜினி (ஜே/222), மகேந்திரன் நிரஞ்ஜனா (ஜே/222).(ந-15)

## யாழ்ப்பாணத்தில் அரச அதிபரை விடவும் படையினருக்கு அதிகாரம் அதிகமா?

### சிறீதரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஜன.17

அபிவிருத்தித் திட்டங்களுக்கான பயனாளிகளின் தெரிவில் இராணுவத்தினர் சிபார்சுக் கையொப்பம் இடவேண்டும் என்றால் வடக்கில் இராணுவ நிர்வாகம் நடக்கின்றது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்கள் தானே? அத்துடன் இராணுவம் கையொப்பம் இட வேண்டும் என்றால் அரச அதிபரை விட இராணுவத்தினருக்கத்தான் அதிகமான அதிகாரமா ? இவ்வாறு நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

இந்திய அரசால் வழங்கப் படவுள்ள சைக்கிள்களுக்கான பயனாளிகளின் பெயர்ப்பட்டியலில் பிரதேச இராணுவத் தளபதியின் கையொப்பம் இடப்பட்டு அங்கீகரிக்க வேண்டும் என்று தெரிவிக் கப்பட் டதை, தொடர்ந்தே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இவ்வாறு கூறினார்.

அரச அதிபரை விட இராணுவத்துக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா? மற்றும் போர் முடிவடைந்து 3 வருடங்கள் முடிவடையும் தருவாயில் சிவில் நடவடிக்கைகளில் இன்றும் ஏன் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த யாழ். மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதியும் வடமாகாண ஆளுநருமான ஜீ.ஏ.சந்திரசிறி சிவில் நடவடிக்கையில் இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் தேசிய பாதுகாப்பை முன்னிட்டே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

அதற்கு சிறீதரன் அப்படியானால் வடக்கில் இராணுவ நிர்வாகம் நடக்கின்றது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள் தானே. தீர்மானிக்கும் சக்தியாக இங்கு இராணுவத்தினர் இருக்கின்றனர். தமிழருக்கும் மட்டும் ஏன் இவ்வாறான நடைமுறைகள்? - என்றார்

இதன் பின்னர் டக்களஸ் தேவானந்தா பேசுகையில்,

சில அவசியக் காரணங்களுக்கு இராணுத்தினரின் தலையீடு இல்லாமல் முடிவெடுப்பது தவிர்க்கமுடியாது. அத்துடன் ஜனாதிபதியின் செயலணியின் நடைமுறையில் பிரதேச இராணுவத் தளபதியிடம் கையொப்பம் வாங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது - என்றார். (ந-15)

## வல்வைப் பட்டப் போட்டியில் வாகை சூடியது 'ட்ராகன்'

வல்வெட்டித்துறை, ஜன. 17

வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகம், தைப்பொங்கல் தினத்தையொட்டி நடத்திய வினோதப் பட்டங்கள் போட்டியில் சாம் ஜெயவேல் என்ற இளைஞர் கட்டிய 'ட்ராகன்' பட்டம் வென்றது. காத்தாடி விட்ட அந்த இளைஞருக்கு முதல் பரிசாக மின்சாரக் காற்றாடியை உதயசூரியன் கழக முன்னாள் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட வீரர் கே.தேவசிகாமணி வழங்கினார். இரண்டாம் பரிசைப் பெற்ற ம.நாராணயணசாமிக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழக தலைவர் சு.கெங்காதரனும் மூன்றாம் பரிசைப் பெற்ற வெ.ரகுவுக்கு வல்வெட்டித்துறை கடற்றொழில் சங்கத் தலைவர் ஜே.ஜெனார்த்தனும் வழங்கினர்.

வல்லை உல்லாசக் கடற்கரையில் மாலை 4.30 மணியளவில் போட்டி ஆரம்பமானது. 17 பட்டங்கள் போட்டியில் கலந்துகொண்டன. 'இரட்டைப் பெட்டிக் கொடி', 'மணிக்கூடு', 'கப்பல்', 'பஞ்ச வர்ண ரொக்கெட்', 'சுழலும் பெட்டிப் பட்டம்', 'பிளேன்', '64 அடி நீள வால் நட்சத்திரம்', 'குடும்பிடுபூச்சி', 'பராந்து', 'பொங்கல் பானை', 'கப்பல்', 'புறா', 'ஆள் பட்டம்', 'பாம்பு', ஆகிய பெயர்களில் பட்டங்கள் போட்டியிட்டன.



1942ஆம் ஆண்டில் கப்பலில் பணியாற்றியவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவருமான து.நவரத்தினம் என்பவர் தனது 82 வயதிலும் ஆர்வத்துடன் போட்டியில் கலந்துகொண்டு கப்பல் பட்டம் ஒன்றைக் கட்டியிருந்தார். அதற்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நல்லிணக்கத்துக்கு வழி எத்திசையில்?

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு இசைவாகப் பொறுப்புக் கூற வேண்டிய விடயங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கக் கூடிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேசத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகத் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே கூட்டமைப்பு சர்வதேசத்தின் உதவியைப் பகிரங்கமாகக் கோரியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 19 மாதங்களின் பின்னரே அதன் அறிக்கை நாடாளுமன்றில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை ஒரு மாத காலமாக ஊன்றிப் படித்து, ஆழ்ந்து ஆராய்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கருத்தை நேற்றுமுன்தினம் - தைப்பொங்கல் நாளில் - வெளியிட்டுள்ளனர்.

தனது நூற்றைந்து பக்க அறிக்கையில், தமிழ் மக்கள் சம்பந்தமான, அவர்களுக்கு வழங்க வேண்டிய நீதியும் நியாயமும் அளாவிய 28 விடயங்கள், விவகாரங்களில் ஆணைக்குழு விட்ட பெரும் தவறுகளைத் துலாம்பரமாகவும் ஆணித்தரமாகவும் சுட்டிக் காட்டியுள்ளது கூட்டமைப்பு.

எனினும், வடக்கில் இராணுவத்தினரின் தலையீட்டை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு, அனைத்து சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இருந்தும் இராணுவத்தினர் விலகிக் கொள்ள வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதைக் கூட்டமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

ஆயினும்-

நல்லிணக்க ஆணைக்குழுவின் குறிப்பிட்ட பரிந்துரை எதிர்வரும் மாதங்களில் எவ்வாறு நடைமுறைக்கு வருகிறது என்பதை மிக நுணுக்கமாகக் கண்காணிக்கப் போவதாகவும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவினர் தமது அறிக்கையில், தமிழ் மக்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள், அவர்கள் அனுபவித்த துன்பங்கள், உறவுகளின் உயிரிழப்புக்கள் சேதமாக்கப்பட்ட உடைமைகள் மற்றும் பல்வகை நட்டங்கள் குறித்து வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்டனர் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. கூட்டமைப்பினர் அவற்றையும் தமது அறிக்கையில் பொருத்தமான முறையில் எடுத்தியம்பி உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது அறிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்களையும் இறுக்கமாகத் தொட்டுக் காட்டி உள்ளனர்:

★ ஆணைக்குழுவின் படிமுறைகளும் நடைமுறைகளும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவில்லை. ★ சர்வதேச நியமங்களைப் பின்பற்றியதாக அமையவில்லை. ★ பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளிடமோ, பரந்துபட்ட தமிழ்ச் சமூகத்திடமோ உரிய வகையில் கலந்தாலோசிக்கப்படவில்லை. ★ பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ★ விசாரணைகளுக்காக வடக்கு, கிழக்கில் குறைந்த அளவான நாள்களை (22 நாள்கள்) ஆணைக்குழு செலவிட்டது. ★ சாட்சிகளின் பாதுகாப்புத் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டம் எதனையும் ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை. ★ மனித குலத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை உள்ளடக்கியதான சர்வதேச மனித நேயச் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. ★ தனக்கு வழங்கப்பட்ட உண்மையான தகவல்களுக்கேற்பச் சட்டத்தைப் பிரயோகிக்கத் தவறியுள்ளது. ★ முன்னாள் யூகோஸ்லாவிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவியலைப் பின்பற்ற முயற்சியெதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ★ பால்நிலை சார்ந்த பிரச்சினைகளைக் கையாள்வதில் கொண்டிருந்த குறைபாடுகளை மீளாய்வு செய்யத் தவறியுள்ளது.

நல்லிணக்கத்தைக் குழிக்குள் போட்டு மூடிவிடும் அளவுக்கு வன்னிப் போரில் பொதுமக்களுக்கு உண்டாக்கப்பட்ட உயிரிழப்புகளுக்கும்-

மனிதாபிமான, மனிதநேய, மனித உரிமை மீறல்களுக்கும் - அரசு வகை சொல்வதற்கு - பொறுப்புக் கூறுவதற்கான எந்தவகைச் சிபார்சும் அறிக்கையில் இல்லை என்பதனை இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக் காட்டி இருந்தோம்.

உள்ளதைச் சொல்லப்புகின், இறுதிப் போரின்போது பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் உயிரிழக்கக் காரணமாக இருந்த படைகளுக்கு எதிராக, மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் சர்வதேச மட்டத்தில் பூதாகரமாகக் கிளம்பியதை-

தறித்துத் தணிக்கவே, கல்லில் அடிபட்ட பந்துபோல் தெறித்துச் சிதறிவிடும் உள்ளார்ந்த நோக்குடனேயே, நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது - என்பதனை அனைத்துலகமும் நன்கு அறியும். ஆகையால் அதனைச் சர்வதேசப் பரகசியம் என்று கூறுவது மிகையன்று.

அந்தப் பரகசியத்தை மறைத்துவிடும் இலக்குடனேயே, நோக்குடனேயே நல்லிணக்க ஆணைக்குழுவை இந்நாட்டு அரசு உருவாக்கியது - நியமித்தது என்பதும் உலகறிந்த யாதார்த்த நிலை.

ஆனால், அவை எதிர்பார்த்த சிறு துணிக்கையேனும் ஆணைக்குழுவின் அறிக்கையில் இல்லை என்பதை பிரிட்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உட்பட்ட பல மதிப்புள்ள நாடுகள், மக்களின் மனித உரிமைகள் உட்பட ஜனநாயக உரிமைகளைக் காப்பதில் அக்கறை உள்ள நாடுகள், மற்றும் சர்வதேச அமைப்புகள் ஏற்கனவே அறுத்து உறுத்துக் கூறிவிட்டன.

அவற்றுக்குத் தக்கபதில் அளிக்கத் தாம் தயாராக இருப்பதாக மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரான அமைச்சர் மஹிந்த சமரசிங்கா உட்பட்ட அரச பிரதானிகள் கெம்பிக் கொண்டிருக்கும்போது, கூட்டமைப்பின் அதிருப்தி நிலையை அரசு கவனத்தில் கொள்ளுமா, என்ன? கல்லில் நார் உரிக்கும் முயற்சி அன்றி இது வேறில்லை. இவ்விடயத்தில் அரசாங்கத்தைச் சிந்திக்கத் தூண்டும் வல்லமையும் அதற்கு இல்லை. நல்லிணக்கத்துக்கான முழு அளவிலான வழி எப்போது? எத்திசையில்?

# இரு பரீட்சைகள் ஒரே தினத்தில் பரீட்சார்த்திகள் குழப்பத்தில்

## ஒன்றைப் பிற்போடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.17

இரு பரீட்சைகள் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளமையால், இரண்டுக்கும் விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் எந்தப் பரீட்சையை எழுதுவது என்ற திரிசங்கு நிலையில் உள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப்புகள் கவனமெடுத்து ஏதாவது ஒரு பரீட்சையை பிற்போட்டு அதனை வேறு ஒரு தினத்தில் நடத்த மாட்டார்களா எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

கல்வி டிப்ளோமா முழு நேரக் கற்கைநெறிக்கான பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. அதே நேரத்தில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பெரும் எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளனர். ஆயினும் இரண்டு பரீட்சைகளும் ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

இதனால் எந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது என்று தெரியாது பரீட்சார்த்திகள் குழப்பமான நிலையில் உள்ளனர்.

இரண்டு பரீட்சைகளில் ஒன்றை வேறு ஒரு தினத்துக்குப் பிற்போடுமாறும் அவர்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-288)

# கிராமிய வீதிகள் வெள்ளம் மூடிய நிலையில்

**உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் நீர் சூழ்ந்துள்ளதால் பரவைக் கடல் சார்ந்த இப் பிரதேசங்களில் மார்ச் மாதம் வரையில் போக்கு வரத்துச் செய்யமுடி யாத நிலை உள்ளது.**

நாவற்குழி,ஜன.17

கைதடி வடக்கிலிருந்து நீர்வேலி வடக்கு, மட்டுவில் வடக்கு செல்லும் கிராமிய வீதிகள் வெள்ள நீரால் சூழப்பட்டுப் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளன.

கைதடி வடக்கு - நீர்வேலி வடக்கு பாதை கடந்த 2006 ஆம் ஆண்டு அரச நிதியின் மூலம் மண் பாதையாக அமைக்கப்பட்டது.

மழைகாலத்தில் இப் பாதையின் 100 மீற்றர் பிரதேசம் அழி வடைந்த போதும் 2008ஆம் ஆண்டில் கைதடி மக்களால் நிதி திரட்டப்பட்டு பாலம் அமைக்கப்பட்டுப் பாதை சீர் செய்யப்பட்டது.

ஆயினும் நீர்வேலிப் பகுதியில் இரு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு நீர் சூழ்ந்துள்ளதால் பரவைக் கடல் சார்ந்த இப் பிரதேசத்தில் மார்ச் மாதம் வரையில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை உள்ளது.

கைதடி வடக்கு நவபுரத்திலிருந்து மட்டுவில் செல்லும் பாதையும் பரவைக்கடல் சார்ந்த தாழ் நிலப் பகுதியாதலால் மார்ச் மாதம் வரை போக்குவரத்துச் செய்ய முடியாது.

இந்த வீதிகளைச் சீர் செய்து தருமாறு நீண்ட காலமாகவே பொது மக்கள் கோரி வருவது குறிப்பிடத்தக்கது. (த-121)

# மின்சார சபைப் பணியாளர்கள் நாளை முதல் சட்டப்படி வேலை

நாவற்குழி,ஜன.17

அரசு முன்வைத்துள்ள 18 வீத சம்பள அதிகரிப்பை எவ்விதத்திலும் ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்தும் 45 வீத சம்பள அதிகரிப்புக் கோரியும் ஒருங்கிணைந்த தொழிற் சங்க நடவடிக்கையொன்றில் குதிக்கப்போவதாக, மின்சக்தி, கனிம எண்ணெய் மற்றும் நீர் வழங்கல் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 45 வீத சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோரி நாடு முழுவதும் பணியாற்றும் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள், நாளை புதன்கிழமை நள்ளிரவு முதல் மேலதிக பணியில் ஈடுபடாமல் சட்டப்படி வேலை என்ற தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

நாளை கொழும்பிலுள்ள மின்சார சபையின் தலைமையகத்தின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும், தொழிற்சங்க சம்மேளத்தின் செயற்குழு உறுப்பினரான ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார். மேலும் மின்சக்தி, கனிம எண்ணெய் மற்றும் நீர் வழங்கல் ஆகிய நிறுவனங்களுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையே சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது என்பதால் 18 வீத சம்பள அதிரிப்பைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு இறங்கிச் செல்வதற்கு எவ்விதத்திலும் தயாரில்லை எனவும் அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (த-22)

# அரச கூட்டுத்தாபனங்களின் தலைமைகளில் மாற்றம்

கொழும்பு,ஜன.17

3 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களில் உள்ளவர்களுக்கு மாற்றங்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த காலத்தில் அரச நிறுவனங்கள் பலவற்றின் தலைமைப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் எஞ்சியுள்ள அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த நிறுவனங்களைப் பரிசோதனை செய்வதற்குக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.**

இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மூன்று மாதங்களுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அந்த நிறுவனங்களைப் பரிசோதனை செய்வதற்குக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் மேற்படி தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இனங்கண்டு அவற்றை மறுசீரமைப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (த-22)

## நிகழ்வுகள் இன்று

### அதிபர்களுக்கான கூட்டம்

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

***

### கலந்துரையாடல்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(த-23)

***

### சங்காபிஷேகம்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிசேக தின சங்காபிசேக விழா காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. (த-313)

***

### கொடுப்பனவு வழங்கல்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக மீளக் குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(த-319)

***

### பொங்கல் விழா

யாழ்.பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மகா சங்கத்துக்குட்பட்ட யாழ்.நகர் கிழக்கு, யாழ்.நகர் மேற்கு வங்கிச் சங்கத்தின் பொங்கல் விழா மு.பகல் 10 மணியளவில் வங்கிச் சங்க முன்றலில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்துகொள்வார். (த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உணர்வுகளை கவனத்தில் எடுத்து அரசியல் தீர்வை ஏற்படுத்த இந்தியா முயற்சிக்கும்

## கொழும்பு வருமுன் இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா பேட்டி

கொழும்பு, ஜன.17

தமிழ்பேசும் சிறுபான்மை இலங்கைத் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் நிலுவையிலுள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்பட்டு அரசியல் தீர்வொன்று பெறப்படும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

''சிறுபான்மைத் தமிழ் மக்களிற்கு இறுதித் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பாடுபடுவதென்பது இலங்கைமீது கொண்டுள்ள நலன் சார்ந்ததாகும்'' - இவ்வாறு இலங்கைக்கான தனது நான்குநாள் சுற்றுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு தனது நாட்டில் வாழும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களின் தலைமைத்துவத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டு தற்போது தீர்வு காணப்படாதுள்ள பிரச்சினைகளுக்கு இணக்கமான தீர்வொன்றை எட்டவேண்டும் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையில் தற்போது தீர்க்கப்படாது தொடரப்படும் பிரச்சினைக்கு தேசிய மீள் இணக்கப்பாட்டுடன் கூடிய முயற்சிகளை முன்னெடுத்து, இறுதியான அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதே இந்தியாவின் அணுகுமுறையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

''தமிழ் மக்களின் உணர்வுகளை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம். அத்துடன்,

**விரைவாக எட்டப்படும் சுமுகமான தீர்வானது இந்தியாவில் உள்ள தமிழர்களதும், இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள மக்களினதும் தொடர்பை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவி புரியும் என நான் கருதுகிறேன்.**

அவற்றை எமது கொள்கைகளிலும் முக்கியத்துவப் படுத்தியுள்ளோம். தற்போது இலங்கையில் தீர்க்கப்படாது எஞ்சியுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் கலந்துரையாடல்கள் ஊடாகத் தீர்க்கப்படுவதுடன், இரு தரப்புகளும் இதில் திருப்தியடையக் கூடியவிதமாகத் தீர்வு எட்டப்பட வேண்டும்" - எனவும் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையாக இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், இலங்கை வெளிவிவகார அமைச்சரான ஜி.எல். பீரிஸுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள், தத்தம் கடல் எல்லைகளிற்கு அப்பால் தவறுதலாகச் சென்றபோது கைது செய்யப்பட்ட இருநாட்டு மீனவர்களையும் அவரவர் நாடுகளிற்கு விடுவித்தல், மீன்பிடித் துறையை கூட்டாக இணைத்து அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தில் சமரசங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளன - என்றார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக கிருஷ்ணா முதன்முதலில் நவம்பர் 2010 இல் இலங்கைக்கு பயணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் கூறுகையில், "விரைவாக எட்டப்படும் சுமுகமான தீர்வானது இந்தியாவில் உள்ள தமிழர்களதும், இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள மக்களினதும் தொடர்பை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவி புரியும் என நான் கருதுகிறேன். இவ்விரு நாடுகளிற்கும் இடையிலான குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களிற்கும் இலங்கைத் தமிழர்களிற்கும் இடையிலான வர்த்தகம், போக்குவரத்து ஆகிய செயற்பாடுகள் மேலும் முன்னேற்றமடைந்தால், அது வெற்றிக்கான சூழலாக இருக்கும்" - என கிருஷ்ணா சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு இந்திய நிதி உதவியுடன் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது தொடர்பான திட்டத்தின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் தமிழ் மக்களிற்காகக் கட்டப்பட்டு யாழ்ப்பாணத்தில் கையளிக்கப்படவுள்ள முதலாவது தொகுதி வீடுகள் தொடர்பாகவும் கிருஷ்ணா இலங்கைக்கான தனது சுற்றுப் பயணத்தின்



போது மீளாய்வு செய்யவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்திய தவணைக் கடன் அடிப்படையில் கட்டப்படவுள்ள தெற்கு ரயில்வே பாதைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவும் அவர் காலி செல்லவுள்ளார்.

மேலும் கிருஷ்ணா குறிப்பிடுகையில்,

''நாங்கள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிற்கான சமூக-பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதியுதவிகளை வழங்கிவருகின்ற போதிலும், உள்நாட்டுப் பிரச்சினையின்போது தெற்கு ரயில்வேப் பாதை சேதமடைந்துள்ளது. தற்போது இயல்புநிலை மீளத் திரும்பியுள்ளது. இதுவரையில் காலந் தாழ்த்தப்பட்டு அல்லது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் இதன் பின்னர் துரிதமாக முன் னெடுத்துச் செல்லப்படும்'' - எனவும் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான இந்தியாவின் அரசியல் உறவானது பொருளாதார சூழலிலேயே நிச்சயமாகத் தங்கியுள்ளதால், இத்தீவுடன் மேலும் பொருளாதாரத் தொடர்புகளை நெருக்கமாகப் பேணுவதற்கான அழுத்தங்களைத் தான் தொடர்ந்தும் வழங்கப் போவதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வீடமைப்பு, ரயில்வே பாதைகள் அமைத்தல் மற்றும் விவசாய, தொலைத் தொடர்பாடல் அபிவிருத்திகளுடன் தொடர்புபட்ட நான்கு உடன்படிக்கை களில் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் கிருஷ் ணாவின் பயணத்தின் போது கைச்சாத்திட வுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கான தனது வருகையின் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களைப் பார்வை யிட வுள்ளதுடன், கொழும்பிற்கு அருகில் அமைக்கப் பட்டுள்ள இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவிடத்திற்கும் செல்லவுள்ளார்.

(ஙு-சி)

## தீர்வின் போது முஸ்லிம்களுக்கும் முக்கியபங்கு

### கிருஷ்ணா தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்களுக்கான தீர்வும் முக்கிய இடம் வகிக்கவேண்டும் என இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் நேற்று இரவு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத், நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி, கல்முனை பிரதி மேயர் நிசாம் காரியப்பர் மற்றும் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

சகல இனங்களையும் பாதிக்காத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் இதன்போது வலியுறுத்தியது.

அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் எஸ்.எம். கிருஷ்ணாவிடம் வலியுறுத்தியது.

இலங்கை அரசு தனது எல்லைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என இந்திய அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்ததாக நிசாம் காரியப்பர் கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை அரசதரப்பினருடன் இடம்பெறவுள்ள சந்திப்பின்போது வலியுறுவதாக கிருஷ்ணா உறுதியளித்துள்ளார்.

# 21 வருடங்களின் பின்னர் சொந்த வீடுகளில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஜன.17

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயச் சுற்றாடலில் குடியிருந்த மக்கள் மீண்டும் இருபத்தொரு வருடங்களின் பின்னர் , நேற்று திங்கட்கிழமை தமது வீடுகளில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர். நாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழலை அடுத்து இந்தப் பகுதி உயர் பாதுகாப்புவலயமாக்கப்பட்டு கடற்படையினர் அங்கு முகாமிட்டிருந்தனர். தற்போது அங்கிருந்த கடற்படையினர் தம்வசமிருந்த மக்களின் வீடுகளை அவர்களிடமே மீளக் கையளித்துள்ளனர். இந்த நிகழ்வு வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது மக்களின் வீடுகள் அனைத்தும் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டன. குடியிருப்பாளர்கள் பிரதேச செயலர் மூலமாகத் தமது வீடுகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.



சொந்த வீட்டில் மீண்டும் இவர்களின் பாதங்கள்

இதன் பின்னர் பிரதேச செயலர் குறித்த பகுதியில் உள்ள விடுவிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டார். அதன் பின்னர் உரிமையாளர்கள் தத்தமது வீடுகளைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை அவர் உடனடியாக மேற்கொண்டதை அடுத்துவீடுகளின் உரிமையாளர்கள் 62 பேர் தமது வீடுகளைச் சென்றுபார்வையிட்டனர். இவர்களின் அநேகர் தாங்கள் உடனடியாகவே குடியேறவுள்ளதாகத் தெரிவித்தனர்.

மண்டைதீவு கடற்படை பொறுப்பதிகாரி [illegible] யாராச்சி ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிகாரி எச். வை. பிரசன்ன, பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி , வேலணை பிரதேச சபைத் தலைவர் சி. சிவராசா, பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மீள்குடியமர்வுக்குரிய அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், மலசலகூடம், மின்சாரம், போக்குவரத்து, சுகாதாரம் போன்றவற்றை ஏற்படுத்தித் தரும்படியும், மருத்துவமனையை உடன் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வீடுகளில் உள்ள கிணறுகளை உடனடியாகத் துப்புரவு செய்துதருவதாக கடற்படையினர் குறிப்பிட்டனர். போக்குவரத்து குடிதண்ணீர் சேவைகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-7)

# மக்களின் காணிகள் மீது கண் வைக்கும் இராணுவம்

கிளிநொச்சி, ஜன.17

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உள்ள பொது மக்களின் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு வருவதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலை தொடர்ந்தால் தமது நிலை என்னவாகும் என்ற அச்சத்தில் இங்குள்ள மக்கள் உள்ளனர்.

பிரதேச செயலகங்களுக்குச் செல்லும் இராணுவ உயர் அதிகாரிகள் பொது மக்கள் இன்னும் மீளக் குடியமராத காணிகள் பற்றிய விவரங்களையும் அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் பற்றிய விவரங்களையும் திரட்டி வருகின்றனர்.

அத்துடன் குறிப்பிட்ட காணிகளைத் தமக்கு வழங்குமாறும் வற்புறுத்தி வருகின்றனர். இதேவேளை துணுக் காய் உதவி அரச அதிபர் பிரிவில் மருதங்குளம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுத் தோட்டச்செய்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

**துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் மருதங்குளம் பகுதியில் தனியாருக்குச்சொந்தமான 3 ஏக்கர் காணி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.**

இதேபோல் தேறாங்கண்டல் பகுதியில் தனியாரின் காணிகள் பல இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் விவசாய நடவடிக்கையின் மூலமே தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முனைந்து வருகின்றார்கள். இவ்வாறான நிலையில் அவர் களுக்கென எஞ்சியிருக்கும் காணிகளையும் இராணுவத் தினர் அபகரித்து தமது தேவைக ளுக்காக பயன் படுத்துவதால் மக்களின் வாழ்வு இன்னமும் மோசமான நிலைக்கே செல்லக் கூடும் என்று தெரிவிக் கப் படுகின்றது. (க-319-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளிலேயே வாழ்ந்துவிட தயாராகி விட்டனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.17

நயினாதீவுக்கான இலங்கை மின்சார சபையின் சேவைகள் பெயரளவிலேயே இடம் பெறுகின்றன.

ஒழுங்கற்ற நிலையில் மிக மந்தமாக இடம்பெறும் இந்தச் சேவையை முற்று முழுதாக நிறுத்தி விடட்டும். நாம் இருளிலேயே வாழ்ந்து காட்டுகின்றோம்.

இவ்வாறு நயினாதீவு பிரதேச வர்த்தக உரிமையாளர்கள் சங்கக் கூட்டத்தில் வர்த்தகர்கள் மின்சார சபை மீது சீறிப் பாய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை மின்சார சபையின் மூன்று பெரிய மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் இப்போது உள்ளன. அவற்றை முறையாகப் பராமரிப்பதற்கான அனுபவமுள்ள, பொறிமுறை தெரிந்த அலுவலர்கள் நியமிக்கப்படுவதில்லை.

நயினாதீவுக்கான மின்சார சபையின் சேவையை முற்றாகத் துண்டித்து விடுங்கள். பெயரளவிலேயே அவர்கள் சேவை உள்ளது என வர்த்தகர்கள் சீற்றம்.

மின்சார இயந்திரங்கள் இயங்கு நிலைக்கு வந்தாலும் மின் இணைப்பு வழங்குவதற்கான ஆழி இணைப்பு வழங்கப்படுவதில்லை.

நயினாதீவு ஆலய தர்ம கர்த்தாக்களும் நயினாதீவு பிரதேச சபை உப அலுவலகத்தினரும் மின்தடை தொடர்பாக எடுத்துக் கூறிய போதும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் பெரிய இயந்திரங்களை இயக்குவதற்குப் பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறும் கோரியிருந்தோம்.

ஆனால் இதுவரையில் எமது கோரிக்கைக்குப் பயன் கிடைக்கவில்லை. இவ்வாறான ஒழுங்கற்ற மின்சாரம் எமக்குத் தேவையில்லை என்று வர்த்தகர்கள் அனைவரும் திரண்டு ஆக்ரோஷமாகத் தெரிவித்தனர்.

இதற்குப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா பதிலளிக்கையில், யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் நடைபெற்ற இரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயங்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இவற்றுக்கான தீர்வு கிடைக்கும்.- என்றார். (ம)

# கைவிரல் அடையாளமிட தனிப் பிரிவு விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.17

ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் கைவிரல் அடையாளம் இடுவதற்கெனத் தனியான பிரிவு ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் அமையவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கொழும்பில் இருந்து வருகை தந்த தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக வடமாகாணத்தில் சேமலாப நிதியை பெறுவோருக்கான கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படம் என்பன எடுக்கப்பட்டன.

தற்போது வடமாகாணத்தில் உள்ள உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகங்களில் இந்தக் கைவிரல் அடையாளம் எடுக்கும் பிரிவு ஒன்றைத் தனியாக ஆரம்பித்துச் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இந்தப் பிரிவை எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பித்து வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படம் பிடிப்பு என்பன ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவோருக்கு முக்கிய தேவையாகவுள்ளது.

இதற்கென யாழ்ப்பாணத்தில் இந்தப் பிரிவுகளைத் தனியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த ஊழியர் சேமலாப நிதிக்கு விண்ணப்பித்தோரில் பெரும் எண்ணிக்கையானோர் இந்தக் கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படப் பிடிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது இவற்றை மேற்கொள்ளத் தவறியோர் இங்கு அமையவுள்ள பிரிவு மூலம் பயனடைவர் என்று கூறப்பட்டது. (ம-17)

## பாடசாலைக் கட்டடம் கிளாலியில் திறப்பு

கிளாலிப் பகுதியில் 45 நாள்களில் கட்டி முடிக்கப்பட்ட பாடசாலை கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அண்மையில் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதையடுத்து அங்குள்ள றோ.க.த.க. பாடசாலையில் தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. சேதமடைந்த காணப்பட்ட கட்டடம் 45 தினங்களில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு புதிய கட்டடத்தைதிறந்துவைத்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் செ. முகுந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-207)

# புதிய கிளைக்கு அடிக்கல்

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கிளாலிப் பகுதியில் புதிய கிளைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் புதிய கிளைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் செ.முகுந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிளாலிப் பகுதியில் முன்னர் இயங்கிய கட்டடம் யுத்த வேளையில் முழுமையாக சேதமடைந்ததால் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. 2000ஆம் ஆண்டு கிளாலிப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அண்மையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

## தபால் விநியோகஸ்தருக்கு இம்முறை தைத்த சீருடைகள்


யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்.தபாலக தபால் விநியோக பணியாளர்களுக்கான சீருடைகள் அடுத்த வாரத்தில் விநியோகிக்கப்படவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தபாலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த ஆண்டுக்கென வழங்கப்படும் தபால் பணியாளர்களுக்கான சீருடைகள் தற்போது தைத்தே வழங்கப்படவுள்ளன.

குறிப்பாகக் குடாநாட்டில் சகல தபால் நிலையங்களிலும் கடமையாற்றும் பணியாளர்களுக்கு இந்தச் சீருடைகள் வழங்கப்படவுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (ம-17)

# கோமாதாக்களுக்கு நேற்றுப் பொங்கல்



யாழ்ப்பாணம், ஜன.17

பட்டிப்பொங்கல் யாழ். குடாநாடு முழுவதும் நேற்றுக் காலையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மக்கள் தமது வளர்ப்பு பசுக்களை காலையில் நீர் ஏரிகளில் குளிப்பாட்டி பின்னர் அவற்றுக்குப் பூமாலை அணிவித்தும் குங்குமம் சந்தனம் திலகமிட்டு பூசையிட்டனர். அத்துடன் மாட்டுத் தொழுவங்களுக்கு முன்பாகப் பொங்கலிட்டு வணங்கினர்.

தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் இந்தப் பட்டிப் பொங்கல் விழாக்கள் வழமை போன்று இந்த முறை மிகவும் கோலா கலமாக இடம்பெற்றது.

அதேவேளை, யாழ்.நகரிலும் இந்தப் பட்டிப் பொங்கல் விழா நேற்றுக் காலை கோலாகலமாக நடைபெற்றது.

யாழ். சத்திரசந்தி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் பசுக்களின் ஊர்வலமும் இடம்பெற்றது.

ஆலய முன்றலில் நடைபெற்ற விசேட பட்டிப் பொங்கலைத் தொடர்ந்து பசுக்கள் மாலை அணிவித்து அலங்கரிக்கப்பட்டு நகரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டன. (ம-17-313-ரி)

# குடாநாட்டில் பரவலாக டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

வலி.வடக்கு,ஜன.17

சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குடாநாட்டில் பிரதேச செயலர், உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நேற்றுத் திங்கட்கிழமை உடுவில் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு மும்முரமாக இடம்பெற்றது.

இதில் தற்போது டெங்கு அதிகம் பரவும் சூழல் என்று இனங்காணப்பட்ட ஏழாலைப் பகுதியில் உள்ள வீடுகள் தோறும் சென்று டெங்கு ஒழிப்புப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் பொலிஸார், படையினர், மாணவர்கள்.

உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை அலுவலர்கள், சுகாதார வைத்தியதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், சுன்னாகம் பொலிஸார், இராணுவத்தினர், ஏழாலை மகா வித்தியாலய சுகாதாரக் கழக பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

வீடு வீடாகச் சென்று பார்வையிட்டதுடன் பொது மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பது சம்பந்தமாகவும் அறிவுரைகளைக் கூறியுள்ளனர். (ம-86)

# கீரிமலை நகுலேஸ்வராவில் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

சுன்னாகம், ஜன.17

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நட்டு வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் பிரதான அடிக் கல்லை நட்டு வைத்தார்.

முன்னதாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுடன் அடிக்கற்கள் எடுத்து வரப்பட்டு, சமயக் கிரியைகளுடன் நட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், வலி.வடக்குப் பிரதேச செயல் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன், வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், பாடசாலை வேலைகள் பகுதிப் பொறியியலாளர் எ.சத்தியசீலன், வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான இ.தமிழ்மாறன், சி.கந்தசாமி, தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.கைலாசநாதன், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.நந்தகுமார், தொழில்நுட்ப அலுவலர் எஸ்.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமாரின் சிபாரிசின் பேரில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 5 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-38)

# சேந்தாங் குளத்தில் வீதிச் சோதனை

வலி. வடக்கு, ஜன. 17

வலி. வடக்கு கீரிமலை சேந்தாங் குளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நண்பகல் வரை கடற்படையினர் திடீரென வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல வருட கால இடைவெளியின் பின்னர் வீதித் தடைபோட்டு வாகனங்கள் மற்றும் பயணிகள் கடற்படையினரின் சோதனைக்கு உட்பட்டமையால் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தில் சற்றுப் பதட்டமான நிலமை காணப்பட்டது.

பல வருட கால இடைவெளியின் பின்னர் வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை இடம்பெற்றது.

சனிக்கிழமை மாலையில் இந்தப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை யில் ஈடுபட்ட போது மக்கள் மற்றும் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் உறுப்பினர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாகிய நிலையில் இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கடற்படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையால் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு வீதியால் சென்றவர்கள் என்ன நடக்கின்றது என்று தெரியாது திண்டாட்டத்துக்கு ஆளாகினர்.

ஒரு சில மணித்தியாலங்கள் இந்த நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாம் ஏன் அவசரமாக வருகிறார்?

**சரவணபவன் எம்.பி கேள்வி**

தமிழர்கள் கொல்லப்பட்ட போது வாயே திறக்காத கலாம் இப்போது இங்கு வந்து என்ன செய்யப் போகிறார். ஈழத் தமிழருக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தி ருப்பாரா அவர் என்ற கேள்வி எழுகிறது.



இந்தியா மீது தமிழர்கள் முற்றுமுழுதாக அவநம்பிக்கை அடைந்துள்ள இன்று, அப்துல்கலாம் ஏன் அவசரமாக யாழ்ப்பாணம் வருகிறார்? அவர் வந்து சென்ற பின்னராவது ஈழத் தமிழர் தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றம் ஏதாவது ஏற்படுமா? சோனியா காந்தி உள்ளிட்ட இந்தியத் தலைவர்களிடம் கலாம் இங்குள்ள தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை எடுத்துரைப் பாரா?

- இவ்வாறு கேள்விகளை அடுக்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வலி.மேற்கு அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட உழவர் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவற்றைத் தெரிவித் தார்.

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழகத் தலைவர் கே.துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தொடர்ந்தும் கூறியதாவது:

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வைக் கொண்டாடிய நாம் இன்று பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த உழவர் விழா பல வீர விளையாட்டுக்களை உள்ளடக்கிய தமிழர் திருவிழா. நாம் தன்மானம் உள்ள வீரத் பரம்பரையில் உதித்தவர்கள்.

எமது இளைஞர்களுக்குப் பயிற்சிகளையும் உற்சாகத்தையும் வழங்கி நமது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்ததே இந்தியாதான். அதேவேளை அதே ஆயுதப் போராட்டத்தை ஒழிக்கவும் இலங்கை அரசுக்கு துணை நின்றதும் இந்தியாதான்.

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்தித்த பின்னரே அரசுடன் பேசுவார் என்று முன்பு கூறப்பட்டது.

ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட உத்தியோகம் பூர்வ நிகழ்ச்சி நிரலில் அது வசூலிக்கப்பட்டுள்ளது

இதனைச் சுட்டிக்காட்டிக் கேட்டபோது ''இல்லை, இல்லை, தமிழ்த் தேசியக் கூட்டணியினரையும் சந்திப்பார்'' என்று கூறப்படுகிறது.

ஏன் இந்த கண்ணாமூச்சி விளையாட்டு. இது பெரும் சந்தேகத்தை தமிழ் மக்களிடையே எழுப்பி உள்ளது.

இவ்வாறே முன்னாள் ஜனாதிபதி கலாமின் பயணமும் அவரை ஏன் இந்திய அதிகாரிகள் இங்கு அழைத்து வருகிறார்கள்? தமிழர்கள் கொல்லப்பட்ட போது வாயே திறக்காத கலாம் இப்போது இங்கு வந்து என்ன செய்யப் போகிறார். ஈழத் தமிழருக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்திருப்பாரா அவர் என்ற கேள்வி எழுகிறது. இங்கே இப்போ எதைப் பார்க்க வருகிறார் கலாம்?

வடபகுதி மக்கள் இப்பொழுது வெள்ளைச் சீருடையணிந்து சிவில் அதிகாரி என்று காட்டிக்கொள்ளும் இராணுவ அதிகாரியின்- ஆளுநரின் - பிடிக்குள் சிக்கிச் சீரழிகின்றனர்.

ஆட்டைக் கடித்து , மாட்டைக் கடித்து இப்பொழுது தமிழ் மக்களின் பெரும் சொத்தான கல்வியிலும் மூக்கை நுழைத்துவிட்டார் அவர்.

தகுதியும் திறமையும் உள்ள கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சுதந்திர மாக செயற்பட முடியவில்லை. ஆளுநரின் அடாவடி உத்தரவுகளை நிறைவேற்றும் தலையாட்டி பொம்மைகளாக அவர்கள் நடத்தப்படுகின்றனர்.

அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒரு தமிழ் மாணவன் முதலாம் இடத்துக்கு வந்துவிட்டது இவர்களுக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கல்வி வளர்ச்சியையும் சீரழிக்க முனைகின்றனர்.

அரசு மாகாணக் கல்வி வளர்ச்சிக்கு ஒரு சதவீதத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளது. இது யானைப் பசிக்கு சோளப் பொரியை போட்டது போன்றது. எமது பெற்றோரும் பழைய மாணவர்களும் சுயமாகவே முன்வந்து எமது பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் பெருமளவில் உதவுகின்றனர்.

இதனைக்கூடக் கண்டு பொறுக்க முடியாத ஆளுநர் எந்த ஒரு பாடசாலை அதிபரும் தனது அனுமதியின்றி எந்த ஒரு உதவியையும் எவரிடமும் பெறக்கூடாது எனக் கட்டளை இட்டுள்ளார்

தென்னிலங்கை அரசுகள் முன்பு தமிழர்களின் கல்வியில் கை வைத்ததாலேயே இளைஞர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதேபோன்ற ஒரு நிலையை மீண்டும் உருவாக்க முனைகின்றார் ஆளுநர். அதற்கு துணை போகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசு வழங்கிய 1,500 சைக்கிள்களில் 500 சைக்கிள்களை சிங்களவர்களுக்கு வழங்கிவிட்டார் ஆளுநர். எஞ்சிய ஆயிரம் சைக்கிள்களையும் அப்படியே அபகரிக்க முயன்றார் அமைச்சர் டக்ளஸ். இப்பொழுது இந்த மோசடி அம்பலமாகிவிட்டது.

இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் ஒற்றுமையாகக் குரல் எழுப்ப வேண்டும். அஞ்சக்கூடாது.

நல்லிணக்கம், இணக்க அரசியல் என்று இலங்கை அரசும் அமைச்சர் டக்ளசும் நமது முதுகில் குத்துகின்றனர். தொடர்ந்தும் நம்மை அடிமைப்படுத்துவதிலேயே இலங்கை அரசு தீவிரமாகச் செயற்படுகின்றது.

அதேவேளை எமது விடயத்தில் இந்தியாவும் நேர்மையாக நடக்காதது பெரும் கவலையாகிறது.

இப்படியான ஒரு சூழலில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி யாழ் வருகின்றார். அவர் பல்லைக்கழகத்துக்கும் இந்துக் கல்லூரிக்கும் வருகை தரவுள்ளார்.இந்தக் கல்விமானின் வருகை ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அப்படி இல்லை எனில் வேறு எந்த இந்தியரும் வடக்கே வராத படிக்கு செய்து விட வேண்டும்- என்றார் சரவணபவன்.

இந்த விழாவில் வலி. மேற்குப் பிரதேச சபை தலைவர் திருமதி ஐங்கரன், பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோரும் உரையாற்றினர்.

## மண் ஏற்றியவர் அகப்பட்டுக் கொண்டார்

வலி.வடக்கு, ஜன.17

திருட்டுத்தனமாக தோட்ட வெளிவெளியில் இந்து மண் ஏற்றி வந்தவர்கள் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவரிடம்மாட்டிக்கொண்ட சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

கட்டுவன் பகுதியில் ஆள்கள் அற்ற இடத்தில் உள்ள தோட்டங்களில் இருந்து திருட்டுத்தனமாக செம்மண்ணை கொண்டு செல்லும் நிலை இந்தப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்தத் திருட்டு மணல் அகழ்வு சம்பந்தமாகப் படைத்தரப்பினர், பொலிஸார் மற்றும் கிராம அலுவலர்கள் எனப் பலரிடம் முறையிட்டிருந்தனர். இருந்த போதிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் திருடர்கள் தமது கைவரியைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை பகல் உழவு இயந்திரத்தில் மூலர் இந்த செம்மண்ணை ஏற்றிச் சென்ற நிலையில் தெல்லிப் பழைக்கு அண்மையாக வைத்துப் பிரதேச சபைத் தலைவர் தலை மையில் சென்றவர்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

இருவர் தப்பி ஓடிய போதிலும் உழவு இயந்திரத்தின் சாரதி வகையாக மாட்டிக் கொண்ட நிலையில் சாரதி தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (ம-86)

## உரியவர்களிடம் மோ.சைக்கிள்கள்

வலி வடக்கு, ஜன. 17

கடந்த சனிக்கிழமை மாலையில் சேந்தான்குளம் பகுதியில் கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் நான்கும் உரியவர்களிடம் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் சேந்தான்குளம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களும் மற்றும் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவரும் தாக்கப்பட்டு நான்கு மோட்டார் சைக்கிள் களும் கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் கடற்படையினருடன்தொடர்பு கொண்டதையடுத்து மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-86)

## கடற்படையினர் வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஜன-17

மண்டைதீவு பேதுரு வானவர் ஆலயப் பகுதியில் நிலை கொண்டிருந்த கடற்படையினர் நேற்று திங்கட் கிழமை தாங்கள் தங்கியிருந்த வீடுகளை விட்டு வெளியேறினர். இதனை அடுத்து அங்கு ஊர்காவற்துறை பொலிஸார் தற்காலிக பொலிஸ் பாது காப்பு நடவடிக்கைகளை உடனடியாகவே மேற்கொண்டனர்.

வீடுகளில் உள்ள ஜன்னல், கதவுகள் திருட்டுப் போகாது, பாதுகாப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் முழுமையாகத் தமது வீடுகளில் குடியமரும் வரை வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறாது பாதுகாப்பதற்காகவே பொலிஸ் பாதுகாப்பு இருக்கும் எனக் கூறப்பட்டது. (ம-7)

## சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்.குடாநாட்டில் சட்ட விரோதமாக மதுபானம் விற்போரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரம் இன்றி இந்த மதுபானங்களைச் சிலர் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக விற்பனை செய்வோரில் சிலர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது மதுபான விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

வீதிகள் மற்றும் பொது இடங்கள் உட்பட எங்கும் மதுபான வெற்றுப் போத்தல்களும் பியர் ரின்களும் அதிகளவில் காணப்படுகின்றன.

வயது குறைந்தோர் முதல் பெரியோர் வரைக்கும் மதுபானப் பாவனையில் பெரும் எண்ணிக்கையானோர் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய புறநகரிப் பகுதிகளில் இளைஞர்கள் சிலர் கூட்டமாக நின்று மதுவை அருந்தி விட்டு அட்டகாசம் செய்வதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-17)



சாவகச்சேரி நகரப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு வருகின்றன. (ம-207)

## படகுச் சேவையாளர்களுக்கு வழி அனுமதி தாருங்கள்

**நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத் தலைவர்**

யாழ்ப்பாணம், ஜன.17

நயினாதீவு-குறிகட்டுவான் படகுச் சேவையில் ஈடுபடும் 60 படகு உரிமையாளர்களும் இதுவரை காலமும் வழி அனுமதிப் பத்திரம் இன்றி சேவையில் ஈடுபட்டு வருகின்றோம்.

வழி அனுமதிப்பத்திரம் - நேரக்கட்டுப் பாட்டாளர் நியமனம், செலுத்துநர் அனுமதிப்பத்திரம் என்பன வழங்கி எமது சேவையை வலு வூட்டுங்கள்.

வேலணைப் பிரதேச சபை எடுக்கும் சகல முடிவுக்கும் படகு உரிமையாளர்களாகிய நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுவோம்.

இவ்வாறு நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தனபாலசிங்கம் கூறியுள்ளார்.

நயினாதீவுப் படகு உரிமையாளர் சங்கத்தின் அபிவிருத்திக் கூட்டம் நயினாதீவு உபஅலுவலகத்தில்வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே மேற் கண்டவாறு கூறப்பட்டது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: கடந்த முப்பது வருட காலமாக முறையான போக்குவரத்து வழி அனு மதிப் பத்திரம், நேரக்கட்டுப் பாட்டு ஒழுங்கு மற்றும் படகு செலுத்துநர். அனுமதி பத்திரம் போன்றன இன்றியே சேவையில் ஈடுபட்டோம்.

எனவே எமது படகு உரிமையாளர்களின் தகுதிச் சான்றுகளை பரிசீலித்து எமக்கான சகல அனுமதிப் பத்திரங்களையும் பெற்றுத் தாருங்கள்.

படகு உரிமையாளர்களாகிய நாம் வேலணைப் பிரதேச சபைக்கான வரிகளை வருடத்துக்கு அல்லது மாதத்துக்கு வழங்கு வதற்கு முன் வருகின்றோம் என்றார். (ம)

## யாழ்.நகரில் வீதிகள் சேதம்

யாழ்.நகரில் முக்கிய சந்திகள் மற்றும் வீதிகளில் உள்ள கால்வாய்களில் உடைவு ஏற்பட்டதால் பாதசாரிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

கே.கே.எஸ். வீதி, மின்சார நிலைய வீதி திருப்பதிலும் கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிச் சந்திப் பகுதியிலும் மற்றும் வேம்படிச் சந்திப் பகுதிகளிலும் வீதிகள் உடைந்து சேதமடைந்து உள்ளன. இதனால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் சாதனைகள் சுய இருப்புக்கு வழிகோலும்

மூதூர், ஜன.17

எமது தமிழ் மாணவர் சமூகம் மொழிப்பற்றுடனும், இனப்பற்றுடனும் இருக்க வேண்டும். அறிவியலில் ஆற்றல்பெற்றுப் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டும். தமிழ் மாணவர்கள் சமகாலத்தில் ஈட்டும் கல்விச் சாதனைகள்தான் எதிர்காலத் தமிழினத்தின் சுய இருப்புக்கு வழிகோலும் என்பதை நமது இனம் மறந்துவிடக்கூடாது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முக்கியஸ்தர் க.செல்வராசா தெரிவித்தார்.

அகில இலங்கை இளங்கோ கழகத்தின் திருகோணமலை மாவட்டக் கிளையினால் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட விசேட பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

> மாணவர்களின் பெறுபேறுதான் தமிழ் இனத்தை வலுப்படுத்துகின்றது. அவர்களின் சாதனைகள்தான் எம்மைப் படைக்கும் சக்திகளுக்கும் பல்வேறு வழிகளில், வடிவங்களில் எம்மை மிதிக்கின்ற சக்திகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவ சமுதாயத்தைச் சந்திப்பது மிகவும் மகிழ்ச்சியானது. ஏனென்றால், நீங்கள்தான் நாளை எமது தேசத்தை நிர்வகிக்கப்போகின்ற சக்திகள். அந்த வகையில், மாணவர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டியது இன்றைய மக்கள் பிரதிநிதிகளின் கடமைகளில் ஒன்றாகும்.

மனிதனுக்கு ஞானத்தையும் கல்வியையும் கொடுப்பது யார்? ஆசிரியர்களும், பெற்றோர்களும்தான். இவர்கள்தான் மாணவர்களாகிய உங்களுக்குப் பெரிய பலம் என்று சொல்லவேண்டும்.

இந்த உலகில் மனிதர்கள் மிக உயர்ந்தவர்கள். மனிதர்களாகிய நாம் ஆண்களும், பெண்களுமாக இப்படி மேல்நோக்கி வளர்கின்றோம். ஆண்டவன் எம்மை மேல்நோக்கிப் படைத்த காரணம், நம்முடைய வாழ்க்கை மேல்நோக்கி இருக்கவேண்டும் என்பதற்காகவே.

நம்முடைய சிந்தனை உயர்ந்த சிந்தனையாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நம்மை இறைவன் மேல்நோக்கிப் படைத்தான்.

மாணவர் சமூகம் மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்டு அறிவியல் ஆற்றலும் பெற்று பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டும். மாணவர்களின் பெறுபேறுதான் எமது இனத்தை வலுப்படுத்துகின்றது. உங்களுடைய சாதனைகள்தான் எம்மைப் படைக்கும் சக்திகளுக்கும் பல்வேறு வழிகளில், வடிவங்களில் எம்மை மிதிக்கின்ற சக்திகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கப்போகின்றது.

உலக ஆய்வின்படி அறிவியல் காலத்தில் தமிழர்கள் இரண்டாவது நிலையில் இருக்கின்றார்கள் என்ற ஆய்வுகளின் பயம்தான் எம்மை அடக்க முனைகின்றவர்களுக்கு எமது மக்களின் கல்வியை அழித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தை அதிகப்படுத்தி வருகின்றது.

அதற்கு ஒருபோதும் நீங்கள் இடம் கொடுக்காது எமது கல்விவளர்ச்சியில் கூடிய கவனஞ்செலுத்த வேண்டும். அதற்காக நாமும் சேவைகளை மேற்கொள்ளுவோம் - என்றார். (ச)

## விதவைகளை உருவாக்கும் அரசியலை தவிர்க்க வேண்டும்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.17

விதவைகளும் அனாதைகளும் உருவாகுவதற்கான அரசியல் செய்வதை அனைவரும் தவிர்க்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு பிரதேச சபை - கொக்கட்டிச்சோலை பொதுச்சந்தை திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டம் தற்போது துரிதமான அபிவிருத்தியைக் கண்டுவருகிறது. நமது மாகாணமும் மாவட்டமும் கடந்த காலங்களில் இருந்த நிலையை விடவும் தற்போது பெரும் முன்னேற்றமடைந்துள்ளன. அது எதிர்காலத்தில் இன்னமும் முன்னேற்றமடையும் - என்றார். (ச)

## நுவரெலியாவில் பனி மழை

நுவரெலியா,ஜன.17

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை ஆங்காங்கே பனிமழை பெய்துள்ளதுடன் ஆகக் குறைந்தளவான 3.8 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில் இலங்கையில் பதிவான மிகக் குறைவான வெப்பநிலை இது என்று கருதப்படுகிறது.

நுவரெலியாவில் மிக நீண்டகாலமாக இந்தளவான பனிப்பொழிவு ஏற்படவில்லை என்று அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## அபிவிருத்தித் திட்டங்கள்

மட்டக்களப்பு,ஜன.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பிரதேசத்தில் 11 கோடி ரூபா செலவில் கடந்த வெள்ளிக்கிழமை அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நகர அபிவிருத்தியின் முதற்கட்டமாக உள்ளூர் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஏறாவூர்ப் பிரதான வீதியிலிருந்து தொடங்கும் புன்னைக்குடா வீதியின் கடற்கரை வரை காப்பெட் வீதியாக மாற்றப்படவுள்ளது. (ச)

## 100 வருடங்களின் பின் கிராமத்துக்கு மின்சாரம்

மட்டக்களப்பு,ஜன.17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமான செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தம்பன்னாம்வெளி கிராமத்துக்கு சுமார் 100 வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக மின்சார வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

தம்பன்னாம்வெளி கிராமம் உருவான காலந்தொட்டு இந்தக் கிராமத்துக்கு மின்சார வசதி வழங்கப்படாதிருந்தது.

இந்த நிலையில், கல்குடாத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளர் கலாநிதி டி.எம்.சந்திரபாலவிடம் இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வழிகாட்டலில் தம்பன்னாம்வெளி கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)



நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பௌத்த அமரபுர நிக்காயவினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டி புஸ்பதான மண்டபத்தில் சர்வசமய சமாந்திரய விபூசண தேசபிமாணி லங்காபுத்ர கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## பதினாறு வருடங்கள் கடந்தபோதும் முழுமைபெறாத வீடமைப்புத் திட்டம்



> அரைகுறையுடன் காணப்படும் இந்த வீடுகளை பூரணப்படுத்தித் தருமாறு ஜனாதிபதி உட்படப் பலரிடம் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

மட்டக்களப்பு,ஜன.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வந்தாறுமூலை, பலாச்சோலை எழுச்சிக் கிராமத்தில் 1996ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 65 வீடுகள் 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை. இந்தக் கிராமத்து மக்கள் அயலவர்களின் வீடுகளிலும் வேறு இடங்களிலும் தங்கியிருப்பதாகப் பலாச்சோலை கிராம அபிவிருத்திசங்க உபதலைவர் கே.ஆண்டியப்பன் தெரிவித்தார்.

அரைகுறையுடன் காணப்படும் இந்த வீடுகளைப் பூரணப்படுத்தித் தருமாறு ஜனாதிபதி உட்பட பலரிடம் முறையிட்டும் இதுவரை அவை நிறைவுபெறவில்லை என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்துக்கு நேரில் சென்ற கல்குடா தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் டி.எம்.சந்திரபாலவிடம் மக்கள் இந்த வீடுகளை முழுமைப்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த அமைப்பாளர் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்சவின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கடலில் மூழ்கி ஒருவர் பலி

மட்டக்களப்பு,ஜன.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலைப் பிரதேசத்திலுள்ள கடலில் நீராடச் சென்ற நபர், நீரில் மூழ்கி பலியாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள கிருஷ்ணன் ஆலய கடலில் நேற்றுத் திங்கட்கிழமை நீராடியபோதே அவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலைப் பிரதேசத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளரான கே.சந்திரன் (வயது [illegible]) என்பவரே இவ்வாறு பலியானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நாட்டின் யதார்த்தத்துக்கு ஏற்ற தீர்வுவை முன்வைக்க வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார வலியுறுத்து

நுவரெலியா,ஜன.17

சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் இல்லாமல் எமது நாட்டின் யதார்த்தத்துக்கேற்ப அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

இதன்மூலமாக நாட்டின் முக்கியத்தையும் இறைமையையும் நிலைநிறுத்த முடியும் என்று தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தேசியமொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய பொங்கல் விழா தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்லினங்களும் பல்வேறு மதங்களும் உள்ள இந்த நாட்டில் ஒவ்வொரு சமூகத்தவரினதும் கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கு உரிமை உண்டு. இதன் அடிப்படையில் உலகத் தமிழ் மக்கள் கொண்டாடுகின்ற தைப்பொங்கல் விழா தலவாக்கலைப் பிரதேசத்தில் கொண்டாடப்பட்டது மகிழ்ச்சிதரும் விடயமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ ஞான வைரவர் துணை

## ஆச்சார்யாபிஷேக அழைப்பு

நிகழும் மங்களகரமான கர வருடம் தை மாதம் 4ஆம் நாள் (18.01.2012) புதன்கிழமை விசாக நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் தசமி திதியும் கூடிய காலை 9 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மீனலக்ன சுபவேளையில்

**எமது குமாரன் சிரஞ்சீவி**

**பிரம்மஸ்ரீ சி. கிருஷ்ண சர்மாவிற்கு**

சுன்னாகம் கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோயிலில் ஆச்சார்யாபிஷேகம் நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் பந்து மித்திரர்களுடன் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசி கூறுபவர்

**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் - இணுவில்**
தீட்சா குரு
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் - சுன்னாகம்**

தங்கள் நல்வரவை நாடும்

கட்டுடை மேற்கு,
கட்டுடை, மானிப்பாய்.
தொ.பே.இல. 021 225 5284

சி. சிவநாவுக்கரசு சர்மா,
(மூர்த்திக்குருக்கள்)
மேனகாதேவி தம்பதியினர்.
(13155) (45-9-6)

## ஆங்கில மருந்துவகைகளைப் பயன்படுத்திய ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு 'ஆப்பு'

யாழ்ப்பாணம், ஜன.17

தனியார் ஆயுர் வேத மருத்துவ நிலையங்களில் யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பிரிவினர் நேற்று திடீர் பரிசோதனையில் குதித்தனர். இந்த நடவடிக்கையின் போது அவர்கள் ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்டிருந்த போதும், அதனையும் மீறி தொடர்ச்சியாக ஆங்கில மருந்துகளை பயன்படுத்தி வந்த அச்சுவேவேலி யிலுள்ள ஆயுர்வேத மருத்துவ நிலையமொன்றினை இழுத்து மூடினர்.

இது தவிர இடைக்காடு, நவக்கிரி, நல்லூர், கல்வியங்காடு போன்ற இடங்களில் உள்ள ஐந்து ஆயுர்வேத மருத்துவ நிலையங்களிலும் பாவனையில் இருந்த ஆங்கில மருந்துகள் கைப்பற்றப்பட்டன.அத்துடன் குறித்த நிலையங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அத்துடன் இது போன்று ஆயுர்வேத மருத்துவ நிலையங்களில் ஆங்கில மருந்துகள் பாவனையில் இருந்தால் அது பற்றி உடனடியாக யாழ். பிராந்திய சுகாதார வைத்திய பணிமனைக்கு அறிவிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குடா நாட்டில் பல பகுதிகளில் இவ்வாறு செயற்பட்டுவரும் ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் பற்றிப் பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். தொடர்ந்தும் இத்தகைய முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. எனவே இதுபோன்ற ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தும் ஆயுர்வேத மருத்துவ நிலையங்களால் பொதுமக்களின் உயிருக்கு குறிப்பாக குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை கானப்படுகின்றது.

எனவே இவ்வாறான செயலில் ஈடுபடும் ஆயுர் வேத மருத்துவர்கள் ஆங்கில மருந்துப்பாவனையை உடனடியாக நிறுத்துமாறும் தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது. (ந-4)

## மரண அறிவித்தல்

### திரு. கனகநாயகம் சங்கரகுமாரன்

யாழ்ப்பாணம் - கோப்பாய் மகாவளவைப் பிறப்பிடமாகவும், இல. 46, (Hill Street), கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. C. சங்கரகுமாரன் 13.01.2012 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் முன்னாள் காசாளர் (இந்தியன் நஷனல் வங்கி - கண்டி), கண்டி ஹற்றன் நஷனல் வங்கியின் ஆலோசகர்), அரச ஈட்டு வங்கி கொழும்பின் பணிப்பாளர், கண்டி ஹோட்டல் கம்பனியின் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழக ஆலோசனை சபை, பொது அலுவல்கள் ஆணைக்குழு, (L.G.S.C.), (C.P) ஆகியவற்றின் உறுப்பினர் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற (Adigar), A . நாகநாதன் (C.B.E), அவர்களின் செல்லப் பேரனும், காலஞ்சென்ற Gate Mudaliyar N.கனகநாயகம் (C.B.E), கண்டி மாநகரின் முன்னாள் மேஜரும் காலஞ்சென்ற நாகரத்தின அம்மாள் ஆகியோரின் அருந்தவப் புதல்வனும் வடமராச்சியில் உள்ள கரணவாய் வடக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை (சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு (JPUM), காலஞ்சென்ற பொன்னார்வன்னிச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி மகேஷ்வரி (புவனி)யின் அன்புக் கணவரும் Dr. சதானந்தன் (U.K.), சச்சிதானந்தன் (U.S.A), Dr. திருமதி நிர்மலா குமாரதேவன் (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு.க. சண்முகநாயகம் (சட்டத்தரணி, கொழும்பு), காலஞ்சென்ற பேராசிரியர் க.சூரியகுமாரன் (U.N), திருமதி சேது. பாலசிங்கம் (கொனக்ரிக்கட்) (U.S.A), காலஞ்சென்ற இலங்கநாயகி- சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்ததி குமுதினி N. குமாரதேவன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஹரன், வரன் சிவி, மதுரி, ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 18.01.2012 புதன்கிழமை முற்பகல் 9-11மணி வரை நடைபெற்று, பூதவுடல் மகியாக இந்து மயானத்தில் (கண்டி) தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.சதானந்தன் (மகன்)
இல.46, Hill Street, kandy.

(சி/7910)(9-7-45)

## விழிநீர் சொரியும்
## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
07 - 07 - 1942



மறைவு
16 - 12 - 2011

### அமரர் சின்னத்தம்பி தங்கையா

பிரிவின் துயரை சுமந்து மாதமொன்று ஆகிவிட்டது அப்பாவே எங்கள் ஆருயிர் அப்பாவே விண்ணையே நோக்கி நீங்கள் விரைந்திட்டதால் விழிகள் நித்தம் கண்ணீரால் நிறைகிறது. கண்ணின் மணிபோல் எம்மை காத்தீர்களப்பா
ஆறாது அழுதாலும் தீராது அப்பா உங்கள் ஞாபகங்கள்.
தேறாது மனம் என்றும் தேறாது கணவனின் நினைவலைகள்.
கூறாது பேசாது போனது உங்கள் உயிர் தாளாது தவிக்கின்றனர் உங்கள் பேரக் குழந்தைகள். யார் தவித்தும் மாறாது மாற்றாது மாதமொன்று அஞ்சலிகள்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி,

என்றென்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1வது நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய்.
(12652) (6,,10)

## அந்தியேட்டி நிகழ்வு அழைப்பு



*03.1.2012 அன்று சிவபதமடைந்த இணுவில் நாதஸ்வர வித்துவான்*

**கோவிந்தசாமி வாகீஸ்வரன்**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், (19.01.2012) வியாழக்கிழமை அன்னாரின் கந்தசாமி கோயிலடி இணுவில் இல்லத்திலும் நடைபெற உள்ளன.

அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி நடைபெறும் இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் 19.01.2012 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.
(12536)(2-7-9)
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஊடகவளங்கள் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 03.02.2012 ஆம் திகதிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கல்வி மற்றும் பிற தகைமைகள்:**

1. கா.பொ.த. (சாதரணம்) பரீட்சையில் சித்தி
2. வயதெல்லை: விண்ணப்பமுடிவுத்திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவு 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**கடமை விவரம்**

1. பணிபுரியும் அலுவலர்களுக்கு எல்லா அலுவலக கடமைகளிலும் உதவிபுரிதல்
2. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் அலுவலகம், வகுப்பறைகள் ஏனைய பகுதிகளை சுத்தமாக பேணுவதும், தகுந்த முறையில் பராமரிப்பதும்
3. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்திற்கும் பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கும் இடையேயான கடிதங்கள் மற்றும் ஆவணங்களை கையளித்தல்
4. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளரினால் பணிக்கப் படும் இதர கடமைகளை நிறைவேற்றுதல்

சம்பளம்: ரூபா 20,000/= (எல்லாம் உள்ளடங்க நிலையானது) மாதமொன்றிற்கு
தெரிவு: நேர்முகத்தேர்வின் மூலம்

**பொதுவான நிபந்தனைகள்:**

மேற்குறித்த நியமனம் முழுநேர ஒருவருட காலத்திற்கான ஒப்பந்தமாக இருக்கும். நியமன காலத்தில் வழங்கப்பட்ட சேவை மற்றும் வேலைத்திறன் என்பவற்றின் திருப்திகர தன்மைகளைக்கொண்டு சேவை ஒப்பந்தம் புதுப்பித்து வழங்கப்படலாம்.

நியமனம் பெறுபவருக்கு ஊழியர் சேமலாபநிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உதவு தொகை செலுத்தப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப்படிவங்களையும், இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளையில் அல்லது நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை இந்தப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விசார் தாபனக்கிளை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 100/= பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23× 10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விவரங்கள் தெளிவாக குறிப்பிடாத விண்ணப்பங்களும் விண்ணப்பமுடிவுதித்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2012. 01.16
(சி/7830) (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் செய்தோருக்கு ஆபத்து

## பாயத் தயாராகிறது பாக். அரசு

லாகூர்,ஜன.17

பாகிஸ்தானில் நீதித் துறையால் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து தப்பிக்கும் வகையில், ஊழல் வழக்கில் சிக்கியோரின் பணக் குவிப்பு குறித்து சுவிட் சர்லாந்து அதிகாரிகளுக்கு கடிதம் எழுத ஆளும் கூட் டணி தீர்மானித்துள்ளது.

கடந்த 2007 இல் அப்போதைய அதிபர் முஷாரப் கொண்டு வந்த தேசிய நல்லிணக்க அவசரச் சட்டம், 2009 இல் மேன்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட் டது. அந்தச் சட்டத்தால் ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ, அவரது கணவரும் தற்போதைய அதிபருமான சர்தாரி ஆகியோர் மீதான வழக்குகளை மீண்டும் தொடங்குமாறு மேன்நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி ஏற்பட இருப்பதைத் தடுத்து நிறுத்திவிடும் என நிபுணர்கள் கருதுகின்றனர்

ஆனால், முஷாரப்புக்குப் பின் சர்தாரி, கிலானி தலைமையில் அமைந்த அரசு மேன்நீதிமன்றத்தின் உத்தரவுகளை கிடப்பில் போட்டது. இந்த வழக்கை சமீபத்தில் விசாரித்த மேன்நீதிமன்றம் சர்தாரி மீதான வழக்குகளை தோண்டியெடுப்பது உள்ளிட்ட ஆறு நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் அதைச் செய்யத் தவறினால் அதிபர், பிரதமர் இருவரை யும் தகுதி நீக்கம் செய்வோம் என்றும் உத்தரவிட்டிருந்தது. இதனால் வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட உள்ளது.

இந்த நிலையில், நீதித்துறையுடனான மோதல், நாட்டில் மீண்டும் ராணுவத்தின் தலைமையிலான சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுச் சென்று விடும் எனப் பீதியடைந்துள்ள ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி, ஊழல் வழக்குகளில் பணம் குவித்தோர் பற்றிய விவரங்களை வழங்கும்படி, சுவிட்சர்லாந்து அதிகாரிகளுக்கு கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளது.

இதுமட்டுமன்றி நவாஸ் தலைமையிலான எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு இணங்க, அடுத்த வருடம் நடக்கவுள்ள பொதுத் தேர்தலை இந்த வருடம் ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்தில் நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது. இது பற்றிய தகவல்கள், கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அரசால் அனுப்பப்பட்டுள்ளன. இந்த முடிவுகள், பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி நடக்க இருப்பதைத் தடுத்து நிறுத்திவிடும் என நிபுணர்கள் கருதுகின்றனர். (ந)

# ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தலே சிறந்த வழி



பெய்ரூட்,ஜன.17

தேர்தல் மூலமே ஒரு நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ - மூன் கூறினார்.

எகிப்து, துனீசியா, லிபியா, போன்ற நாடுகளில் மக்கள் புரட்சி ஏற்பட்டது. தற்போது ஏமன், சிரியாவில் பிரச்சினை பெரிதாக உருவெடுத்துள்ளது.

இந்த நிலையில் மேற்கு ஆசியாவின் ஐ.நா.வுக்கான பொருளாதார மற்றும் சமூகக் குழு சார்பில், ஜனநாயக முறை மற்றும் சீர்திருத்தம் என்ற தலைப்பில் லெபானானின் தலைநகர் பெய்ரூட் நகரில் இருநாள் மாநாடு நடந்தது. இதில் ஐ.நா. பொதுச்செயலர் பான்கீ -மூன் கலந்துகொண்டு பேசியதாவது:

மத்திய கிழக்கு நாடுகளில் மக்கள் தற்போது ஜனநாயகத்தின் தேவையை உணர்ந்து கொண்டு வருகின்றனர். அதே போன்று அரேபிய நாடுகள் சிலவற்றிலும் ஜனநாயகத்தின் வேர் துளிர்விட ஆரம்பித்துள்ளது.

இந்த நாடுகளில் சீர்திருத்தம் தேவை என்பது உணரப்பட்டுள்ளது.

இத்தகைய நர்டுகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஐ.நா. மேற்கொள்ளத் தயாராக உள்ளது. தேர்தல் மூலம் தான் எந்த நாட்டிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும்.

மத்திய கிழக்கு நாடுகளில் எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்க்கத் தேர்தலை நடத்தாமல் அங்கு ஜனநாயகத்தை அவ்வளவு எளிதில் அடையமுடியாது. அரபு நாடுகளிலும், ஜனநாயகத்தை மலரச் செய்ய கொள்கை அளவில் முடிவு எடுக்கும் நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றார். (ந)

## இளவரசிக்கு சிறை?



பிரிட்டன் ராணி எலிசபெத்தின் இரண்டாவது மகனான இளவரசர் ஆண்ட் ரூவின் முன்னாள் மனைவியான சாரா பெர்குசன்(வயது- 53) ஒரு சினிமாப் படத் தயாரிப்பாளர். இவர் துருக்கி அரசிடம் அனுமதி பெறாமல் அங்குள்ள அநாதை இல்லத்தில் இரகசியமாகப் படம் எடுத்தார். இதனால் சாராபெர்குசன் மீது துருக்கி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சாரா பெர்குசனுக்கு 22 ஆண்டு கள் சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது. (ந)



சிரியாவில் அதிபர் அல் - அஸாத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி தீவிரம் பெற்றுள்ளது. பல பொதுமக்களை அண்மைய நாள்களில் சிரியப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளதால் ஆத்திரமுற்ற மக்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கெதிரான கோஷங்களை எழுப்பி வருகின்றனர். இதேவேளை தனக்கு எதிராகக் கிளர்ந்து எழுவோரை சிரிய அதிபர் அல் - அஸாத் இரும்புக் கரம்கொண்டு ஒடுக்கி வருவதாகவும், ஈவிரக்கமற்ற இந்தக் கொலைகளை சிரிய அதிபர் நிறுத்தவேண்டும் என்றும் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ந)

## சுரங்கம் தோண்டி வங்கியில் திருட்டு

திருடர் கும்பல் ஒன்று வங்கியில் உள்ள தானியங்கி காசு இயந்திரத்திலிருந்து பணத்தை திருடுவதற்காக ஆறு மாதமாக 100 அடி வரை சுரங்கம் தோண்டியுள்ளது. இந்தச் சம்பவம் அமெரிக்காவில் மான்ஸ்செஸ்டர் நகரில் இடம்பெற்றுள்ளது. இதன்போது திருடர்கள் ஏறத்தாழ 38 சென்ரி மீற்றர் தடிப்புடைய கொங்கிறீட் சுவரையும் தகர்த்துள்ளனர். இவ்வளவு கஸ்டப்பட்டும் வெறும் 6,000 யூரோ மட்டுமே திருடப்பட்டுள்ளதாவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# "செத்தாலும் வருவேன்"

## முஷாரப் பிடிவாதம்



இஸ்லாபாத்,ஜன.17

பாகிஸ்தான் மக்களுக்கு இப்போது தேவை மாற்று அரசுதான் என்று குறிப்பிட்ட அந்த நாட்டின் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் , பாகிஸ்தான் திரும்பினால் தனது உயிருக்கு ஆபத்து நேரலாம் என்றாலும், இந்தத் தருணத்தில் அதைக் கண்டு அஞ்சாமல் நாடு திரும்ப முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி முடிந்து தேர்தலுக்குப் பின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் லண்டனில் குடியேறினார் முஷாரப். அவ்வப்போது டுபாய்க்கு வரும் அவர், இப்போது முதல் முறையாக பாகிஸ்தானுக்கு திரும்பப் போவதாக அறிவித்துள்ளார். இந்த மாத இறுதியில் அவர் பாகிஸ்தான் திரும்பக் கூடும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. டுபாயிலிருந்து அவர் பாகிஸ்தானுக்குத் திரும்புவார் எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி பர்வேஸ் முஷாரப் தெரிவித்ததாவது;

இப்போதைய சூழலில் பாகிஸ்தானுக்கு என்னைப் போன்ற தலைமை தேவைப்படுகிறது என்று உணர்கிறேன். அதற்காக நாடு திரும்ப முடிவு செய்துள்ளேன். பாகிஸ்தான் இப்போது மோசமான நிலையில் உள்ளது. அரசியல் ஸ்திரமற்ற நிலை, சமூக பொருளாதாரச் சூழலில் பின்னடைவு ஆகியன மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய சூழலில் மாற்று அரசை மக்கள் தேடத் தொடங்கியுள்ளனர். பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் அரசாக ஒரு கட்சி வந்தால் அதற்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. பாகிஸ்தானை மக்கள் ஆளும் அரசு வர வேண்டும். ஆனால் இப்போது அரசியல்தான் பாகிஸ்தானை ஆள்கிறது.

மேலும் இந்த மாதம் 27 அல்லது 30ஆம் தேதி நாடு திரும்ப திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பட்ட அவர் அது குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று கூறினார். உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது உண்மைதான். அதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. நாடு திரும்ப முடிவு செய்தபின் இத்தகைய பிரச்சினைகளை சமாளித்துத்தான் ஆக வேண்டும். நாடு திரும்பினால் தனது உயிருக்கு ஆபத்து என்பது தமக்கு நன்கு தெரியும் என்றும் அவர் கூறினார். (ந)

# ஆங்சாங் சூகிக்கு அமைச்சுப் பதவி



மியான் மாரில் நாடாளு மன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஆங்சான் சூகி அமைச்சுப் பதவியை பெறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளு மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மியன்மார் எதிர்கட்சித் தலைவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசு கூறியிருந்தது.

இது பற்றி கருத்து வெளியிட்டுள்ள ஆங்சாங் சூகி, அமைச்சுப் பதவியை நான் நிராகரிக்கவில்லை.

அதேநேரத்தில் அப்போது நிலவும் சூழல் மற்றும் என்ன அமைச்சர் பதவி என்பதை பொறுத்தே அதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று தீர்மானிக்க முடியும் என்று கூறியுள்ளார்.

அமைச்சுப் பதவியைப் பொறுத்தே அதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று தீர்மானிக்க முடியும் என்று ஆங்சாங் சூகி கூறியுள்ளார்

வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்வீர்களா? என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சூகி இதுபற்றி தீவிரமாக ஆலோசனை நடத்துவேன் என்று கூறியுள்ளார். (ந)

# மியன்மாரில் கைதிகள் விடுதலை

மியன்மார்,ஜன.17

மியன்மார் அரசு வழங்கியுள்ள பொதுமன்னிப்பின் விளைவாக அந்தநாட்டின் முக்கியமான அரசியல் கைதிகள் பலர் பல ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின்னர் விடுதலை ஆகியுள்ளனர்.

மியன்மார் மீதுள்ள சர்வதேசத் தடைகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமானால், மியன்மார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது அவசியம் என்பதை பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் வலியுறுத்தி வந்துள்ளன.

தற்போது அளிக்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பின் கீழ் மொத்தமாக 651 பேர் விடுதலை பெற்றுள்ளனர்.


2004 முதல் வீட்டுக்காவலில் இருந்துவருகின்ற நாட்டின் முன்னாள் பிரதமர் ஜெனரல் கின் நியுட்டும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். ஆங் சான் சூகி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்ததை ஆதரித்தார் என்பதற்காக இவர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒன்றுகூடினர் எதிரிகள் அதிர்ந்தது அமெரிக்கா

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவுக்கு எதிரியாக விளங்கும் கியூபாவின் முன்னாள் அதிபரான பிடல் காஸ்ட்ரோவுக்கும் அமெரிக்கர்களின் புதிய எதிரி என வர்ணிக்கப்படும் ஈரான் அதிபர் முகமட் அஹமது நிஜாதுக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்காவை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இருவரினது சந்திப்பும் கடந்த வாரம் கரிபியன் நாட்டில் இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி ஈரானில் அணு ஆயுதத் திட்டங்களை முன்னெடுத்து வரும் ஈரான் அதிபர் முகமத் அஹமது நிஜாத், கியூபா முன்னாள் அதிபரான பிடல் காஸ்ரோ உடனான சந்திப்பு குறித்து



ஒரே நோக்கத்துக்காகத் தொடர்ந்து போராடுவோம். எமது நட்பு நீடிக்கும்.

கருத்துத் தெரிவிக்கையில், ''இரண்டு மணி நேரங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஈரான் மற்றும் கியூபா உடனான நட்புறவு ஆரம்பத்திலிருந்து சிறப்பாக உள்ளன. உண்மையில் நாங்கள் ஒரே நோக்கத்துக்காக தொடர்ந்தும் போராடுவோம். ஏராளமான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். சந்திப்பு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. நல்ல நண்பர்களாக இருக்கிறோம். எப்போதும் அதே நட்புணர்வுடன் இருப்போம்'' எனத் தெரிவித்தார்.

கியூபாவின் தற்போதைய அதிபரான - பிடல் காஸ்ரோவின் சகோதரரான- ராஸல் காஸ்ரோவையும் ஈரான் அதிபர் சந்தித்துக் கலந்துரையாடினார். இவர்களின் சந்திப்பு அமெரிக்காவைக் கவலை கொள்ள வைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(ந)

# 700 பேர் மீது ரஷ்யாவில் ஊழல் வழக்கு

மொஸ்கோ, ஜன.17

ரஷ்யாவில் கடந்தாண்டு மட்டும் நாடாளுமன்ற, அரச தரப்பு வழக்கறிஞர்கள், நீதிபதிகள் மற்றும் அரசின் முக்கிய அதிகாரிகள் என 700 பேர்களின் மீது ஊழல் வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சி பல்வேறு மோசடிகள் மூலம் வெற்றி பெற்றது. இதையடுத்துப் பிரதமர் விளாடிமிர் புடினுக்கு எதிராக மக்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

ரஷ்யாவின் தற்போதைய பெரும் சவாலாகக் கருதப்படுவது ஊழல்தான். அதை ஊட்டி வளர்ப்பது புடின் என்பதால் மக்களிடையே அவருக்கு எதிர்ப்பலை எழுந்துள்ளது.

இந்நிலையில், அரச ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அதிகாரி ஒருவர் நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்தார். அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள்,வழக்கறிஞர்கள், அரச தரப்பு வழக்கறிஞர்கள், புலனாய்வுத்துறை அதிகாரிகள்,என மொத்தம் 700 பேர் மீது ஊழல் வழக்குகள் பதியப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்தாண்டில் மொஸ்கோவில் மட்டும் ஏழாயிரத்து 900 ஊழல் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மொஸ்கோவில் தேர்தல்குழு அதிகாரி ஒருவர் மீதும் ஊழல் வழக்குப் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந)

# ஆசியன் கூட்டமைப்பைக் கூட்டி விவாதிக்க பிலிப்பைன்ஸ் அழைப்பு

மணிலா, ஜன.17

தென்சீனக் கடலில் நாடுகளுக்கிடையே நிலவி வரும் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆசியன் கூட்டமைப்பைக் கூட்டி விவாதிக்கும்படி பிலிப்பைன்ஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

தென் சீனக் கடலின் பல பகுதிகளில் கனிம வளம் அதிகளவில் இருப்பதால் அந்தப் பகுதியில் சீனா வலுக்கட்டாயமாக உரிமை கொண்டாடி வருகிறது.

பிலிப்பைன்ஸ், கம்போடியா, தாய்லாந்து, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு உட்பட்ட பகுதிகளை சீனா தனதாக்கிக் கொள்ள விரும்புகிறது. இந்நிலையில் இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்க்கப் பிலிப்பைன்ஸ் அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கான அவசரக் கூட்டத்தை விரைவில் கூட்டும்படி, தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியனுக்குப் பிலிப்பைன்ஸ் கோரிக்கை விடுத்துள்ளது. தலைநகர் மணிலாவில் கூட்டம் நடத்துவதற்காக ஏற்பாடுகளைச் செய்யவும் தயார் எனக் கூறியுள்ளது.


(ந)

# இத்தாலிக் கப்பலில் இருந்து மேலும் 3 பேர் மீட்பு

ரோம், ஜன.17

இத்தாலிக் கப்பலில் இருந்து மேலும் 3 பேர் மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 40 பேரின் கதி என்னவானது எனத் தெரியவில்லை.

இத்தாலியைச் சேர்ந்த கோஸ்டா கான்கொரிடா என்ற ஆடம்பரக்கப்பல் நேற்று முன்தினம் ரோம் அருகில் உள்ள தீவு ஒன்றின் கரையில் பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில்



இருந்த நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் கப்பலில் இருந்து நேற்று மேலும் மூவர் மீட்கப்பட்டனர். இதைவிட 40 பேரின் கதி என்ன என்பது தெரியவில்லை. இதேவேளை மீட்புப் பணி முடிவதற்கு முன்பே கப்பலில் இருந்து வெளியேறிய கப்டன் கைது செய்யப்பட்டார்.

விபத்துக் குறித்துக் கப்டன் தெரிவிக்கையில், கப்பல் மோதிய பாறை குறித்து கப்பலில் இருந்த பாதை வரைபடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனக் குற்றம்சாட்டினார். (ந)

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல்

### பாவித்த கூரை ஓடுகள்

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் பாவித்த கூரை ஓடுகள் விற்பனை செய்யப்படவுள்ளன

முதலாம் தர கூரை ஓடுகள் - அண்ணளவாக - 26000

இரண்டாம் தர கூரை ஓடுகள் - அண்ணளவாக - 8000

எனவே, இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவில் ரூபா 100 செலுத்தி 16.01.2012 இல் இருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாக எமது பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ 25.01.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் இடவேண்டும். குறிப்பிட்ட திகதி நேரத்திற்கு பிந்திக் கிடைக்கும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது 0243244029 என்ற தொலைபேசியூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**பிராந்திய பெறுகைகள் குழு,**
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை,
முல்லைத்தீவு.

(சி/7822) (45-7-6)

## தவறிவிட்டது

இல. 18, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த ஐயாத்துரை சஜீந்திரன் என்பவரது தேசிய அ.அட்டை (870763450V), சாரதி அனுமதிப்பத்திரம், A.T.M. காட் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 15.01.2012 அன்று யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். T.P: 077 9362610, 077 1157684

(13133)(6-5-45)

## முகாமையாளர் தேவை

மன்னார் மாவட்டத்தில் இயங்கும் குளிர்பான மொத்த விற்பனை நிலையத்துக்கு முகாமையாளர் ஒருவர் தேவை. அனுபவம் உள்ளவர்களும், இளைப்பாறியவர்களும் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 7 222715

## மரண அறிவித்தல்

### கந்தையா ரத்தினசபாபதி



கந்தையா ரத்தினசபாபதி அவர்கள் 15.01.2012 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர், தொல்புரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் முகாமையாளரும் ஆவார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும், வசந்தி, நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
குடும்பத்தினர்.
0776538129

உங்கள் கல்வித்தகைமையை அதிகரித்திட
BE A 'CERTIFIED MEDICAL ASSISTANT'
பயிற்சி நெறி ஆரம்பம் : 21/01/2012
A pathway for Nursing/Medical Field
கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்.
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு-06
CMA US Curriculum
Lava Hospitals
வேலைவாய்ப்புடனான கற்கை நெறி.
What's Next ?
(O/L ஏதாவது நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.)
உங்கள் வாழ்வு மேம்பட கற்பீர்
MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
City Guilds Qualified
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன
Knowledge Universe
College of Business and IT
Tel: 0776458253 | # 75, Temple Road, Jaffna | www.kugroup.info

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னையா கதிரவேலு

தோற்றம்
19★ 05★ 1933

மறைவு
19★ 01★ 2009

திதி:17.01.2012

எம் அன்பு அப்பாவே
ஆண்டு மூன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எங்கள் உயிரின் உயிரானவரே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலா

கோட்டைக்காடு,
சுன்னாகம்.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(13153)(2-9-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை எழிலகத்தில் தீ

சென்னை, ஜன.17

தமிழ்நாட்டின் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அரசு அலுவலகம் இயங்கும் எழிலகத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்தார். இந்த அலுவலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராயின. இங்கு ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லை. இருப்பினும் இந்தத் தீயில் சதிச் செயல் இருக்குமோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

பொங்கல் தினத்தை முன்னிட்டு அரசு அலுவலகத்துக்கு தொடர் விடுமுறை என்பதால் சென்னையில் உள்ள அனைத்து தலைமை அலுவலகங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. இரவில் தங்கியிருந்து பணியாற்றும் ஊழியர்கள் கூட யாரும் இல்லை. இந்த வேளையில் ஆள் நடமாட்டம் இல்லாத நேரத்தில் நள்ளிரவில் இந்த தீ விபத்து நடந்திருக்கிறது. தீ பிடித்த இந்த கட்டடத்தில் காவலர்கள் யாரும் இருந்தனரா, இல்லையா என்றும் தீ பற்றியதன் காரணம் தொடர்பாகவும் பொலிஸ் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



தீ விபத்தில் தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்தார். அலுவலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராயின.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எழிலகம் அனைவருக்கும் தெரியும் அளவுக்கு பழங்கால கட்டிடமாகும். இங்கு அரச அலுவலகங்கள் செயற்பட்டுவருகின்றன. இங்குள்ள தொழில் வணிக வரி அலுவலகத்தில் இருந்து திடீர் தீ ஏற்பட்டுள்ளது. பின்னர் அருகில் இருந்த சமூக நலத்துறை அலுவலகத்துக்கு தீ பரவியது. தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மிக வேகமாக கொழுந்து விட்டு எரிந்த தீயை அணைக்க 15 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

கட்டடத்துக்குள் நுழைந்து தீயை அணைக்கும் பணியில் இருந்த மூத்த தீயணைப்பு வீரர் அன்பழகன் மேற்கூரை இடிந்து விழுந்ததில் சிக்கி உயிரிழந்தார். மத்திய கோட்ட அலுவலர் பிரியா, தீயணைப்பு நிலைய அலுவலர் முருகன், மற்றும் பிரபாகர் ஆகியோர் காயமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சுக்ராமுக்கு பிணை நீடிப்பு

டில்லி, ஜன.17

முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் சுக்ராமின் பிணை மனுவின் கால எல்லை எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பதியப்பட்ட தொலைத்தொடர்பு ஊழல் வழக்கில், பிணை கோரி சுக்ராம் தாக்கல் செய்த வழக்கில் இடைக்கால பிணை அளித்துள்ளது நீதிமன்றம்.

முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் சுக்ராமின் பிணை மனு மீது நேற்று உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தியது. இதில் அவருக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை பிணைக்கான கால எல்லையை நீடித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

முன்னதாக, அவர் பேரிலான குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டு, அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தநிலையில் அவர் இடைக்காலப் பிணை கோரி மனுதாக்கல் செய்திருந்தார்.

சுக்ராம் மற்றும் 2 பேருக்கும் பிணை நீட்டிக்கப்பட்டுள்ளது. (வ)

## இந்தியாவின் முதல் பெண் ஒளிப்படப் பத்திரிகையாளர் சாவு



டில்லி, ஜன.17

இந்தியாவின் முதல் பெண் புகைப்படப் பத்திரிகையாளரான ஹோமை வியாரவல்லா(வயது 98) நேற்று முன்தினம் தனியார் வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

1913 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி பார்சி குடும்பத்தில் பிறந்த ஹோமை வியாரவல்லா மும்பையில் வளர்ந்தார்.

1942 ஆம் ஆண்டு டில்லிக்குச் சென்று வசித்த அவர் பிரிட்டிஷ் தகவல் சேவையில் ஒரு ஊழியராகப் பணிபுரிந்தார். அந்த நேரத்தில் இந்திய சுதந்திரத்தின் முக்கிய நிகழ்வுகளை ஹோமை படம் பிடித்துள்ளார்.

1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15 ஆம் திகதி டில்லி செங்கோட்டையில் நடந்த முதல் கொடி ஏற்றம், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு மற்றும் லால்பகதூர் சாஸ்திரி போன்ற தலைவர்களின் இறுதிச் சடங்குகளையும் ஹோமை வியாரவல்லா புகைப்படம் பிடித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஹோமை வியாரவல்லாவுக்கு நாட்டின் உயரிய விருதான பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)



பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பண்ருட்டி தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வேல்முருகன் நேற்று தமிழர் வாழ்வுரிமை கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்தார். சென்னை போரூரில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

## ஹெலிகொப்டர் விபத்து; விமானி கவலைக்கிடம்



இந்திய மாநிலமான சத்தீஸ்கரில் எல்லைப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் உள்ள மணா விமான நிலையத்தில் சோதனை முயற்சி மேற்கொண்டபோது எல்லைப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானி பி.டி.திவாரி மற்றும் இரண்டு தொழில் நுட்ப அதிகாரிகளான ஆனந்த், பங்கஜ்பல் ஆகியோர் காயம் அடைந்துள்ளதாக பொலிஸ் கண்காணிப்பாளர் டிப்தன்ஷு கப்ரா தெரிவித்துள்ளார்.

மேலும் காயம் அடைந்தவர்கள் ராய்பூரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதில் விமானி பி.டி. திவாரியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் கப்ரா தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் மூத்த பொலிஸ் அதிகாரிகள் சம்பவம் நடத்த இடத்துக்கு விரைந்து விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர். (வ)

## அக்னி 5 ஏவுகணை விரைவில் தயார்

டில்லி,ஜன. 17

அக்னி 5 ஏவுகணையைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு இந்தியா தயாராகி வருகிறது.

இந்திய ராணுவத்துக்காக 5 ஆயிரம் கிலோ மீற்றர் வரை சென்று இலக்கைத் தாக்கும் அக்னி 5 ஏவுகணை விரைவில் பரிசோதித்து பார்க்கப்படும் என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் உயர் அதிகாரி அவினாஷ் சந்தர் தெரிவித்தார்.

தற்போது இறுதிக் கட்டப் பணிகள் நடந்து வருவதாகவும், தன்னால் சரியாக எந்தத் திகதியில் ஏவுகணை செலுத்தப்படும் என்பதை கூற முடியாது என்றும் அவினாஷ் தெரிவித்துள்ளார். (வ)

## பா.ஜ.க. தூய்மையானது ஜஸ்வந்த் சின்கா புகழாரம்



தற்போதுள்ள அரசியல் கட்சிகளில் இருந்து, மாறுபட்ட கட்சி பா.ஜ.க. மட்டுமே. ஒப்பீட்டளவில் 70 % தூய்மையானது

இந்தியாவில் தற்போதுள்ள அரசியல் கட்சிகளிலேயே 70 சதவீதம் தூய்மையான கட்சி பா.ஜ.க தான் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் ஜஷ்வந்த் சின்கா தெரிவித்தார்.

அண்மைக் காலமாக, ஊழல் கறை படிந்தவர்கள் பா.ஜ.க வில் அதிகமாக சேர்க்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு பா.ஜ.க மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான யஷ்வந்த் சின்கா பதிலளித்துள்ளார்.

''எந்த ஒரு அரசியல் கட்சியும் அறக்கட்டளை அமைப்புக் கிடையாது. ஒவ்வொரு கட்சிக்கும், கொள்கை, கோட்பாடுகள் உண்டு. அந்த அடிப்படையில் தான் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன.

தற்போதுள்ள அரசியல் கட்சிகளில் இருந்து, மாறுபட்ட கட்சி என்றால், அது பா.ஜ.க. மட்டுமே. தற்போதுள்ள அரசியல் கட்சிகளில் 70 சதவீதம் தூய்மையான கட்சி பா.ஜ.க. தான்.

பா.ஜ.கவில் ஏற்றுக் கொள்ள முடியாத சில விடயங்களைச் செயற்படுத்தும் போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளேன். இதேவேளை, ஊழல் குற்றச்சாட்டுகளால் பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பாபு சிங் குஷ்வகாவை பா.ஜ.கவில் சேர்த்தது தவறு என்று கூற முடியாது'' - என்றார் அவர்.

## திட்டமிட்டபடி மின் உற்பத்தி என்கிறார் நாராயணசாமி

கூடங்குளம் அணு மின் உலையில் திட்டமிட்டபடி மின் உற்பத்தி ஆரம் பமாகும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். அணு மின் நிலையத்துக்கு நான்கு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தைப்பொங்கல் தினத்தன்று சென்னைக்கு வந்த அமைச்சர் நாராயணசாமி, கோபாலபுரத்துக்குச் சென்று தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பொங்கல் வாழ்த்துத் தெரிவிப்பதற்காக கருணாநிதியைச் சந்தித்தேன். கூடங்குளம் அணு மின் நிலையத்தில் 75 சதவீத பணிகள் நிறைவு பெற்றுவிட்டன.

அங்கு திட்டமிட்டபடி மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். அணு உலையை சுற்றியும் நான்கு அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது - என்றார்.

## கடல் குதிரைகள் கடத்திய மூவர் கைது

சென்னை, ஜன1

சென்னையில் இருந்து சிங்கப்பூருக்கு கடல் குதிரைகளைக் கடத்த முயன்ற 3 பேர் கைது செய்யப்பட்டனர். இருவரை பொலிஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

சிங்கப்பூருக்குச் செல்ல விருந்த விமானத்தில் அட்டைப் பெட்டிகளில் கடல் குதிரைகளை அடைத்து கடத்த முயன்றுள்ளனர். இதுகுறித்து சிக்கந்தர், சிராஜுதீன் ஆகியோரிடம் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (வ)

## தலைமைத் தேர்தல் ஆணையருடன் மோதலா? மறுக்கிறார் சட்ட அமைச்சர்



தலைமைத் தேர்தல் ஆணையருடன் மோதல் இல்லை என்று சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பத்திரிகையாளர்கள் சந்திப்பில், இந்தியாவில் உள்ள எந்த ஒரு அமைப்பும் ஒவ்வொரு கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகிறது என்று தெரிவித்திருந்தார்.

சல்மான் குர்ஷித் பேச்சு குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தேர்தல் ஆணையர் குரேஷி முறைப்பாடு தெரிவித்து கடிதம் எழுதினார்.

இந்தநிலையில் தலைமைத் தேர்தல் ஆணையருடன் மோதல் உள்ளதா என்பது பற்றி மத்திய சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்ததாவது: தேர்தல் ஆணையத்துடன் மோதல் என்பதை மறுத்த அவர், தேர்தல் ஆணையம் முழுக்க தன்னாட்சி பெற்ற அமைப்பு - என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பகுதி மக்களுக்கான வர்த்தகக் களம்




யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி,2012 இம்முறையும் 03 வது தடவையாக எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மிகப் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் நிறுவனம் (LECS) மற் றும் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் (CCIY) ஆகியன இணைந்து இந்த வர்த்தகக் கண்காட்சியினை ஏற்பாடு செய்கின்றன.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கண்காட்சி, வடக்கின் தொழில்துறை அபிவிருத்தியில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளதுடன் வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே பாலமாக அமைந்து வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத் துவதே இந்தக் கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மீண்டும் செழிப்படைந்து கொண்டிருக்கின்ற நிலையில், அனைத்துக் கைத்தொழில்களுக்கும் ஒரு பிரதான சந்தையாக அதிவிரைவாக வளர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் இந்த வர்த்தகக் கண்காட்சியானது, வடக்கில் இடம் பெறும் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலை களை நேரில் காண சகல தொழிற்றுறையினருக்கும் ஒரு சிறந்த நுழைவாயிலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தொழில் முயற்சியாளர்களும் உற்பத்தியாளர்களும்தமது வியாபாரத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவற்கு இதனை ஒரு சிறந்த களமாகப் பயன்படுத்திக்கொள்வதுடன், தொடர்புகளை வலுப்படுத்தி, சந்தை வாய்ப்புக் களைநேரில் மதிப்பீடு செய்வதன் மூலம் நிறுவனங்கள் தமது வியாபாரத்தை விரிவுபடுத்த முடியும்.

யாழ்ப்பாணம் இப்பொழுது முழு உலகுடனும் தொழில் பங்காளித்துவங்களை ஏற்படுத்துதிலும் புதிய வியாபாரத் திட்டங்களை ஆரம்பிப்பதிலும் தீவிர கவனம் செலுத்துகின்றது.

இனிவரும் ஆண்டுகளில், அது உலக வர்த்தகத்தில் ஓர் வலிமையான நிலையை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய சாதகமான பின்னணியில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுவதால், பலதரப்பட்ட தொழிற்துறைகளைச் சேர்ந்த விதவிதமான பண்டங்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்காக ஏராளமான காட்சிக் கூடங்களை அமைக்க முன்வரும்படி தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட இருக்கிறது.

இந்தக் கண்காட்சியில் கட்டடப் பொருள்கள், நிர்மாண மற்றும் உள்ளக அலங்காரப் பொருள்கள், பதனிப்பட்ட உணவு மற்றும் விவசாயப் பண்டங்கள், உணவும் குடி பானங்களும், பொதியாக்கம், இயந்திரங்கள், ஒப்பனை மற்றும் அழகியல் சாதனங்கள், மின்சார உபகரணங்கள், இலத்திரணியல் பொருள்கள், புடவைகள் மற்றும் ஆடைகள், அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், கைப் பணிப் பொருள்கள், கனரக சாதனங்கள் மற்றும் கருவிகள், உடல்நல மற்றும் சுகாதார நல பொருள்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள், கைத்தொழில் உபகரணங்கள், குளியலறை உபகரணங்கள், காகிதாதிகள் முதலியன அவற்றுள் அடங்கும்.

இலங்கையின் வர்த்தக அரங்கில் யாழ்ப்பாணம் மீண்டும் ஒரு சுறுசுறுப்பான வர்த்தக மையமாக மாறிக் கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் மூன்றாவது தடவையாகவும் நாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரச் சமூகத்தினரும் ஒரே அணியாக இணைவதற்கு உந்துசக்தி பெறு வார்கள்.

விரிவாக்கம் பெறும் வட பகுதிச் சந்தையில் கணிசமான ஒரு பங்கினைக் குறுகிய காலத்திற்குள் பெற்றுக் கொள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு இது அரியதோர் வாய்ப்பாகும். நூற்றுக் கணக்கான தொழில் முயற்சியாளர்கள் இம்முறையும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, கண்காட்சிக்கு வருபவர்கள் பொருள்களைப் பார்ப்பதற்கும் வாங்குவதற்கும் நீண்டகால அடிப்படையிலான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஒரே கூரையின் கீழ் வசதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடக்கில் புதிய வியாபார வாய்ப்புக்களைத் தேடுவோருக்கு யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, 2012 ஒரு சிறந்த வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இக்கண்காட்சியினை பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ். மாவட்ட தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் நலனைக் கருத்திற்கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதனால் சகல தொழிற்துறையினரையும் தங்கள் நேரங்களை இந்த நாள்களில் ஒதுக்கி இந்தக்கண் காட்சியினை பார்வையிட்டுத் தமது தொழிற்துறைகளை மேம் படுத்துவதுடன், பல்வேறு புதிய தொழில் துறைகளை எதிர்காலத்தில் உருவாக்கி விரிவுபடுத்துமாறு யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் (CCIY) சார்பில் அதன் தலைவர் க.பூரணசந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## புதுப்பொலிவுடன் MMIC

இலங்கையில் முதன் முதலாக நல்ல ஒலிபரப்பாளர்களை உருவாக்கும் நோக்கில் 16.06.2001இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் (MMIC) பன்னிரண்டு வருட காலமாக சேவை செய்து நல்ல பல ஊடகவியலாளர்களை இலங்கைக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே உருவாக்கிக் கொடுத்துள்ளது. எம்மிடம் படித்து சான்றிதழ் பெற்றவர்கள் இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும் ஊடகவியலாளர்களாக பல உயர் பதவிகளைப் பெற்று பணியாற்றிக் கொண்டு இருப்பதுடன், மிகவும் பிரபலம் அடைந்தும் உள்ளனர்.

ஊடக நிலையங்கள் பல எம்முடன் தொடர்பு கொண்டு தமக்குத் தேவைப்படும் ஊடகவியலாளர்களைத் தெரிவு செய்கின்றனர். MMICயில் இணைந்து ஊடகவியலாளராக மட்டும் நீங்கள் வர வேண்டுமென்பதல்ல.

சகல தனியார், அரச நிறுவனங்களிலும் நீங்கள் எப்பதவிக்கு விண்ணப்பிக்கும் போதும் எமது சான்றிதழ் உங்களுக்கு கைகொடுக்கும். (த)

# எக்ஸ்போலங்கா நிறுவனத்துக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம்



பல்வேறு பிரிவுகளில் வர்த்தகத்தை மேற் கொண்டு வரும் இலங்கையின் கூட்டு நிறுவனமான எக்ஸ் போலங்கா மும்பை, தாஜ் லேன்ட்ஸ் என்டில் இடம்பெற்ற பிரகாசமான '20ஆவது உலக வர்த்தக குறியீட்டு சிறப்புத்துவ விருது வழங்கல்' நிகழ்வில் சர்வதேச கௌரவத்தை பெற்றுக் கொண்டது. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு விடயத்தில் நிறுவனம் ஆற்றிய பணிகளை அங்கீகரிக்கும் வகையில் மதிப்பிற்குரிய 'சமூக சந்தைப்படுத்தலுக்கான விருது' அளிக்கப்பட்டதன் மூலமே எக்ஸ் போலங்கா நிறுவனம் இந்த கௌரவத்தை தமதாக்கிக் கொண்டுள்ளது.

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீப் யூசுப் கூறுகையில், ''சர்வதேச அளவில் முக்கியமான நடுவர்களைக் கொண்ட ஜூரி சபையினால் எமது முயற்சிகள் புகழ்ந்துரைக்கப்படும் விதத்தில் இவ்வாறான அங்கீகாரம் ஒன்று கிடைத்துள்ளதையிட்டு எக்ஸ்போலங்கா நிறுவனத்தினராகிய நாம் மகிழ்ச்சியும், மிகுந்த கௌரவமும் அடைகின்றோம்'' என்றார். 'துணிச்சலுடன் சாதித்தல்' மனப்பாங்கு (Dare-to-do Attitude) என்ற நிறுவனத்தின் கொள்ளைக்கு கிடைத்த ஓர் அங்கீகாரமாக இவ்விருது அமைந்துள்ளது மட்டுமன்றி, எமது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முயற்சிகளை மேலும் பரந்துபட்டதாகவும் மாற்றுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''கூட்டாண்மை சமூகப் பொறுப்பு என்பது, எமது எக்ஸ் போலங்காவின் பெறுமதிகளை நிறுவனத்தின் எல்லைகளுக்கு அப்பாலும் வெளியுலகுக்கு வெளிக்காட்டும் வகையிலான நடவடிக்கையாகவுள்ளது. அது, நாம் அங்கத்துவம் வகிக்கும் சமூகங்களில் ஈடுபாடு காட்டுவதன் மூலம் சிறந்த பிரஜையாக திகழ்வது பற்றிய விடயமாகும். அது நாம் வாழும் மற்றும் தொழில்புரியும் கலாசார, சமூக மற்றும் பௌதீக சூழலை மேம்படுத்துவதற்கான ஒன்றிணைந்ததும் தனிப்பட்டதுமான அர்ப்பணிப்பாகும். எமது சமூகங்கள் சிறப்பாக வாழ்தல் என்பதும் எமது வர்த்தகத்தின் முக்கியமான எதிர்பார்ப்பாகவுள்ளது. அதன் படியே நாம் சுகாதாரம், சூழல், கல்வி, அனர்த்த நிவாரணம் மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களை மையப்படுத்தி செயற்பட்டு வருகின்றோம்'' என்று எக்ஸ் போலங்கா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மைத் தொடர்பாடல் பிரதம அதிகாரி பெடி வீரசேகர கூறினார்.

"நிறுவனத்துடன் தொடர்புபட்ட அனைத்து பங்குதாரர்களினதும் எதிர்பார்ப்பு தொடர்பில் கவனம் செலுத்துதல் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முக்கிய விழுமியமாக உள்ளது. நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் வர்த்தக ரீதியிலான அனைத்து செயற்பாடுகளும் சமூகத்தின் மீதான சிறந்த அக்கறையை மனதில் கொண்டு தர்மமாகவும் ஸ்திரமான் வகையிலும் முன்னெடுக்கப்படுவதை, மக்களை மையமாகக் கொண்ட இந்தக் கலாசாரப் போக்கு உறுதிப்படுத்துகின்றது. உலகம் எம்மிடமிருந்து அதிகமானவற்றை எதிர்பார்க்கின்றது. எனவே, எமது வாடிக்கையாளருக்கு தேவையானதை மட்டும் நாம் வழங்காமல், நிறுவனத்துடன் சம்பந்தப் பட்ட ஒவ்வொரு பங்குதாரரும் எம்மிடமிருந்து எதனை எதிர்பாக்கிறார்களோ அவற்றை எல்லாம் நாம் வழங்கியாக வேண்டும். அதனால் தான் சூழல், சமூகம் மற்றும் மனிதநேயம் போன்றவற்றுக்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்யும் விடயத்தில் எமது சக்திகளை மையப்படுத்தி செயற்படுவதுடன், சிந்தனை ரீதியான செயற்பாடுகளுக்கும் நாம் புத்துயிரூட்டி வருகின்றோம்'' என்றும் வீரசேகர மேலும் கூறினார்.



மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற சிறப்பு நிகழ்வில் 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்து மக்கள் வங்கி பருத்தித் துறைக் கிளையில் சிசு உதான கணக்குகளை பேணியதன் மூலம் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு வர்த்தகரும் சமாதான நீதிவானுமான சி.பத்மநாதன் மக்கள் வங்கியின் பரிசான ரூபா 5000 பணப்பரிசையும் ஏனைய பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கிறார். அருகில் மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் உள்ளார்.



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் சிசு உதான சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணிவரும் மாணவர் களில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவன் செல்வன் கமலேஸ்வரசர்மா பார்கவசர்மாவுக்கு முகாமையாளர் சு.இராச மனோகரன் பரிசை வழங்குகிறார். அருகில் ரி.சிவகுமாரன், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் உள்ளனர். (த)

# புதிய அத்தியாயம் ஒன்றுக்கு வித்திட்ட PCH நிறுவனம்

பெலிகுல்ஓயாவில் சப் பிரகமுவ பல்கலைக்கழகத் திற்கு இலவச சேவை மற்றும் திருத்த வேலைகளுக்கான உதவுப்பணியகமொன்றை அமைப்பதற்கு வித்திட்டுள்ள முதலாவது தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான PC Ho use PLC நிறுவன்ம் இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தனது அர்ப்பணிப் புடனான ஈடுபாட்டை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத் தியுள்ளது. இந்த உதவுப் பணியகமானது 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும், பீடத்திற்கும் சேவையளிப்பதுடன், கணினி ஆய்வு கூடங்கள் அனைத்தையும் இலவசமாகப் பேணிப் பராமரித்து, அனைத்து மாணவர்களுக்கும் வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான இலவச செய்முறை விளக்கங்களுடன் பயிற்சியையும் வழங்குகின்றது.

இந்த உதவுப்பணியகச் செயற்றிட்டம் தொடர்பில் PCH நிறுவனத்தின் பணிப் பாளர் சபைத் தலைவரான எஸ்.எச்.எம். [illegible] அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் [illegible] ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ள செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்ட முயற்சியே சப்பிரக முவ பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த முன்னோடிச் செயற்றிட்டமாகும். இத்தகைய உபகரணங்களையும், சேவைகளையும் வழங்கி எமது தேசத்தின் எதிர்காலத் தலைமுறைகளை ஆளுமைப்படுத்தும் வகையில் தகவல் தொழில்நுட்ப உதவி மற்றும் சேவைகளை வழங்குவதே எமது நீண்டகால இலக்காக அமைந்துள்ளது. வருகின்ற ஆண்டுகளில் எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்தவற்றை வழங்கி இத்தேசம் தகவல் தொழில்நுட்பத்தில் தங்கியுள்ளதை முன்னெடுக்கும் வகையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அமையம் ஒன்றை நிறுவுவதற்கும் நாம் உத்தேசித்துள்ளோம்.'' என்று குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் உணர்ச்சி
## சுயநலமா? பொதுநலமா?

(நேற்றைய தொடர்ச்சி)

இரண்டு சுயநல தலைவர்களின் எண்ணங்கள் இரண்டு குழுவில் வெளிப்படுகின்றது. இது வளர்ந்த நாடாக இருந்தால் எதிர்எதிர் அரசியல்கட்சிகளைச் சேர்ந்தோர் தேர்தல் நேரத்தில் மட்டும் போட்டியாளர்களாகவும் மற்ற நேரத்தில் சமகுடியரசு மக்களாகவும் நடந்துகொள்வார்கள்.



இதன் தலைவர்கள் ஆட்சியின் நேரத்தில்நல்ல எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டு அரசுக்கு ஒத்துழைக்கும்தலைவர்களாக இருக்கும்போது ஆரோக்கியமான சூழலை நம்பாக்கமுடியும். தனிப்பட்ட மனிதனின் சுயநலத்தைக் குறைக்க தனிப்பட்ட மனித அறிவு, கட்சி வயப்பட்ட, சாதி வயப்பட்ட, மத வயப்பட்ட உந்துதல் என்பவற்றால் முடிகிறது பலரில் வெளிப்படும் சுயநலத்தை குறைக்க ஒரே ஒரு வழி அந்தக் கட்சியின் இனத்தின் மதத்தின் தலைவர்களுக்கு சரியான அறிவும் கிடைக்க வேண்டும். சரியான அறிவால் உந்தப்பட வேண்டும்.

எனவே போட்டியின்போது மட்டும் போட்டி மற்ற நேரத்தில் முறையான வாழ்வு என்று மக்களின் மேம்பாட்டுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

உணர்ச்சிக் கொந்தளிப்பு தனிப்பட்ட நபரின் வாழ்விலும் சரி, கூட்டு வாழ்விலும் சரி பொருத்தமற்றது. நீதிக்காகப் பிறந்தால் அதனைச் சரியான வழியில் முறையான வழியில் அணுக வேண்டும். உணர்ச்சிக் கொந்தளிப்பு சுயநலத்துக்காகப் பிறந்தால் அதனை முறையான வழியில் தவிர்த்தல் வேண்டும்.

பிறர்நல எண்ணங்களில் வளரவேண்டும். கட்சி மனப்பான்மையில் வெளிப்பட்டால் நிச்சயமாக தலைவர்கள் சந்தித்து சமரசம் செய்தல் வேண்டும். இல்லையேல் பாதிக்கப்படுவது மக்கள்.

உணர்ச்சிக் கொந்தளிப்பை ஆற்றுப்படுத்துவதற்கு உரையாடல் மிக அவசியம். தவறோ, சரியோ பேசுவதற்கு நல்ல வாய்ப்பு அமைய வேண்டும். சரியான உரையாடல், சரியான எண்ணப் பகிர்வு மிக மிக அவசியம். இந்த வழியே மிக அற்புதமான வழி என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் கலவரத்தில் குளிர்காயும் தலைவனிருக்கும் வரை ஒரு நாடு எப்படி வளர முடியும்?

உன் சுயநலத்துக்காக உணர்ச்சிக் கொந்தளிப்பைப் பிறரில் உருவாக்கிவிட்டு நீ குளிர்காயாதே. உணர்ச்சிக் குவியல் ஒரு போதை. உணர்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுக் கிளம்புகின்றன.

ஆச்சரியம், சோகம், இரசிப்புத் தன்மை, வெறுப்பு, பொறாமை, பகைமை, பழி வாங்கும் எண்ணம், பாராட்டுதல், பரவசப்படுதல், கோபம், வெளி, பித்து இவைகள் யாவும் உணர்ச்சிகள் வெளிப்படும் கூறுகள்.

(முற்றும்)

[நன்றி: அரும்பு]

# பிறப்புப் பதிவை நிராகரிக்க எவருக்கும் அதிகாரம் இல்லை

## காணி மேலதிக மாவட்ட பதிவாளர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.17

பெற்றோரிடம் திருமண அத்தாட்சிப் பத்திரமோ பிறப்பு அத்தாட்சிப் பத்திரமோ இல்லாத காரணத்துக்காக பிள்ளைகளின் பிறப்புப் பதிவை நிராகரிக்க எந்தப் பதிவாளருக்கும் அதிகாரம் கிடையாது என யாழ். மாவட்ட காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச பதிவாளர்களின் வருடாந்த ஒன்றுகூடல் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரபாகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

பதிவாளர் தந்தையின் பெயரை உறுதிப்படுத்தும் பொருட்டு பெற்றோரின் திருமணப் பதிவுச் சான்றிதலை கோரலாம்.

அது இல்லாதபட்சத்தில் தந்தை நேரில் பிரசன்னமாகி தெரியப்படுத்தும்போது அதை ஏற்றுக் கொண்டு பதிவை மேற்கொள்ள வேண்டும்.

அப்படி இல்லாதபட்சத்தில் தந்தையின் விவரங்களை நீக்கிவிட்டுத் தாயின் விவரங்களுடன் ஒரு பிறப்பை பதிவு செய்யலாம் ஒரு பதிவாளர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு பிள்ளையின் பிறப்பை பதிவு செய்ய மறுக்கக்கூடாது.

வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் 3 அத்தாட்சிப் பத்திரங்கள் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்படுவதால் குடும்ப அங்கத்தவர்களின் விவரங்களில் உள்ள பிறழ்வுகள் காரணமாகப் பலர் அலைக்களிக்கப் படுகிறார்கள்.

திருமணப் பத்திரங்களில் நாம் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. அதை நீதிமன்றமே செய்ய வேண்டும்.

எனவே திருமணப் பதிவுகளில் மிகுந்த கவனமெடுத்து இயலுமானவரை பிழைகள் ஏற்படாத வகையில் உரியவர்களிடம் விவரங்களை பெற்று பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இன்றைய சமூகப் பிறழ்வுகளை தடுத்து நிறுத்தும் சமூகப் பொறுப்பும் பதிவாளர்களுக்கு உண்டு. ஒரு திருமணத்தை பதிவு செய்வதற்கு முன்பு மணமக்களின் பெற்றோர்கள் இரு பகுதியாரும் பிரசன்னமாயிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

அவர்கள் சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் கிராம சேவையாளர் மூலம் மணமக்களின் குடியியல் நிலையை உறுதிப்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

அல்லது உடனடிப் பதிவு செய்தலைத் தவிர்த்து 14 நாள்கள் முன்னறிவித்தலை மேற்கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இது தவறுகள் நிகழ்வதற்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கு போதிய கால அவகாசத்தை வழங்கும் என்றார்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி ஜெயரத்தினம், காணி மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள், பிரதேச பிறப்பு, இறப்பு திருமணப் பதிவாளர்கள், யாழ். மாவட்ட பதிவாளர் நாயகம் திணைக்கள ஊழியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-45)



நுணாவில்குளம் கண்ணகை அம்பாள் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபையினரால் நடத்தப்பட்ட திருவெம்பாவை பஜனை. (எ)

# கட்டுரை, சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர் உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியையும் முன்பள்ளிக்கிடையிலான சித்திரப் போட்டியையும் நடத்தியுள்ளது.

கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வருமாறு, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய தரம்- ஒன்பது மாணவி சி.பிரபாலினி முதலாம் இடத்தையும், அ.கனிஸ்ரா இரண்டாம் இடத்தையும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி தரம்-ஒன்பது மாணவி செ.தயானா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

சித்திரப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு-

சிறுப்பிட்டி வடக்கு கலைவாணி முன்பள்ளி மாணவி றவிராஜ் கட்வுனா முதலாம் இடத்தையும், புத்தூர் கிழக்கு மகாத்மாஜி முன்பள்ளி மாணவி சுதாகர் டினோஜா இரண்டாம் இடத்தையும், ஆவரங்கால் கிழக்கு லிங்கம் முன்பள்ளி மாணவி தவராசா றம்சிகா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (எ-14)

# புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் , கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 245 சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு மக்கள் வங்கியில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா வைப்பிலிட்டு புத்தகம் வழங்கப்பட்டது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 74 மாணவர்களுக்கே இப் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சமாசத்தின் தலைவர் செ.இரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மக்கள் வங்கி வடவலயப் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவுசபைத் தலைவர் இ.ராஜாராம், யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், யாழ்.மாவட்ட கூட்டுறவுசபை செயலாளர் திருமதி. வே. செல்வரத்தினம் மாவட்ட கூட்டுறவு அபிவி ருத்தி உத்தியோகத்தர் எஸ்.குணா ளர் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-311-ரி)

# முதியோர் இல்லத்துக்கு புதிய அத்தியட்சகர்

நாவற்குழி,ஜன.17

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகராக தங்கவடிவேல் திருபாகரன் மிக அண்மையில் கடமையைப் பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரியான இவர் பதவி உயர்வின் மூலம் அத்தியட்சகர் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(எ-121)

# புதிய தலைவர்

தென்மராட்சி,ஜன.17

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தெரிவு கடந்த 8ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் குழு தெரிவில் கிளைக் குழு உறுப்பினர்களின் தலைவராக இ.தெய்வேந்திர பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

இவர் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரும், யாழ்.பல்கலைக் கழக நூலக இளைப்பாறிய அலுவலரும் ஆவார். அதுமட்டுமன்றி எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேச மக்களை மீளக்குடியமர்த்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்ட வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## மாற்றுவழிகளைத் தேடவேண்டும்

*நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவின் 400 பக்க அறிக்கையை அடியோடு நிராகரித்துவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்தப் பதில் அறிக்கை 105 பக்கங்களில் அமைந்திருந்தது.*

*ஆணைக்குழு அறிக்கைக்கும் யதார்த்தத்துக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கூட்டமைப்பு அதில் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அண்மைக் காலமாக ஜனாதிபதி தெரிவித்துவரும் கருத்துக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளையும் யதார்த்தத்தையும்கூட கூட்டமைப்புத் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது.*

*அதன் அடிப்படையில், ''அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றினை வழங்குவதற்குத் தற்போதைய அரசு உண்மையில் தயாரில்லை'' என்ற தமிழ் மக்களின் அச்சத்தையும் வெளியிட்டுள்ளது.*

*அரசுடன் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொடர்ந்து பேசி வருகின்றபோதும் அது தொடர்பில் நம்பிக்கையீனத்தை கடந்த 6 மாதங்களுக்கும் மேலாகக் கூட்டமைப்பு வெளியிட்டு வருகிறது. ஆனால், தீர்வுப் பேச்சையும் தொடர்ந்தே வருகிறது. இதன் அர்த்தம் என்னவெனில் மாற்று வழிகள் ஏதும் இல்லாத நிலையில் பேச்சைவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வெளியேற முடியவில்லை என்பதுதான்.*

*பேச்சு மேசையின் மறு தரப்பில் உள்ள அரசோ, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இதய சுத்தியுடன் இல்லை. அது பற்றி ஜனாதிபதிக்கும் கோத்தபாயவுக்கும் மிக நெருக்கமாக இருக்கக்கூடிய, தனிப்பட்ட முறையில் இந்த விவகாரங்கள் குறித்து அவர்களிடம் பேசக்கூடிய ஒருவர் இப்படிச் சொன்னார்.*

*''தெற்கில் தங்கள் வாக்குகளை இழக்க அவர்கள் தயாராக இல்லை. தமிழர்களுக்கு எதைச் செய்து கொடுத்தாலும், எப்படி அணுகினாலும் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்கப் போவதில்லை; தங்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அரசுத் தலைவர்கள் நம்புகிறார்கள். அப்படி இருக்கும்போது தமிழர்களுக்கு எதையாவது கொடுக்கப்போய் தெற்கில் கிடைக்கும் வாக்குகளையும் ஏன் இழக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். முன்னர் தமிழர்களின் விடயத்தை நேர்மையாக அணுகினார்கள் என்று கணிக்கப்பட்ட அரசுத் தலைவர்கள்கூட இன்று அப்படித்தான் இருக்கிறார்கள்'' என்றார் அவர்.*

*ஆக மொத்தத்தில் அரசுடன் பேசி எந்தப் பயனும் இல்லை என்பதை அனைத்துத் தரப்பினரும் இப்போது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். எனவே நாம் இப்போது மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்கான நேரம் வந்தாகிவிட்டது.*

*எமது இலக்கு ஒன்றுதான் என்றால், தமிழர்களின் விடுதலை, சுயாட்சி, இறைமை என்பவற்றைப் பெறுவதுதான் எமது இலக்கு என்றால், பேச்சு மற்றும் தேர்தல் அரசியல் அனைத்தையும் புறந்தள்ளி வைத்துவிட்டு இலக்கை அடைவதற்கான மாற்றுவழிகளைத் தமிழர்கள் தேடவேண்டும்.*

*ஒரு தடவை தோற்றுவிட்டதனாலேயே எல்லாமும் முடிந்துபோய்விடாது. அப்படி நினைத்திருந்தால் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகி இருக்க முடியாது. தோமஸ் அல்வா எடிசனும் ஐயன்ஸ்டீனும் இத்தனை கண்டுபிடிப்புக்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகியிருக்க முடியாது. தோல்வியில் இருந்து மீள்வதற்குத் தேவையானதுஎல்லாம் மாற்றுவழிகளைத் தேடுவது மட்டுமே.*

# எஸ்.எம்.கிருஷ்ணாவின் வருகை பேச்சு முன்னேற உந்துதல் தரும்

தொகுப்பு: கோகுலன்

**சண்டே ரைம்ஸ் பத்திரிகை நேற்று முன்தினம் 15.01.2012 அன்று எழுதியிருந்த அரசியல் விமர்சனத்தில் இருந்து ஒரு பகுதி**

ஒன்றுக்கு மேலான காரணங்களின் நிமித்தம் வரப்போகும் வாரங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தீர்க்கமான சில தீர்மானங்களை எடுக்கவேண்டிய இக்கட்டானவையாக இருக்கப்போகின்றன.

நாடாளுமன்றத்தில் சௌகரியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கிறது. பிரிவினைவாதப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இருந்தபோதும் அவருடைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது. பல விடயங்கள் - பிரச்சினைகள் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. இவைகள் பற்றி எடுத்துக்கூற எதிர்க் கட்சிகளிடம் திராணியில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னான மிகப் பெரிய அமைச்சரவையைக் கொண்டிருந்த போதிலும் சில முக்கிய துறைகளில் நல்லவிதமான ஆட்சித் திறனைக் கொண்டிராமையானது உயர்மட்டங்களில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. இந்த நிலைமைகளினால் கவலைக்குள்ளாகியுள்ள ஜனாதிபதியானவர் இவைகளை நேர் படுத்துவதற்கான யோசனைகளில் இறங்கியிருப்பதாக சிரேஷ்ட அமைச்சர்கள் கருதுகிறார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இணைக் கட்சிகளின் கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி தலைமை வகித்தார். பல முக்கிய அமைச்சர்களும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். அரசு எதிர்கொள்ளும் பல முக்கிய விடயங்கள் ஆலோசிக்கப்பட்டன. பல்வேறு துறைகளையும் சேர்ந்த ஊழியர்களின் சம்பளம், பல்கலைக்கழகங்களில் தலைதூக்கியுள்ள மாணவர் அமைதியின்மை மற்றும் உத்தேச தனியார் பல்கலைக் கழகச் சட்டம் முதலிய விடயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**தனியார் பல்கலை. பிரச்சினை**

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உத்தேச சட்டம் தொடர்பாக விளக்கம் அளித்தார். அமைச்சர் வீரவன்ஸ, பேசுகையில் பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை மிகக் கவனமாகக் கையாளப்படவேண்டிய ஒன்று என்று கூறிய அவர் சில உபவேந்தர்கள் மாணவர் பிரச்சினைகளை சாதுர்யமாகக் கையாளத் தவறிவிடுகிறார்கள். பாடசாலைப் பிள்ளைகளின் பிரச்சினைகளில் ஆசிரியர்களைப் போல இவர்களின் அணுகுமுறை இருக்கின்றது. ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை கொண்டிருந்தபோதும் தனியார் பல்கலைக் கழகங்கள் அமைப்பது தொடர்பான வெள்ளை அறிக்கையை கல்வி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சம்பிக்க ரணவக்கவும் 1985 இல் வெள்ளை அறிக்கையானது அரசுக்கு தலையிடுவதற்கான சகல அதிகாரங்களையும் வழங்குவதாக இருந்தது என்பதை சுட்டிக்காட்டினார். உத்தேச தனியார் பல்கலைக்கழகச் சட்டம் தொடர்பில் மேற்கொண்டு அரசு எதுவும் செய்யப்போவதில்லை என்பது

> சுதந்திரத்துக்குப் பின்னான மிகப் பெரிய அமைச்சரவையைக் கொண்டிருந்த போதிலும் சில முக்கிய துறைகளில் நல்லவிதமான ஆட்சித் திறனைக் கொண்டிராமையானது உயர் மட்டங்களில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை தெரியவந்தது.

**அமைச்சரவை மாற்றமில்லை**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது சகோதரரும் தற்போதைய சபாநாயகருமான சமல் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கத் திட்டமிட்டு வருகின்றார் என்று பத்திரிகைகளில் வந்த செய்தியை மறுத்தார். அங்கிருந்த பிரதமர் டி.எம்.ஜயரத்னாவின் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. அப்படியான ஒரு செயல் பற்றி தாம் திட்டமிடவில்லை என்றும் இம் மாதிரியான செய்திகள் தமக்கும் அரசுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்த மாதிரியான ஒரு செய்தி ஊடகங்களில் வெளிவந்தமைக்கு அமைச்சரவை உறுப்பினர் ஒருவர்தான் பொறுப்பாக இருந்துள்ளார் என்று கூறிய ஜனாதிபதி அவர் யார் என்பதைக் கூறவில்லை.

**கிருஷ்ண விஜயம்**

உள்ளூர் விவகாரங்கள் இவ்வாறு இருக்கையில் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் இந்திய வெளியுறவு அமைச்சருடன் அவர் நடத்தவிருக்கும் பேச்சுக்களின் போது சூடுபிடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இலங்கைப் பயணத்தின் போது இரு தரப்பு பிரச்சினைகள் பேச்சுக்களில் இடம்பெறும் என்பதுபோக அவைகளில் தாக்கம் பெரிதாக இருக்கும் என்று கருதுவதற்கு இடம் உண்டு. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் இதில் முக்கிய இடம் பெறலாம். இந்த விடயத்தில் இரு நாடுகளும் பலத்த கருத்து மாறுபாட்டுக்கு உள்ளாகியுள்ளன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதுடன் அதற்கு அப்பாலும் சென்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகின்றது. இது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்கள் இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் அஷோக் கே.காந்தாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் இரு தரப்பினரும் தமது நிலைப்பாடுகளை கடுமையாக வலியுறுத்தியுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தற்போது நடக்க விருக்கும் பேச்சுக்கள் எந்தளவு கடினமாக இருக்கப்போகிறது என்று தெரியவில்லை. இந்திய வெளியுறவு அமைச்சர் வருகையை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டதைப் போல் தெரிகிறது. அவர் இப்போது செனகலிலும், பேர்க்கினா பாஸ்கோ நாடுகளிலும் பயணம் மேற்கொண்டிருக்கின்றார்.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் அவர் கலந்து கொள்வதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த நிகழ்வை இலங்கை முற்றாகப் பகிஷ்கரித்துவிட்டது. லண்டனிலிருந்து செயல்படும் உலக தமிழ்ப் பேரவைக்கு மகாநாட்டுக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

**பீரிஸ் இன்றியே பேச்சு**

பீரிஸ் இலங்கையில் இல்லாவிட்டாலும் இந்திய விவகாரங்களை ஜனாதிபதியின் செயலகமே நேரடியாகக் கவனித்துக் கொள்வதால் பேச்சுக்கள் பீரிஸ் இல்லாமலே மேற்கொள்ளப்படும் என்று தெரிகின்றது.

மரக்கறிகளை பிளாஸ்டிக் கூடைகளில் விநியோகிக்க வேண்டும் என்ற பிரச்சினை பெரும் தலையிடியாக வளர்ந்தபோது ஜனாதிபதியே தலையிடவேண்டியேற்பட்டது. அடுத்தது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுவதில் ஏற்பட்ட குழறுபடிகளாகும். இதற்கு பரீட்சைத் திணைக்களமே பொறுப்பு என்றாலும் மீள் ஆய்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தாங்களே கட்டணம் செலுத்தவேண்டியதாய் இருந்தது. புதிதாக அறிமுகப்படுதப்பட்ட Z ஸ்கோர் முறையானது 300 ஆயிரம் மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் கவலைக்குள்ளாக்கி விட்டது. இந்தப் பிரச்சினை வளர்ந்து சிக்கலான நிலையில் கல்வி அமைச்சு கையறு நிலைக்குள்ளானது.

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படும் போது உள்நாட்டு வர்த்தகம் மற்றும் கல்வி அமைச்சுக்களின் செயற்பாடுகளும் கருத்தில் கொள்ளப் படுவதாகவிருக்கும் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவிக்கிறார்கள்.

**மேர்வின் சில்வா விவகாரம்**

அரசுக்கு கவலையளிக்கும் இன்னொரு விவகாரம்தான் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் விவகாரங்கள் அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பானதாகும்.

களனி பிரதேச சபை உறுப்பினர்கள் சில்வாவை சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவியிலிருந்து தூக்கிவிடவேண்டும் என்று கோரியுள்ளார்கள். இதற்கு அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை அவர்கள் முன்வைத்துள்ளார்கள். ஊழல், பதவிநிலையை துஷ்பிரயோகம் செய்தமை, கப்பம் வாங்குதல் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டமை போன்றவை இவைகளில் சிலவாகும். பேலியாகொடவில் அவரது கையாள்கள் வியாபாரிகளிடம் கப்பம் வசூலித்துக் கொண்டிருந்த போது சுற்றிவளைக்கப்பட்ட நிகழ்ச்சி மிக அண்மையில் இடம்பெற்ற ஒன்றாகும்.


குறித்த வியாபாரிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டனர். அதைவிட மிக வலுவான ஒரு குழு மில்லியன் கணக்கில் கப்பம் அறவிடுவதில் ஈடுபட்டிருந்தமை பற்றிய தகவல் இப்போது வெளிவந்துள்ளது.

**இக்கட்டான நிலையில் அரசு**

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு தொடரப் போவதில்லையென்று அரசுத்தரப்பில் கூறப்படும் அதே வேளை கூட்டமைப்பானது பேச்சு நடத்த முடியும் அதற்குத் தாங்கள் விருப்பம் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருப்பதானது அரசை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

*(27ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டத்தின் நூலில் தொங்கும் சிறுவன்.

# முயற்சி திருவினையாக்கும்

■ தே.பி.அன்ரன்

யாழ். நகரைச் சென்றடைய வேண்டும் என்ற அவசரத்தில் புருத்தித்துறை வீதியில் வாகனம் விரைந்து கொண்டிருக்கிறது. வல்லையை எட்டிப் பிடிக்கையில் வீதியோரத்தில் இரு பக்கங்களிலும் பல வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் ஆள்கள் பலர். எல்லோர் பார்வையும் வயலோரமாகத் திரும்பியிருக்கிறது. இயல்பான செய்திப் புத்தி இயங்க, "வேகத்தை குறை, ஏதோ பிரச்சினை" என்றேன் வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த நண்பனிடம்.

வாகனம் மெல்ல ஒதுங்கி வீதி ஓரத்தில் சரிகையில், அங்கே நின்றவர்கள் எல்லோரும் எங்கே பார்க்கிறார்கள்..? பார்வை திரும்புகிறது. "எவ்வளவு பெரிய பட்டம்?" இதுதான் வாய்கள் உதிர்த்த முதல் வார்த்தை.

கமெராவை எடுத்துக் கொண்டு காரைவிட்டுக் கீழே இறங்குவதற்குள் பட்டம் மேலெழுந்துவிட்டது. இடையில் நூலில் தொங்கிக் கொண்டிருந்த சிறுவர்களை 5 அடி உயரத்துக்குத் தூக்கி எறிந்து விட்டுப் பறந்துவிட்டது. 'ஜஸ்ட்டு மிஸ்ட்டு' ஆகிப் போனதால், இவ்வளவு பெரிய பட்டத்தை ஒரு தடவையிலா ஏற்றிவிடப்போகிறார்கள்..., கீழே இறங்கியதும் அடுத்த முறை ஏற்றுவதற்குள் பட்டம் எவ்வளவு பெரியது என்பதைக் காட்ட ஒரு படம் எடுத்து விடலாம் என்ற என் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றமே மிச்சம்.

வயல் வரம்புகள் ஊடாகப் பட்டத்தை இழுத்துக் கொண்டு அவர்கள் ஓடி மறைந்துவிட்டார்கள். ஆனால் பட்டத்தின் வால் இன்னும் என் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அவ்வளவு பெரிய பட்டத்தை மனிதர்களால் தாங்கிப் பிடிக்க முடியாது என்பதால், ஒரு லொறியை நிறுத்தி அதன் குறுக்கே 30 அடி இரும்புப் 'பைப்'புகளைச் சாத்தி வைத்து அதில்தான் பட்டத்தை நிலைக்குத்தாக நிறுத்தி இருந்தார்கள். லொறி நின்ற இடத்திலிருந்து 500 மீற்றல் தூரத்துக்கு அப்பால் இருந்து 30 முதல் 40 சிறுவர்கள் இழுத்துக் கொண்டு ஓட பட்டம் பறந்துபோய்விட்டது, நாங்கள் எட்டமுடியாத இடத்துக்கு.

சரி! பட்டத்து உரிமையாளரையாவது பார்த்துப் பேசிவிடலாம் என்று லொறியை நெருங்கினோம். "எல்லாரும் ஓண்டுக்க ஓண்டுதான், என்றாலும் பட்ட உரிமையாளரப் பாக்க வேணும் என்றால் அதோ.... அந்த வயலுக்க கிடக்கிற மரத்தடிக்குப் போக வேணும்" என்றார் லொறிச் சாரதி.

அந்த இடத்துக்குப் போய்ச் சேர வழிகாட்ட மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் இருவர் முன்வந்தார்கள். தொடர்ந்து சென்ற எங்கள் வாகனத்தை ஒரு குறுகிய சந்தில் நிறுத்தச் சொல்லிவிட்டு, தங்கள் மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி வயல் வரம்புகளுக்கூடாக அழைத்துச் சென்றார்கள்.

தங்கள் செயலைப், பெருமையைப் பற்றிச் செய்தி போடப் போகிறார்கள் என்கிற மகிழ்ச்சியும் குதூகலிப்பும் அவர்களை உற்சாகத்துடன் இயக்கிக் கொண்டிருந்தது. வரம்பிலேயே மோட்டார் சைக்கிள்களை நிறுத்திவிட்டுப் வயல்களினூடே - வெள்ளாமைக்கு நடுவே - எங்கள் நடைபயணம் தொடர்ந்தது.

> "
> **ஒவ்வொரு வருசமும் ஏத்திறம் ஏத்திறம் எண்டு இவங்கள் பேக்காட்ட, நிறையச் சனம் வந்து நிண்டு பாக்கிறதுகள். ஆனால் ஏதாவது ஒண்டச் சொல்லி பட்டம் ஏறாது. இந்த முறை ஒரு மாதிரி ஏத்திப்போட்டாங்கள் பெடியள்**

வழி தேடவேண்டிய சிரமம் இருக்கவில்லை. முன்னால் காடு செருக்கி வழி ஏற்படுத்தியதைப் போன்று, கதிர் வந்திருந்த நெற் பயிர்கள் மண் தொட்டு உயிர்விட்டிருந்தன. ஏற்கனவே 40, 50 பேர் மிதித்து உழக்கிச் சென்ற அந்தப் பாதைகள் வழியே செல்வதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை.

பட்டம் பனையில் - ஒன்றல்ல இரண்டு - கட்டப்பட்டு நிலை நிறுத்தப்பட்டிருந்தது. நூல் வழுகி பறந்துவிடாமல் இருக்க, இரண்டு பனைகளில் கட்டப்பட்ட பின்னரும் ஒருவர் நூலின் நுணியைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

பட்டத்தின் உரிமையாளர் என்று ஒருவரை ஏனைய இளைஞர்கள் அறிமுகப்படுத்தினார்கள். விஜயரட்ணம் டக்சண்ணா. 19 வயதேயான அவருக்கு தச்சு வேலைதான் தொழில். "ம்..." என்ற ஓசையுடன் காற்றில் விரல்களை அசைத்துக் கணக்கிட்டுவிட்டு, "மொத்தம் ஒரு 75,000 ரூபா செலவழிச்சிருக்கிறம்" என்றார்.

பட்டம் 24 அடி நீளமும் 23 அடி அகலமும் கொண்[illegible] [illegible] லும், அது 15 மில்லி கனம் கொண்ட 'நைலோன்' கயிறு என்பதே உண்மை.

அந்த இளைஞர் கூட்டமே குதூகலத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. காரணம், 3 வருட முயற்சிக்குப் பின்னர் இந்த முறைதான் அவர்களின் முயற்சி வெற்றி அளித்திருக்கிறது. "ஒவ்வொரு வருசமும் ஏத்திறம் ஏத்திறம் எண்டு இவங்கள் பேக்காட்ட, நிறையச் சனம் வந்து நிண்டு பாக்கிறதுகள். ஆனால் ஏதாவது ஒண்டச் சொல்லி பட்டம் ஏறாது. இந்த முறை ஒரு மாதிரி ஏத்திப்போட்டாங்கள் பெடியள்" என்கிறார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர்.

"வல்லைத் துவாளி பிள்ளையார் கோயிலில் பூசை எல்லாம் போட்டதுக்குப் பிறகு, கோயிலுக்கு முன்னாலை வச்சு மூன்று நாளாத்தான் இந்தப் பட்டம் கட்டினது. கிட்டத்தட்ட 30 அடி நீளமான 4 மூங்கில் தடியள் பாவிச்சிருக்கிறம்" என்கிறார் லுஜிந்தன். அவரும் டக்சண்ணாவின் உறவினர். "மூங்கிலுக்கு பளை வரைக்கும் போய்த் தேடி இல்லாம திரும்பி வந்து, பிறகு மிருசுவிலில் ஒரு கோயில் வளவிலதான் வெட்டினாங்கள்" என்று சொல்லும்போது டக்சண்ணாவின் முகத்தில் பெருமை கொப்பளிக்கிறது. துரைராஜா பிரதீபன் என்ற மற்றொரு இளைஞரும் இந்தப் பட்டத்துக்கு நிதியும் உதவியும் வழங்கியிருக்கிறாராம்.

"பட்டம் இறக்கும்போது கொண்டாட்டம்தான். இப்ப கொஞ்ச நேரத்தில பட்டாசுகள் சிதறும். 20,000 ரூபாவுக்கு வாங்கி வைச்சிருக்கிறம்" என்கிறார் உற்சாகத்துடன் மற்றொரு இளைஞர்.

அடுத்த வருடம் இதை விட[illegible] பட்டம் விடுவது[illegible]ப்பிட்டி இளைஞர்களின் திட்டமாம்.

# கிளிநொச்சிக்கான புதிய அரச செயலகம் திருநகரில் அமையும்

■ கி.குமார்

வன்னியில் தற்போது நடைபெற்றுவரும் அபிவிருத்தி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து கிளிநொச்சி அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் உதயனுக்கு வழங்கிய தகவல்களின் தொகுப்பு வருமாறு:-

### பூநகரியின் உவர் பாதுகாப்பு

பூநகரியில் கூடுதலாக உவர் தடுப்பு நிலக்கட்டு அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. படிப்படியாக இந்தப் பணிகள் நடைபெறுகின்றன. பொதுவாக வயல் நிலங்களைப் பாதிக்கும் இடங்களில் உவர் தடுப்பு நிலக்கட்டு அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியுடன் இது நடைபெறுகிறது. அங்கு மேலும் நிலப்பகுதி உவராகின்றது என்பதான தகவல் ஏதும் எனக்குக் கிடைக்கவில்லை.

### அக்கராயன் பிரதேச செயலக விரிவாக்க முயற்சி

எல்லை மீள் நிர்ணயக்குழு கிளிநொச்சிக்கு வந்தபோது அக்கராயன் பிரதேச செயலக விரிவாக்கம் தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கவில்லை. மக்களின் கருத்துக்கள் வேறுபட்டவையாக இருந்ததனால் அந்த நிலை ஏற்பட்டது. இப்போது மீண்டும் மக்கள் கருத்துக்களைக் கேட்டு அனுப்புமாறு எமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

அதேவேளை, அங்கு புதிய பிரதேச செயலகம் ஒன்றை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. புதிய பிரதேச செயலகம் ஒன்றை அமைக்கக் குறைந்தது 50 கிராம அலுவலர் பிரிவுகளாகவது இருக்க வேண்டும். கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 42 கிராம அலுவலர் பிரிவுகள்தான் இருக்கின்றன. இவற்றைப் பிரிக்க வேண்டுமானால் ஒரு பகுதியில் குறைந்தது 20 கிராம அலுவலர் பிரிவுகள் இருக்க வேண்டும்.

அக்கராயனை மையமாக வைத்து அப்படிப் பிரித்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் இல்லை. இங்குள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலும் குறைந்தளவு மக்களே வசிக்கிறார்கள். இதுவும் புதிய பிரதேச சபையை உருவாக்குவதற்குச் சாதகமற்ற நிலையை ஏற்படுத்துகிறது.

எனினும் பரந்தளவு பகுதிகள் ஒரு பிரதேச செயலகத்துக்குள் அடங்குவதால் அதனை நிர்வகிப்பது சிரமமானதாக இருக்கிறது. இந்த அடிப்படையிலேயே புதிய பிரதேச செயலகத்தின் தேவை அவசியப்படுகிறது. போக்குவரத்து வசதிகள் மேம்பட்டால், பிரதேச செயலகத்தைப் பிரிக்காமல் பணிகளை விரைவுபடுத்தக்கூடிய சூழல் தோன்றலாம்.

எப்படி இருந்தாலும் இந்த விடயத்தில் மக்களின் கருத்தை அறியும்படி கரைச்சி பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்தி உள்ளோம். அரசியல்வாதிகளும் கலந்துரையாடி நல்லதொரு முடிவை எடுத்தால் பின்னர் அதனடிப்படையில் பணிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

### ஆனையிறவில் மீள்குடியமர்வு

ஆனையிறவில் மக்கள் மீளக்குடியமர எந்தத் தடையும் இல்லை. மக்கள் வந்தால் மீள்குடியமர்வு இடம்பெறும். மக்கள் எந்த நேரத்திலும் மீளக்குடியமரலாம். எந்தத் தடையும் இல்லை. எனினும் கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் மக்களை மீளக்குடியமர்த்தும் முயற்சிகள் முன்னேற்றம் அடையவில்லை. பளையில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை. அதனால் அங்கும் மீள்குடியமர்வு இன்னும் சாத்தியமாகவில்லை.

### திருநகரில் புதிய அரச செயலகம்

திருநகரின் சோமில் காணி என்ற இடத்தில் புதிய அரச செயலகம் அமைக்கப்பட உள்ளது. கரைச்சி பிரதேச சபையின் பின்புறமாக இந்தப் புதிய அரச செயலகம் கட்டப்படும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டத்தின்படிதான் அரச செயலகம் புதிய இடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

தற்போது அரச செயலகம் உள்ள பகுதி வர்த்தகப் பகுதியாக மாற்றியமைக்கப்பட உள்ளது. ஏ-9 பாதையும் அகலமாக்கப்படுவதானால் இங்கு வர்த்தகம் அதிகரிக்கும். எனவே அதனை எதிர்கொள்ளத்தக்க வகையில் செயலகம் இடம்மாற்றப்படவுள்ளது. முதல் கட்டப் பணிகள் விரைவில் 200 மில்லியன் ரூபா செலவில் தொடங்கப்படும்.

### கிளிநொச்சி முன்னேற வேண்டும்

அரசின் இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சிறிய, நடுத்தர வியாபார நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி கிளிநொச்சியில் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யவேண்டும். குறிப்பாகப் பெண்கள் மத்தியில் உள்ள சிறு வியாபாரக் குழுக்களைப் பலப்படுத்தி வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் நான் கூடுதல் அக்கறை செலுத்துகின்றேன்.

கிளிநொச்சியில் 3,000க்கும் மேற்பட்ட விதவைகள் உள்ளனர். 5,000க்கும் மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன. அவர்கள் சமூகத்தில் உயரிய நிலையில் வாழ்வதற்கான நடவடிக்கைகள் கவனம் செலுத்த வேண்டும். [illegible]பதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிப்பு - மகிழ்வு - ஆனந்தம்

"எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது'' என்று கூறிக் கொண்டு ஒருத்தர் வந்தார். ''என்ன விசயம்? ஏன் இப்படிக் கூறுகிறீர்கள்'' என்று கேட்டபோது, ''எங்கள் வீட்டில் தினம் மூன்று வேளையும் ஒரே மாதிரிச் சாப்பாடு. வித்தியாசமே கிடையாது. இப்படியே மூன்று மாதங்களாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அதைவிடவும் பட்டினி கிடந்து செத்துவிடலாம் என்று தோன்றுகிறது'' என்றார்.

ஒரு பெரியவர் சொன்ன தத்துவத்தைச் சொல்வதற்கு ஆள் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தவருக்கு ஒருத்தர் கிடைத்த சந்தோசம்; விடுவாரா? சொல்ல ஆரம்பித்தார்.

நாம் அனுபவிக்கின்ற உணர்வுகளில் களிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் இந்த மூன்றுக்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. மேலோட்டமாகப் பார்ப்பதற்கு இது மூன்றும் ஒரே மாதிரித் தோன்றும். ஆனால் அது அப்படி இல்லை. களிப்பு என்பது உடம்பைப் பொறுத்தது. மகிழ்வு என்பது மனதைப் பொறுத்தது. ஆனந்தம் என்பது ஆன்மாவைப் பொறுத்தது. இந்த மூன்று வகையான குணங்களின் தன்மையும் வேறுவேறே.

முதலில் களிப்பு என்பதைப் பற்றி நோக்குவோம்.

எமது புலன்களுக்குக் களிப்பைத் தரக் கூடிய பொருள்களுக்கு சில விசேட குணங்கள் உண்டு. தான் வைத்திருக்கும் ஒன்றைப் பிறர் எடுத்துக் கொண்டால் அதன் மீதான ஆசையைக் குறைத்துவிடும். உணவு, உடை இவையெல்லாம் களிப்பைத் தரக்கூடிய பொருள்கள்.

உதாரணத்துக்கு ஒரு சாப்பாட்டு மேசையில் ஒரு பாத்திரத்தில் பத்து இட்லிகள் இருக்கின்றன. அதில் இரண்டு இட்லியை நாம் சாப்பிடுகிறோம். முதலில் சாப்பிடுகின்ற இரண்டு இட்லிக்கும் பின்னர் சாப்பிடுகின்ற இட்லிக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. ஆரம்பத்தில் களிப்பைத் தரும். சாப்பிடச் சாப்பிட வெறுப்பாகிவிடும்.

அதைப் போன்று நாம் ஒரு சட்டையை எடுத்துப் போட்டால், இது இன்னொருத்தரிடம் இல்லை என்கின்றபோது களிப்பு ஏற்படும். புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய இதுபோன்ற பொருள்கள் எல்லாம் முதல் தடவை எமக்குக் கொடுக்கின்ற களிப்பை, இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியில் வெறுப்பாகவே மாறிவிடும்.

ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர் ந்து சாப்பிடுகிறோம் என்றால் முதல் இட்லி தரக் கூடிய சுவையை முப்பதாவது இட்லி தருமா? முதல் தடவை புதுச் சட்டையைப் போட்டுக்கொள்ளும்போது எமக்கு ஏற்படுகின்ற களிப்பு, அதையே நூறாவது தடவையாகப் போட்டுக் கொள்ளும்போது இருக்காது. இதுதான் களிப்பு. அதாவது சீக்கிரமே சலிப்பைத் தரக்கூடியது ஒருத்தர் தாம் வைத்திருக்கும் ஆடையை எடுத்துக் கொண்டாலும் இன்னொருத்தருக்கு அதன் மீது இருக்கும் விருப்பு, களிப்பு குறைந்து போகக் கூடியது. ஆனால் மகிழ்வு என்பது அப்படி இல்லை. ஒருவர் அனுபவிப்பதனால் இன்னொருத்தருக்குக் குறைந்து போகாது. காலையில் சூரியன் உதயமாவதைப் பார்த்து சந்தோசப்படலாம்.

ஒரு நல்ல சங்கீதத்தைக் கேட்கிறோம். ஓர் அழகான ஓவியத்தை ரசிக்கிறோம். நாங்கள் ரசிக்கின்ற அதேநேரத்தில் இன்னொருத்தரும் அதை ரசிக்கலாம். அதனால் அது குறைந்து போகப் போவதில்லை. இது 'மகிழ்வு'.

ஆனால் ஒன்று, ஒரே பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தால் கடை சியில் அலுப்புத் தட்டும். அதாவது மகிழ்வு என்பது எப்படியென்றால் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதனால் குறையாது. ஆனால் மீண்டும் மீண்டும் அனுபவிக்க வழங்கும்போது முதலில் மகிழ்வு அதிகரித்து அதன்பின் அது மங்கி மறைந்து போகக் கூடியது.

மூன்றாவது, சுகம் தரக்கூடியது 'ஆனந்தம்'.

இது எப்படியென்றால், எமக்கு உள்ளேயிருந்து சுரக்கிறது. மனம் சலனங்களில் இருந்து விடுபடும்போது இந்த ஆனந்தம் எமக்குக் கிடைக்கும். இது நிலையான சுகம். ஆத்ம சுகம். களிப்பிலிருந்து மகிழ்வுக்கும் மகிழ்வில் இருந்து ஆனந்தத்துக்கும் செல்வதுதான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

★★★

ஒருத்தர் '' ஒரு சாப்பாட்டு மேசையில் ஒரு பத்து இட்லியை வையுங்கள். எதிரில் இன்னொருத்தரை உட்கார வையுங்கள். நான் களிப்பு, மகிழ்வு எல்லாம் தாண்டி நேரடியாக ஆனந்தத்துக்குப் பயணம் செய்து காட்டுகிறேன்'' என்றார்.




''எப்படி? என்ன செய்வீர்கள்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டதற்கு ''இரண்டு இட்லி சாப்பிட்டால் தானே களிப்பு. நான் பத்து இட்லிகளையும் மொத்தமாகச் சாப்பிடுவேன். அடுத்தவனுக்கு எதுவும் கிடைக்காது. அவனுக்கு கிடைக்காதபடி நாம் சாப்பிடுகிறோமே; அதுதானே எமக்கு ஆனந்தம்'' என்றான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பல நூற்றாண்டு கால சிறப்புடைய புலோலி மனோன்மணி அம்பாள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



பிரம்மஸ்ரீ பிரேமசந் திரக் குருக்கள் புலோலி மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கு பிரதம குருவாக இருந்த காலத்திலே தான்1987ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது

புலோலி தன்னில் தெய்வீக அருள்பரப்பும் அன்னை மனோன்மணி அம்பாளுக்கும், நல்லருள் சுரக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், ஜீர்னோர்த்தாரண மகாகும்பாபிஷேகம் வித்தியாசாகர நியாய சிரோமணி கி.சுப்பிரமணிய சாஸ்திரி தலைமையில் நடத்தப்பெற்றது.

இதற்கு பிரதம குருக்களாக இ.குமா ரசாமி குருக்கள் செயற்பட்டார். ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பிரேமச்சந்திர குருக்களின் சிறப்பான நெறிப் படுத்தலில் இந்தக் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.

அம்பாளிளை அன்பர் ஒருவர் பழித்துரைத்தார். அந்த அன்பருக்கு பெருவலி ஏற்படலாயிற்று. பெருவலியைக் குணப்படுத்த பல்வேறுபட்ட பரிகாரங்கள் பரிகரிப்புக்கள் செய்தும் பயன் கிட்டவில்லை. ஆலய வீதியில் உள்ள வைரவர் குடிலினை அண்டி நின்ற ஒதிய விருட்சத்தின் குழையே பெரு வலியியை இல்லாமற்செய்தமை முதலி அம்பாளின் புதுமையை புலப்படுத்துகின்றது.

> செங்கமாரி நோயால் பீடிக்கப்பட்ட அம்பாளின் அடியவருக்கு கை, கால்கள் செயலிழந்தன. அந்த அடியவர் அம்பாளே தஞ்சமெனக் கொள்ள, சிலவாரங்களில் மருந்து எதுவுமேயின்றி நோய்குணமாகியது பின்னால் அவர் சென்றார்

ஆலயத்திலே மகா சிவராத்திரி கொண்டாடுவது வழமை. இந்த ஆலயத்திலே சிவ விரதத்தை அனுஷ்டிப்பதற்கென கொழும்பில் இருந்து அடியவரான அரச உத்தியோகத்தர் ஒருவர் வருகை தந்தார். ஆனால் மகாசிவராத்திரி அன்று அவர் தற்செயலாக தவறுதலாக மாமிசம் உண்டுவிட்டார். பின் தன் தவறை உணர்ந்த அந்த அடியார் அன்று கோயிலுக்குச் செல்லாமல் இருந்து விட அவருக்கு வயிற்றுக்குத்து ஏற்படலாயிற்று. வயிற்றுக்குத்தை நீக்குவதற்கு ஆங்கில, தமிழ் வைத்தியங்கள் பயனளிக்கவில்லை. இறுதியாக முதலி அம்பாளின் அடிப்பொடி ஆற்றி வயிற்றுக்குத்து நின்று ஆறுதல் அடைந்தார்.

அம்பாளின் அடியவர் ஒருவருக்கு இதயத்தில் துவாரம் ஏற்பட்டது. சிகிச்சை பெறவென யாழ். போதனா வைத்தியசாலைக்கு கூட்டிச்சென்றனர். நோயாளியை பரிசோதித்த மருத்துவர்கள் நோயின் தீவிரத்தை உணர்ந்து ''ஓரிரு தினங்களில் உயிர் பிரிந்துவிடும் ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டிச்சென்று வெட்டிப்போய், விரும்பியதை உண்ணக் கொடுங்கள் என்று கூறி கைவிரித்துவிட்டனர். வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நோயாளி தன் வீடு செல்லாது முதலி அம்பாளினைக் கொண்டு சந்நிதானம் தஞ்சமென சரணடைந்து ஆலய வாசலிலே இருந்த அம்பாளின் பிரசாதங்களை உட்கொண்டு இருந்தார். என்ன அதிசயம் வைத்தியரே கைவிட்ட மருந்துகள் இல்லையெனக் கூறிய நோயாளி அம்பாள் ஆலயத்திலே அம்பாளின் பிரசாதங்களை உண்டமையால் நோய் குணமாகியது. பின் அவர் திருமணம் செய்து சிறப்பாக வாழ்கிறார்.

[illegible] ஒருவர் மார்பகத்துக்கு அடியில் புதுவியாதியால் பீடிக்கப்பட்டு வேதனைப்பட்டார். சத்திரசிகிச்சை செய்தும் குணமாகாது போகவே முதலி ஆச்சிக்கு நேர்த்தி வைத்து முழு மனதுடன் பூசித்து வந்ததன்பயனாய் நோய் குணமாகியது. அந்த அன்பர் பின் திடகாத்திரமாக வாழ்ந்து அரச சேவையிலும் பணியாற்றினார்.

இங்கு குடிகொண்டு அருளாட்சி செய்து கொண்டிருக்கும் மனோன்மணி தாய் ஊமைக் குழந்தை ஒன்றையும் பேச வைத்தார். செங்கமாரி நோயால் பீடிக்கப்பட்ட அம்பாளின்அடியவருக்கு கை, கால்கள் செயலிழந்தன. அந்த அடியவர் அம்பாளே தஞ்சமென கொள்ள சிலவாரங்களில் மருந்து எதுவுமேயின்றி நோய்குணமாகியதோடு அம்பாள் அழகாக வீற்றிருக்கும் சிங்கவாகனத்தையும் சுமக்க வைத்தது அம்பாளின் அதிசயமான அற்புதங்களை காட்டுகின்றது.

இவ்வாறாக பல புதுமைகளையும் சிறப்புக் களையும் தன்னகத்தே கொண்ட புலோலி மனோன்மணி அம்பாளின் தல வரலாறு, தலச் சிறப்பு, திருப் பொன்னூஞ்சல், திருப்பஞ்சகம் ஆகியவற்றை அனைவருக்கும்எளிதில் கிடைக்கவேண்டும் என்ற பேரவாவினால் அம்பாளின் அடியவரான ஆ. நடராசா தென்புலோலி ஸ்ரீ மனோன்மணி அம்பிகையின் அற்புதங்கள் நிறைந்த திருப்பொன்னூஞ்சல் என்ற சிறு மலரை வெளியிட்டார்.

பல நூற்றாண்டு கால சிறப்புடைய இந்த ஆலயத்திலே நிகழ்ந்த அற்புதங்கள் புதுமைகள் எண்ணிலடங்காதவை. இந்துமத வரலாற்றில் தெய்வங்கள் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி தம் அடியார்களை ஆள்கொள்வதுண்டு. அற்புதங்களும் அதிசயங்களும் கற்பனையல்ல. ஊனினை உருக்கி உள்ளொளி பரப்ப பக்தி அவசியமாகின்றது. பக்தியைத் தூண்டுவதற்கு அற்புதங்களும் அதிசயச்செயல்களும் அடிகோலுகின்றன. முதலி அம்பாள்என்று அழைக்கப்படும்புலோலிஸ்ரீமனோன்மணி அம்பாள் அதிசயமிக்க பல அற்புதங்களினை நிகழ்த்தியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஆலயத்திலே அம்பாளுக்கும்

**சரவணா**

ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கும்பாபிஷேகத்தின் பிரதம குருக்களான குமாரசாமிக் குருக்கள் '' எல்லாம் அம்பாள் திருவருளால் சிறப்பாய் அமைந்து வருகின்றது. அம்பாளுக்கு திருவூஞ்சற் பா இல்லாது ஒரு பெருங்குறையே'' என்று வருந்தினார். இவ்வாறு இவருடைய மனவருத்தமானது புலோலி மனோன்மணி அம்பாளின் மகாகும்பாபிஷேகத்தின் கண்டுகளித்துய்ய ஆலயத்துக்கு வந்திருந்த வதிரி சைவப்பெரியார் கா.சூரன் அவர்களின் புதல்வியான சிவபாக்கியம் (கவிக்குயில் சிவா) ஆசிரியையின் காதிற்கெட்டியது.

குருக்களின் மனவருத்தத்தைத் தீர்க்க முன்வந்த கவிக்குயில் சிவா, அம்பாளின் ஆலய சந்நிதானத்திலிருந்தே ஒரு சில மணிநேரத்துக்குள் அம்பாளின் திருவூஞ்சற்பாவினை அழகு தமிழில் யாங்கு ஆக்கித் தந்தமை அம்பாளின் அற்புதமான அதிசயமின்றி வேறில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசகு எண்ணெய் இறக்குமதி; ஈரானைக் கைவிட அரசு முயற்சி

**ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தும் அமெரிக்க அறிவி லை அடுத்தே இதுதொடர்பில்ஆராயப்படுவதாகப் பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்பு,ஜன.17

கட்டார் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் இருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராய்வதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தும் அறிவித்தலை அடுத்தே இதுதொடர்பில் ஆராயப்படுவதாக இலங்கையின் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது 40ஆயிரம் பரல் மசகு எண்ணெய்யை நாளொன்றுக்கு ஈரானில் இருந்து இறக்குமதி செய்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த எண்ணெய்யே 1960 ஆம் ஆண்டுகளில் அமைக் கப்பட்ட சுத்தரிப்பு நிலை யங்களில் சுத்திகரிக் கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சவூதி அரேபியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யும் இங்கு சுத்திகரிக்கப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை எண்ணெய் இறக்குமதியைப் பாதிக்கும் என்ற அடிப்படையில் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்த கட்டார் தலைவருடன் பேச்சு நடத்தி கட்டாரில் இருந்து மசகு எண்ணையை இறக்குமதி செய்ய முயற்சி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருகைத் தரவுள்ள ஓமானின் எரிபொருள்துறை அமைச்சருடன் மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் பேச்சு நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# புதையல் தோண்டியோர் விளக்க மறியலில்

கொழும்பு,ஜன.17

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வெவகெதர தோட்ட முதலாம் இலக்க பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட கெப் வாகனம், மோட்டார் சைக்கிள் இரண்டு, கையடக்கத் தொலைபேசி 07, இரும்பு ஆயுதங்கள் என்பன வாரியபொல பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்ட இந்த சந்தேகநபர்கள் வாரியபொல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 27ஆம் திகதி வரை அவர்களை விளக்க அவர்களை மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

# அழுத்தத்தைக் காட்டி கடமை தவற முடியாது

**அரசியல் அழுத்தம் காணப்படுவதாகக் கூறப்படும் கருத்தை ஒழித்துவிட்டு தமது கடமைகளை சரிவர செய்து முடிக்க பொலிஸாருக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ.**



கொழும்பு,ஜன.17

அரசியல் அழுத்தங்கள் காணப்படுவதாகக் கூறிக் கொண்டு தமது கடமைகளை பொலிஸார் நிறைவேற்றாமல் இருக்கமுடியாது என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

''அரசியல் அழுத்தம் காணப் படுவதாகக் கூறப்படும் கருத்தை ஒழித்துவிட்டு தமது கடமைகளை சரிவர செய்து முடிக்க பொலிஸாருக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது'' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டம் மற்றும் அமைதியைப் பாதுகாக்க, பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற பொலிஸார் ஒன்றிணைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# புனர்வாழ்வு முகாம்கள் மூடப்படாது

**தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதி மன்றம் புனர்வாழ்வு அளிக்குமாறு பரிந்துரை செய்தால், இந்த முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்படும்**

கொழும்பு,ஜன.17


விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட நான்கு புனர்வாழ்வு முகாம்கள் மூடப்பட மாட்டாது என்று அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கை பூர்த்தியாகும் தறுவாயை அண்மித்துள்ள போதிலும், தொடர்ந்தும் நான்கு முகாம்களை நடத்திச் செல்வதென அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதிமன்றம் புனர்வாழ்வு அளிக்குமாறு பரிந்துரை செய்தால், இந்த முகாம்களில் புனர்வாழ்வு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட போரின் போது சுமார் 11,000 முன்னாள் போராளிகள் சரணடைந்தனர். இதில் 400 பேர் மட்டுமே புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் இணைக்கப்படாத நிலையில் இருக்கின்றனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட உறுப்பினர்களை அரசு நன்கு பராமரித்து வருவதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் பல்வேறு சுயதொழில் கடன்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)



இலங்கைக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வந்த கட்டார் தலைவர் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல்தானி அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுகின்றார்.

# களணிக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு,ஜன.17

களனிப் பிரதேசத்தில் இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டுள்ள குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக களனிப் பிரதேசசபைத் தலைவர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட உறுப்பினர்களும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராக அமைச்சரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் கடத்தல், கப்பம்கோரல் மற்றும் பாதாள உலகக் கோஷ்டி நடவடிக்கைகளுடன் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பிரதேச சபை உறுப்பினர் பிரசன்ன ரணவீர பல்வேறு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கை–கட்டார் இடையே 9 ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,ஜன.17

இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்தடைந்த கட்டார் தலைவர் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல்தானி மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இரு நாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கும் கட்டார் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல்தானிக்கும் இடையில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ கலந்துரையாடலை அடுத்தே இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கை மற்றும் கட்டாருக்கிடையிலான கல்வி, உயர்க்கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை அரசு சார்பில் உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா கையெழுத்திட்டார்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உடன்படிக்கையில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கையெழுத்திட்டுள்ளார். (ச)

# விவசாயி காயம்

திருகோணமலை,ஜன.17

கிண்ணியா, கண்டல் காட்டில் வயல் காவலுக்குச் சென்ற ஒருவர் காட்டு யானை தாக்கியதால் காயங்களுக்குள்ளான சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. கிண்ணியா புவரசந்தீவைச் சேர்ந்த முகம்மது பாரூக் (வயது 48) என்பவரே இந்தத் தாக்குதலுக்கு உள்ளானவராவர். (ச)

# காணி அதிகாரமும் வழங்கப்படாவிட்டால் மாகாணங்களுக்கு ஒரு அதிகாரமும் கிடைக்காது

**ஒரு வளத்தை அழித்துவிட்டு, மற்றுமொரு வளத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையில்லை. இது சிறுபான்மை இனத்தினருக்கு செய்யும் துரோகமாகும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றஞ்சாட்டிள்ளார்.**

கொழும்பு,ஜன.17

கிழக்கு மாகாணத்துக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால், அங்கு மக்கள் வாழும் உரிமை மாத்திரமே மாகாண சபைக்கு வழங்கப்படும். அது மாத்திரமல்லாது, அரசு தமிழ் பேசும் மக்களின் வரலாறு, கலாசாரம் போன்றவற்றை அழிக்க வாய்ப்புள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.துரைரத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தில், மாகாணத்துக்கு காணி அதிகாரங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய அரசு மாகாணங்களுக்கு காணி அதிகாரங்களை வழங்கவில்லை. காணி விவகாரங்கள் தொடர்பில் காணி ஆணையாளரின் பரிந்துரைகளின்படியே மாகாணங்கள் செயற்படவேண்டியுள்ளது. முப்படை, வன ஜீவராசிகள் திணைக்களம், சுற்றுலாச் சபை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கே கிழக்கில் காணி அதிகாரங்கள் உள்ளன.

மட்டக்களப்பு கஜுவத்தை பிரதேசத்தில் 5 கிலோ மீற்றர் வரையான நிலப்பரப்பில் கடற்படையின் முகாம் ஒன்று உள்ளது. கிழக்கு மாகாணத்தில் உள்ள அதிகளவான காணிகள், சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி என்ற பெயரில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசினால் கைப்பற்றப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். ஒரு வளத்தை அழித்துவிட்டு, மற்றுமொரு வளத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையில்லை. இது சிறுபான்மை இனத்தினருக்குச் செய்யும் துரோகமாகும்.

யுத்தம் நடைபெற்ற போது, மூன்று இன மக்களும் பாதிப்புகளை எதிர்நோக்கி வந்தனர். இந்த மூன்று இன மக்களுக்கும் காணிப் பிரச்சினைகள் உள்ளன. இவற்றுக்கு தீர்வைக் காண குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க மாகாண சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baby Cheramy

# அன்பும் பரிசும்

# அடுத்த சுற்றுப் போட்டிகளின் வெற்றியாளர்கள் நீங்கள்தானா?

பேபி ஷெரமி அன்பும் பரிசும் 1ம் சுற்று
வெற்றியாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!




1 பரிசு

## சுசுகி அல்டோ காரினை வென்ற அதிஷ்டசாலி

என். எல். பிரியான்தி டி சில்வா - வதுரம்ப, காலி




2 பரிசு

## ஸ்கூட்டி பெப் இனை வென்ற அதிஷ்டசாலி

எச். எ. சதுரிக்கா உதயான்ங்கனி - கொடிகமுவ, மஹறகம
எஸ். எ. துதித்த சத்னிது - கொரகஸ்முள்ள, டிவுளபிடிய

3 பரிசு



## இருபது தங்க மாலைகளை வென்ற அதிஷ்டசாலிகள்

வீ. எம். ராஜசிங்க - கோனகளகள, அலவதுகொட
உ. எம். திஸ்னா ரஞ்சனி - கடுகள்கஹகே, புத்தல
ரவின்தி வெளகெதர - சுபிரி உயன, முள்ளேரியாவ புது நகரம்
இமல்கா மதுஷானி - தங்கொள்ளவத்த, ஹொரம்பாவ
புஷ்பா சரோஜினி - தன்கல்ல, ரத்தோஞகம
ஒஷானி சமராதீர - நவ நகரய, அம்பாரை
ஆர். கின்துஜன் - பந்தாநிபுர், வவுனியா
டப்ளியு. டி. நிசன்சளா லக்மாலி - மஹாவலதன்ன, பளான்கொட
சந்துனி நாகன்தள - நுனுக்கேவல, கேகாலி
லக்சிதா ரன்ஜித் ஏகனாயக்க -கடுகன்னாவ
வீ. எச். தேனுஜா - பீ. பீ. கோமரி - 02 (கிழக்கு)
பீ. டப்ள்யு. நதீக்கா நயோமி விஜெய்ரட்ன - ராசகல, பளான்கோடை
நயனா விஜேய்சேகர - மகளேவாய, அம்பான்தோட்டை
எஸ். ஏ. பீ. மானெல் - தலுகம, கௌனிய
சுஜாதா டி சில்வா - கமரங்காபிட்டிய, பல்மடுள்ள
பீ. ம். ளோட்ஸ் - எமிள் நகர், மன்னார்
சசிகளா - பெரிய ஊர்தீவு, மட்டகளப்பு
சுஜன்தன் சர்விளா - திருமலை வீதி, மட்டகளப்பு
வை. அஜான்தினி - வடக்கு சந்திளாபெய், சந்திளாபெய்
ஜே. கிருபாகாரனி - குதுளாதி வேகரை, மட்டகளப்பு

4 பரிசு



## கையடக்கத்தொலைபேசிகளை வென்ற அதிஷ்டசாலிகள்

சாமரி வீரக்கொடி - விளாகென வீதி, கொனவள
எச். பிரசான்ஜினி சில்வா - பதுகொட, இத்தபான
டபிள்யு. கே. ரம்யா குமாரி - தளபகன்த, பெரளபனாதர
இ. ஜீ. கே. குனதிலக்க - சிரிமாகம, ஒளகன
பிரியன்கிகா குமுதினி - கட்டளகம, பெரளபனதர
எப். கசிகா நிர்மானி ஜோசப் - பலுகஸ்தமன, பொலொன்னறுவை
ஜீ. டப்ளியு, சமன்மனி - பன்வில, ஹிக்கடுவ
எம். ஏ. அனோமா பிரியதர்ஷனி - மாதின்னாகொட, ராஜகிரிய
கே. ஏ. நிரோஷா குமாரசிங்க - இஹலகம சந்தி, ககிராவ
இரோஷினி கன்னேகொட - வெயன்கொட வீதி, மினுவன்கொட
விசால் ஹிம்மான்ச - எளியட் வீதி, காலி
எச். எம். மனிஷா திசாளாயக்க - கிரிகல் பொத்த, பஸ்ஸர
கே. சஜித் - வின்னார் வீதி, பண்டிருப்பு, கள்முனை
மனித்தி குளரத்ன - மினுவன்கொட வீதி, கொடுகொட
ஆர். எம். தேவிகா சுதர்ஷனி - 3ம் வீதி, பொலன்னறுவை
ரசிக்கா லன்கபுர - கன்னேகம வீதி, அழுத்கம
எச். சான்தனி நில்மினி - இதுக்கட்டிய மலை, மஹாகம
டி. நிமிக்ஷா மதுஷனி - திமியாவ, தம்முள்வன, இரத்தினபுரி
மியாசி இமாஷா பெரேரா - மிரிஸ்வத்த, கொட்டுகொட
வத்சளா அபுதன்திரி - கோனபள சந்தி, படுவிட

### போட்டி விதிமுறைகள்

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேடட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

### குலுக்கல் நடைபெறும் திகதிகள்

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15
இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15
மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

### போட்டியில் கலந்துகொள்ளும் முறை

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"
த.பெ. இல. 2285, கொழும்பு




WP / GT/ 3408

Baby Cheramy
தூய அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். மன்னாரில் தெளிவான வானம் காணப் படும்.

## உயர்தரப் பெறுபேறுகள்

**உடுவில் மகளிர் கல்லூரி**

**கணிதப் பிரிவு:** லோ.டபினியா - ஏ 2பி, க.கலையரசி - பி 2சி, ர.தபித்தா கிறிஸ்ரின் 2சி எஸ்,

**விஞ்ஞானப் பிரிவு (தமிழ்):** ச.சுஜானி- பி 2சி, ப.சாலினி - பி சி எஸ், ரா.ராஜினி- 3சி, சி.சிவாஞ்சலி -2சி எஸ், க.பபித்தா - சி 2எஸ்,

**ஆங்கிலப் பிரிவு:** ந.நர்த்தனா - 3சி, ரா.பிரசன்யா - 3எஸ்,

**வர்த்தகப் பிரிவு:** சி.சம்புரணி - 2ஏ பி, கை.சுதர்சினி- ஏ சி எஸ், ம.அக்சால் - 2பி சி, சி.தமிழினி - 3சி, வி.சுஜிவினி -2சி எஸ், ர.பிரியதர்சினி - 2சி எஸ்,

**கலைப் பிரிவு:** சி.இந்துகா- 3ஏ, பா.ஜர்மிலா - 3ஏ, ப.நிரோஜிகா - 2ஏ பி , த.நிசாந்தினி 2ஏபி, வி.டினோஜினி - 2ஏ சி, ச.யாலினி - ஏ 2பி,சி. பிரசாந்தி -ஏ 2பி ச.சர்மிலா - ஏபிசி, ம.தானியா - ஏபிசி, வே.மாதங்கி - ஏபிசி, அ.பபித்தா - ஏபிசி, த.ஆன்சயமி - ஏ2 சி, ச.சுகன்யா - ஏ 2சி, ச.பெனிசிலா - ஏசிஎஸ், சி.கிருசழகா - 3பி, செ.சிந்துஜா - 3பி, ச.தசாயினி - 2 பிசி,சி.விஸணுகா- 2பி சி, த.சுமங்கலா - 2பி சி, யோ.தர்சிகா - 2 பிசி, சி.கார்த்திகா 2 பி சி, இ.துஸயந்தி - 2பி சி, ஜெ.டென்சிகா - 2பி எஸ், க.தயாலினி - பி 2 சி, சி.விந்துஜா - பி 2சி, அ.ரூத்- பி 2சி.

(ந )

## சேந்தாங்குளம் தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.17

வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர் மற்றும் பொது மக்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதல் தமிழின அடக்கு முறையின் ஒரு வெளிப்பாடே என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய்த் தொகுதி உபதலைவர் எஸ். கஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சேந்தாங்குளப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள், தவிசாளர் மற்றும் உறுப்பினரை இலங்கைக் கடற்படை தாக்கி விரட்டியுள்ளது. இது பல இன்னல்களுக்குப் பிற்பாடு மீளக்குடியமர்ந்த மக்களை அவர்களது சொந்த இடத்தில் இருந்து துரத்தி சிங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்டும் செயற்பாடாகும். அப்பாவிப் பொது மக்கள், ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தொடர்ந்து இராணுவத்தால் அச்சுறுத்தப்படுகின்றமை தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் செயல் என்றார். (ந)

## புனரமைப்பு இன்றி அனலைதீவு வீதி

யாழ்ப்பாணம்,ஜன.17

அனலைதீவு பிரதான வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பஸ் உட்பட சைக்கிள் மற்றும் பாதசாரிகள் பயணிக்க வேண்டியுள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதியில் அமைந்துள்ள மதகு உடைந்து காணப்படுவதால் பஸ்ஸில் பயணிக்கும் மக்கள் இந்த இடத்தில் பஸ்ஸில் இருந்து இறங்கி மதகுகளைக் கடந்து திரும்பவும் பஸ்ஸில் பயணிக்க வேண்டியுள்ளது.

இந்த மதகின் சேதம் குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் புகார் செய்ததுடன் ஊடகங்களிலும் தகவல்கள் வெளிவந்தன. எனினும் குறிப்பிட்ட மதகைப் புனரமைக்க அதிகாரிகள் முன்வரவில்லை.

இதேவேளை மதகைப் புனரமைக்கவும் வீதியைச் செப்பனிடவும் மதிப்பீடுகள் செய்யப்பட்டு நீண்ட நாள்கள் கடந்து விட்ட நிலையிலும் எந்தவித புனரமைப்பும் இன்றிக் காணப்படுகின்றது எனக்கூறப்படுகின்றது.

(ற-7)

## கள்ளுத் தவறணைக்கு ஊரகத்தி மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

அராலியில் உள்ள ஊரகத்திக் கிராமத்தில் கள்ளுத் தவறணை அமைக்கப்படவுள்ளது. இதற்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது எதிர்வரும் 21ஆம் திகதி கள்ளுத் தவறணை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் அடிக்கல் நடப்படவுள்ளது.

மீனவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், முன்பள்ளி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகம் மற்றும் குடியிருப்பாளர்களுடன் கூடிய இந்தப் பகுதியில் தவறணை அமையவுள்ளது. இதனாலே பொதுமக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர் என வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களான ந.நடனேந்திரன் மற்றும் சிவகுமார் ஆகியோர் தெரிவிக்கின்றனர். (ந-29)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.17

பன்முகப்படுத்தப்பட்ட (DCB) வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட 5 விளையாட்டுக் கழகங்களுக்கு கடந்த வியாழக்கிழமை 19 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் மு.நந்கோபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கழகங்களின் உறுப்பினர்களிடம் பொருள்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, புங்குடுதீவுப் பொறுப்பாளர் நவம், உதவித் திட்டமிடற் பணிப்பாளர் திருமதி மீரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து இடம்பெற்ற வேலணைப் பிரதேச சபையில் ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் சிற்புரையாற்றியதுடன் சனசமூக நிலையங்களுக்கான உதவிகளை வழங்கினார். (ந)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுபச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொள்வீர்கள். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். பெற்றோர் கேட்ட உதவிகளை, மறுக்காமல் செய்வீர்கள். காலை முதல் மாலை வரை, உற்சாகமாக செயற்படுவீர்கள்.

**இடபம்:** போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறும் நாள். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை, மறுக்காமல் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். தாய் வழி உறவினர்களால், அனுகூலம் பெறலாம். அலைந்து திரிந்து முடிக்க நேரிடும் என்று நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் கூடும்.

**மிதுனம்:** வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். மற்றவர்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில், சுபச்செலவுகள் உண்டாகலாம். தொழில் ரீதியான பிரச்சினை ஒன்றை நினைத்து, அதிக அளவில் கவலை அடைவீர்கள்.

**கடகம்:** உங்களைப் பாராட்டுவதுபோல சிலர் விமர்சிக்கலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில், அக்கறை காட்டுவீர்கள். உங்கள் குடும்பத்தினரின் செயற்பாடுகள் பற்றி, அயலார் குறை கூறுவர். மற்றவர்கள் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர்களைப் பார்க்கலாம்.

**சிங்கம்:** சக ஊழியர்கள், நண்பர்கள் மத்தியில், உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். எந்தவேலையையும் பொறுப்பாகச் செய்து, பாராட்டுப் பெறுவீர்கள். கலைஞர்கள், புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். நினைத்த காரியங்கள் மட்டுமின்றி, நினைக்காத சில காரியங்களும் நடக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி:** பிள்ளைகள் விடயத்தில், கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நேற்றுச் செய்த தவறு ஒன்றால், இன்று பிரச்சினை உருவாகலாம். விருப்பம் இல்லாமல், சில செலவுகளைச் செய்யலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும்.

**துலாம்:** எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். புதியவர்களின் நட்பைப் பெறலாம். நண்பர்கள் சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசலாம். நாளை நடக்கும் என்று நினைத்த காரியம் ஒன்று, இன்றே நடந்து விடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். சிலர் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள். பணவரவு உண்டு.

**விருச்சிகம்:** மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்கலாம். புதியவர்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். உறவினர்கள் சிலர், உங்களிடம் யோசனை கேட்கலாம். மாமன், மைத்துனர்கள் வழியில், மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கும்.

**தனுசு:** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால், புதுமைகள் படைக்கும் நாள். நண்பர்கள் சிலருக்காக, மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று, சுமுகமாக முடிவுக்கு வரும். மூத்த உடன் பிறப்புக்களால், அனுகூலம் பெறலாம். வாகன யோகத்துக்கு வாய்ப்புகள் உண்டு. அதிகம் செலவாகும் என்று நினைத்த வேலை ஒன்று, குறைந்த செலவில் முடியலாம்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து, ஏற்றம் பெறும் நாள். நேற்றுச் செய்ய மறந்த சிலவேலைகளால், இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். நீண்டநாள்களாக மனதில் நினைத்திருந்த காரியம் ஒன்று, இன்று நிறைவேறும். மாலை நேரத்தில் பால்ய நண்பர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

**கும்பம்:** சிலரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்களை குறை கூறாமல் அனுசரித்துச் செல்ல வேண்டும். வெளியூர் பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர் ஒரு வரை, திடீரெனச் சந்திக்கலாம். கனவுகளால், குழப்பங்கள் உண்டாகலாம்.

**மீனம்:** வாக்குவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக அலைய நேரிடலாம். வியாபாரிகள், வேலையாள்களின் திடீர் விடுப்பால், பிரச்சினையைச் சந்திக்கலாம். எளிதில் முடிந்து விடும் என்று நினைத்து ஆரம்பித்த வேலைகளில், இழுபறி ஏற்படலாம். தண்டச் செலவு நேரும்.

**நாளை**
தை 04 புதன்கிழமை 18.01.2012
திதி: தசமி மு.இ. 09.24 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 08.34 வரை
சுபநேரம்: 05.05 - 06.35 வரை,
ராகு காலம்: 12.35- 02.05 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 8 | | 9 | 2 | | 3 |
| | | | 7 | | 5 | 4 | 9 | |
| | | 9 | 4 | | | | 8 | 6 |
| 6 | | 1 | | | | 5 | | 8 |
| | | | 6 | | 8 | | | |
| 8 | | 2 | | | | 3 | | 9 |
| 7 | 4 | | | | 6 | 9 | | |
| | 9 | 8 | 3 | | 2 | | | |
| 2 | | 5 | 9 | | 1 | | | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## காணவில்லை



தாவளை இயற்றாலை, வரணியைச் சொந்த இடமாகக் கொண்ட
செல்வன்
**இராசன் சந்திரமோகன்**
வயது 18, கடந்த திங்கட்கிழமை (09.01.2012) இல் இருந்து காணாமல் போயுள்ளார். எனவே இவர் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள் குடும்பத்தவர்களுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு மிகவும் வேதனையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு:
0773212336, 0772763754
(13130)(2-7-9)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ★ 05 ★ 1943



மறைவு 01 ★ 01 ★ 2006

அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்
(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் வருமான வரித் திணைக்களம்)
திதி: பூர்வபக்க பிரதமை - 17.01.2012

ஆண்டுகள் ஆறு நகர்ந்தாலும் - உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்

"தம்பலத்தனை"
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்
அன்பு மனைவி
இ. திலகேஸ்வரி
(சி/7552 (45-7-6) (13005 (45-7-6)

## விற்பனைக்கு

ஒரு கல்வி நிறுவனத்தை நடத்துவதற்குரிய 140 அடி தகரப் பந்தல் தளபாடங்கள் குத்தகைக்கு/ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776624396

## பெண் வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0217900637
(13151)

## விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்ரேசன் றோட்டில் பவர் ஸ்ரேசன் சந்தியில் இருந்து பிரதான வீதியில் 250 யார் தூரத்தில் 6 (ஆறு) பரப்புக் காணியிலமைந்த இரண்டு கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொலைபேசி எண்: 077 9352775, 021 222 7365
(13134) (6-9-45)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் 2ஆம் கட்டையடியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0773569709, 077 3146053
(11558) (6-9-45)

## வீடு விற்பனைக்கு

கருவேப்பிலம் வீதி, கொக்குவில் கிழக்கில் நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்துக்கு அருகில் இரண்டு பரப்பு காணியில் நான்கு பக்க சுற்று மதில், குளியல் அறை மற்றும் சகலவசதி களுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 5427158
(077 5427158) (6-9-45)

## கடை வாடகைக்கு விடப்படும்

இல. 615 பரந்தன் வீதி தருமபுரம், தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் 16 X 32 அடியில் 2 கடைகளும் 11 X 32 அடியில் ஒரு கடையும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும் அரச, அரச [illegible]
தொடர்புகளுக்கு: 077 0579536
(13099 (45-9-6)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் (19-01-2012) விநியோகிக்கப்படும்.
தொடர்பு-
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ். 021-2226944
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077-6225944.
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 077-8996085

## மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர் கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். 18.01.2012 அன்று திறப்புவிழா நடைபெறும்.
தொடர்பு- செல்லத்துரை தவமணி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 615 8066, 021 490 8566, 077 468 1475

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08-03-1957
மறைவு
19-02-2009
அமரர்
**சுப்பிரமணியம் அதிகாரசிங்கம்**
(திதி: நவமி)

அன்பு எனும் சொல் அதனை
பாசம் என்னும் வலை வீசி
உறவு என்னும் ஓடம் அதில்
உரிமையுடன் ஆண்டு மூன்றாகியும் வாழ்ந்து வந்தோம்.
சிங்கம் போனவழி தெரியவில்லை
தேசம் விட்டு காலனால் விண்ணுலகு சென்றீரோ
பொங்கிவரும் கண்ணீருக்கு அளவில்லையே
உனை நினைத்து தேம்புகின்றோம்.
கந்தரோடை. அன்பின்: அ.கருணைநாயகி (மனைவி).
(13114) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த தமிழீழ அரசு ஈழ அகதிகளுக்கு உதவி

**'தானே' புயல் காரணமாகக் கடலூர் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவிகளை வழங்க நாடு கடந்த தமிழீழ அரசு தீர்மானித்துள்ளது.**

சென்னை, ஜன.17

'தானே' புயல் காரணமாகக் கடலூர் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவிகளை வழங்க நாடு கடந்த தமிழீழ அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான முதற்கட்ட கள ஆய்வை தமிழகத்தில் உள்ள நாடு கடந்த தமிழீழ அரசின் தோழமை மேற்கொண்டுள்ளது.

கடலூருக்கு அண்மித்த குள்ளஞ்சாவடி அம்பலவாணன் பேட்டையில் உள்ள அகதிமுகாமே 'தானே' புயலுக்கு பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இந்த அகதிமுகாமில் உள்ள 431 ஈழத்தமிழ் அகதிகளே பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் நாடு கடந்த தமிழீழ அரசின் தோழமை நிலையம் இவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்குரிய முதற் கட்ட கள ஆய்வை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு வழங்குகின்ற உதவிகள் தங்களுக்கும் கிடைக்க தமிழக அரசு ஆவன செய்யவேண்டும்என்று இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் கோரியுள்ளனர். (வ)

## விண்கலத்தால் இலங்கைக்குப் பாதிப்பில்லை

விண்வெளியில் வெடித்துச் சிதறியுள்ள ரஷ்ய விண்கலம் பூமியில் வீழ்வதனால் இலங்கைக்குப் பாதிப்பில்லை என்று கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பௌதிகவியல் பீட பேராசியர் டாக்டர் சந்தன ஜயரட்ன தெரிவித்தார்.

விண்வெளியில் வெடித்துச் சிதறிய இந்த ரஷ்ய விண்கலம், இந்து சமுத்திரப் பரப்பில் வீழக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அராலி உருத்திரா சனசமூக நிலைய நிர்மாணப் பணிகளுக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். (ந-2)

## சுதந்திரதினத்தை முன்னிட்டு அரச நிறுவனங்கள் விழாக்கோலம்

கொழும்பு, ஜன.17

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 3ஆம், 4ஆம் திகதிகளில் அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை ஏற்றுவதற்கும் மற்றும் மின்விளக்குகளால் அலங்கரிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர்களுக்கும், திணைக்களத்தின் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெளிவுபடுத்தியதாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கைக்கு அமைய அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்தது. (வ)

## சிலைகள் நிறுவல்

சுழிபுரம், ஜன.17

சுழிபுரம் பறாளாயில் அமைந்துள்ள சமாதான அரங்குக்கு அருகில் இரு புதிய சிலைகள் நிறுவப் படவுள்ளன. தமிழ் மூதாட்டி ஔவையார், தமிழ் தாத்தா சோமசுந்தரப் புலவர் ஆகியோரது சிலைகளே இவ்வாறு நிறுவப்படவுள்ளன.

சுழிபுரம் பறாளா ஆலய சந்ததிப் பூசகர் சிவஸ்ரீ.சி. பிறைசூடிக்குரு இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளார். (வ-28)

## வெங்காயப் பூவுக்கு கிடைத்தது யோகம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். குடாநாட்டில் வெங்காயப் பூவுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகத் திருநெல்வேலிச் சந்தைக்கு விவசாயிகள் சிலரால் கொண்டு வரப்பட்ட வெங்காயப் பூவை சந்தை வியாபாரிகள் முண்டியடித்துப்பெற்று விற்பனை செய்தனர்.

அதன்பின்னர் இதனை வியாபாரிகள் கால் கிலோ 130 ரூபாவாகவும் கிலோ 500 ரூபாவாகவும் விற்பனை செய்தனர்.

தற்போது வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் வெங்காயத் தாழை அறுவடை செய்து சந்தைக்கு எடுத்துச் சென்று ஆர்வத்துடன் விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

## ஆள் கடத்தலில் ஈடுபட்ட இலங்கையர் கைது

ஆள் கடத்தல்களில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில், இலங்கையர் ஒருவர் கேரளாவில் கொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சட்ட விரோதமாக, கேரளாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு 39 இலங்கைத் தமிழர்களை மீன்பிடிப் படகொன்றின் உதவியுடன் கடத்தியுள்ளார் என்று இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டுப் பொலிஸாரின் உதவியுட னேயே அவர் கடத்தல்களில் ஈடுபட்டுள்ளதாகக் கொச்சி நகரப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட நபர் இலங்கையின் கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய செந்தூரன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 28 ஆண்கள், 7 பெண்கள் உட்பட 4 குழந்தைகளுடன் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா நோக்கிப் பயணம் செய்த மீன்பிடிப் படகு ஒன்று கைப்பற்றப்பட்டது. இதில் மலையாளிகள் 4 பேர் உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கொச்சி நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**தோற்றம்**
**17 - 08 - 1942**

**மறைவு**
**27 - 01 - 2011**

### அமரர் இராமு சுப்பிரமணியம்
(சின்னத்தம்பி)

ஓராண்டு சென்றாலும் மறையாத திருமுகமே!
எங்கள் தலைவனே!
பண்பிலே வளர்ந்து அன்பையே சொரிந்து
அரவணைத்த தெய்வமே!
தொண்டு செய்வதையே கொடையாக்கிய கொடைவள்ளலே!
எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு மறைந்தாலும்
என்றும் கலையா நினைவுகளுடன்
எங்கள் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
என்றும் நீங்காத்துயருடன்.

**596/5 கே.கே.எஸ் வீதி,**
**நாச்சிமார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**

(13139) (6,,10)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவலைகள்



**தாயின் மடியில்**
**07-04-1977**

**ஆண்டவன் அடியில்**
**18-12-2011**

### அமரர் சிதம்பரப்பிள்ளை சுந்தரவடிவேலன்
**(சுதன்)**
**(ஆசிரியர் தி/ஸ்ரீவாணி வித்தியாலயம்)**

எமது குடும்பக் கோயிலின் குலவிளக்காய்
குன்றாத பாசத்தின் பிறப்பிடமாய்
மனிதருள் மாணிக்கமாய், மாந்தருள் திலகமாய்
ஊருக்கே உத்தமனாய் புனித வாழ்வு வாழ்ந்து,

18.12.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதித் துயரில் எம்முடன் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (17-01-2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்த னையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடைக்குறிச்சி,**
**வரணி.**

(12652) (6,,10)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி யூலியற்வதனி மனோகரன் அவர்களின்
அன்புத் தாய்

### திருமதி மரியதாசன் பார்பரா

அன்னாரின் மரணச் செய்திகேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி

13140)(6,6,45)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### செல்வி நேமிகா ஜெகநாதன்

அன்னை மடியில்
04-06-1993

நோயின் பிடியில்
28-01-2011



பாசத்தோடு நாமும் பாங்காய் வளர்த்தோமே சொல்லாமல் நோயும் சுகமாய் முடித்துவிட்டு செல்ல நாமெல்லாம் துன்பக் கடலில் வாடுகின்றோம். ஆனாலும் நீவீர் இறைவன் பாதமடைய தினமும் மருதடிவிநாயகரை வேண்டுகின்றோம்.

*'கமலகிரி'*
*சங்குவேலி, மானிப்பாய்.*
*தொ.பே:021 3007488.*

*பிரிவால் துயருறும்,*
*குடும்பத்தினர்.*

(13101) (6,7,10)

அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)
அக்கராயன்குளம் பதிவு இலக்கம் KN/150

## பதவி வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு இலங்கைப் பிரஜைகள் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- 1) பயிற்சிக் கிளை முகாமையாளர்கள்
2) அலுவலக உதவியாளர்

வயதெல்லை:- 18 - 45 வரை

தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் (சா.த) பத்திரம்/ க.பொ.த. (சா.த) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம், வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம்/ தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி சம்மந்தப்பட்ட துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு படிவழங்கப்படும்.
* மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணையும் ஆதனப்பிணையும் செலுத்தவேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்படிவங்களை சுயமாகத் தயாரித்து, விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ் அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகமைகள் இருப்பின் அச்சான்றிதழ்கள் ஆகியவற்றின் போட்டோப் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 24.01.2012 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுமுகாமையாளர் அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் அக்கராயன்குளம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் பதவியைக் குறிப்பிடவேண்டும்.

**டினேஸ்குமார் தங்கமணி**
*தலைவர்*
*அக்கராயன் ப.நோ.கூ.சங்கம், அக்கராயன்குளம்.*

## வன்புணர்வுச் சந்தேக நபரை அடையாளம் காட்டிய சிறுமி

நித்திரையில் இருந்த வேளையில் தூக்கிச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தியவரை அடையாளம் காட்டினார் ஏழு வயதுச் சிறுமி.

கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி கொடிகாமத்தில் ஏழு வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய நபரை இணங்கான்பதற்கான அடையாள அணிவகுப்பு சாவகச்சேரி நீதிமன்றில் பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. வன்புணர்வுக்கு உட்படுத்திய நபரை அணிவகுப்பில் சிறுமி அடையாளம் காட்டினார். அதன்பின்னர் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா உத்தரவிட்டார். (ங-207)

## ஓட்டோசேவை

மானிப்பாயில் இருந்து கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு. நேரம் 7.30 - 12.30
தொடர்பு
*0779363005 / 0779460605*

## IT MARKETING EXECUTIVE

Application Should be highly Motivated. Persons in the 20-30 years age. group preferably with an A/L Qualifications. The Condi date Should be a go-getter and possess excellent PR and commu nication skills 9 proven track reco rd of sales and marketing in a rele vant field for atleast one year.

★ The Condidate must be re quired motorbike.
★ Interview in epixcell office at 9.00 - 2.00 Jun 18.

**94 A, Kannathiddi Road, Jaffna.**
**T.P:- 021 222 4780.**

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்பார்வை குடும்பநல சேவையாளராக கடமையாற்றும் த.வசந்தாதேவி அவர்களின் அன்புத் தந்தை

### கந்தையா தாமோதரம்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

***சுகாதார வைத்திய அதிகாரியும்,***
***உத்தியோகத்தரும்,***
***ஊழியர்களும். ஊர்காவற்றுறை,***
***வேலணை.***

## காணி விற்பனைக்கு

கிணற்றோடு சேர்ந்த ஒன்றரை பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. அமைதியான சுற்றுச் சூழலில் முதலியார் ஒழுங்கை, சுண்டுக் குழியில் உள்ளது.

**தொடர்புகொள்ளவும்:**
***0772946268***

## கொள்வனவு

வெற்றுப் போத்தல்கள்
(½) கொள்வனவு செய்யப்படும்
தொடர்புகளுக்கு: 077 4779433

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் கந்தரோடை கந்தையா உபாத்தியாயர் வீதியில் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு எதிர்ப்புறமும் முன்னாள் எம்.பி.தர்மலிங்கம் வீட்டுக்கு அருகிலும் 10 பரப்பு காணியில் அமைந்துள்ள சுற்று மதிலுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட ரெறாசோ பதிக்கப்பட்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 1132,
021 222 7365, 0779352775

## The Royal College of Jaffna

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம் By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக [illegible] சங்கானை.
தொடர்பு: 0776751649

## பணிநிலை வெற்றிடம்

மெசின் மைன்டர் (கோட் மெசின்)
உதவியாளர் (கோட் மெசின்)
ஸ்கிறீன் பிறிண்டிங்
பைண்டிங் (பெண்கள்)

**நேர்முகத்தேர்வு :**
**19.01.2012 வியாழக்கிழமை,**
**முற்பகல் 09.00 மணி - 02.00 மணிவரை**
(சுயவிபரக்கோவையுடன் சமுகமளிக்கவும்)

ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
021 7201264 , 0776622981

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி சசிகலா சிவநாதன் அவர்களின்
அன்புத் தந்தை

### திரு. பொன்னையா ஸ்ரீ நடராஜ்

அவர்களின் மரணச் செய்திகேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி

13141)(9,7,45)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் மகேசன்

**(வன்னியசிங்கம்)**

(ஓய்வுபெற்ற சாரதி C.T.B பருத்தித்துறை, முல்லைத்தீவு)

பருத்தித்துறை, கலட்டி, தும்பளை மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம்-மகேசன் நேற்று (16.01.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கல்யாணி, சத்தியமூர்த்தி (ஜேர்மனி), மகேந்திரராணி, (ஆசிரியை R.C.T.M.S பாடசாலை-கற்கோவளம்), தவநிதி, உதயசீலன் (விற்பனை முகவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்று நல்லடக்கத்துக்காக கோயிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பம், சீலன் (மகன்)
(இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்.

(C17831)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மலர்ந்தது
15 ★ 07 ★ 1976



விண்ணில் நிறைந்தது
31 ★ 01 ★ 2008

### அமரர் பொன்னுத்துரை கிருஸ்ணகுமார்

அன்பின் உருவமாய் பொறுமையின்
பொக்கிசமாய் பாசத்தின் எல்லையாய் நின்று
எங்களை பாதுகாத்த அன்புத் தெய்வம்
நீ கண்ணா:
உன் பால் வடியும் முகம் எங்கள் மனதை
விட்டு போக மறுக்கிறதே உந்தன்
காந்தச் சிரிப்பு எங்கள் கண்களைவிட்டு
அகல முடியாமல் இருக்கிறது எங்கள்
அன்புத் தெய்வம் எங்கு இருந்தாலும்
ஒளிப்பிளம்பாக பிரகாசத்தோடு திகழ பிரார்த்திக்கிறோம்.

நீதிமன்றம் வீதி,
மல்லாகம்.

மனைவி, மகள்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனி,
மாமன்மார், மாமிமார்.

(12941 (45-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாச்சி இறுதிப் போட்டி சாந்தை வி.க சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் 2012ஐ முன்னிட்டு இடம் பெற்ற மாவட்ட மட்ட அணிகள் பங்குபற்றிய தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற பழங்களைப் பெற்று உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு சம்பியனானது. (ம-23)

# கரபந்தாட்டக் கிரிடா சக்தி தேசிய குழாமுக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.வலயத்தைச் சேர்ந்த ஆவரங்கால் மகா ஜன வித்தியாலய மாணவன் செல்வன் சச்சிதானந்தம் ஜனகன் கரப்பந்தாட்டக் கிரிடா சக்தி நிகழ்ச்சித் திட்டத் தேசிய குழாமுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2009, 2011 ஆம் ஆண்டுகளில் முறையே பாடசாலைக் கரப்பந்தாட்ட 16, 17 வயதுப் பிரிவு அணிகளுக்குத் தலைமை தாங்கி மாகாண மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்றதுடன் தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கும் அணிக்கு தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம)



சாதனை மாணவர் பாடசாலை அதிபருடன்....

# வென்றது எல்லாளன் அணி



யாழ்ப்பாணம், ஜன.17

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நீர்வேலி இந்து இளைஞர் மன்றம் நடத்திய 6 பேர் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் புத்தூர் எல்லாளன் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

நீர்வேலி தெற்கு விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 30 இற்கும் மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொண்டன. இந்தப் போட்டியின் இறுதியாட்டத்தில் அச்சுவேலி றொக்கெட் விளையாட்டுக்கழக அணியும் புத்தூர் எல்லாளன் விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொண்டன.

இதில் புத்தூர் எல்லாளன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

இந்தப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக றொக்கெட் அணியின் வீரன் மோ.கஜன்ராஜ் தெரிவித்தார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாகக் கல்வியங்காடு முழுமதி விளையாட்டுகழக வீரன் நா.கனீஸ்ரன் தெரிவானார்.

இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற விளையாட்டுக்கழகங்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை நீர்வேலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி இரண்டாம் லெப்டினட் ரி.டி.விஜயரட்ண மற்றும் நீர்வேலி இந்து இளைஞர் மன்றத் தலைவர் எஸ். கஜன் ஆகியோர் வழங்கினார்கள். (த-17)

# யாழ்ப்பாணத்துக் கில்லிகள்



யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் 2012ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடிச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்ணாகம் கணேசா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இறுதியாட்டத்தில் இரண்டு அணியினர் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை என்ற நிலையில் தமது அணியினுடைய வெற்றிகாக கடுமையாக மோதினர்.

இறுதியில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணி 49:37 என்ற புள்ளி அடிப்படையில் பண்ணாகம் கணேச விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனானது. (ம-27)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்





தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராக இருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் செல்லும்

**சுப்பிரமணியம் முரளிதரன்**

அவர்கள் வறிய மக்களைக் கொண்ட J/217 அளவெட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பற்பல திட்டங்கள் மூலம் கிராமத்தையும், மக்களையும் வளம் பெற வைத்தமையைப் பாராட்டி எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலராக அரும்பணியாற்றி எமது தெல்லிப்பழைப் பிரதேசத்துக்குச் சேவை செய்ய வந்துள்ள

திருமதி **எழிலரசி அன்ரன் யோகநாயகம்**

அவர்களை வருக வருக என வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம்.

(அ/7828)(2-9-7)

**J/217, அளவெட்டி கிழக்கு,**
**கிராம அலுவலர் பிரிவின் பொது[illegible]**


## வென்றது வயாவியான் ம.வி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கானஉதை பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைப் பெற்று வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் முன்னணியில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைப் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமநிலைப்படுத்திய போதிலும் தொடர்ந்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் மேலும் ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 02:01 என்ற கோல் கணக்கில் யாழ். இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது. (ம-86)


**நல்லூரில் - வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**

நல்லூரின் பின் வீதியில், பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கையில் அமைந்திருக்கும் வீட்டுடன் கூடிய 6 பரப்பிற்கு மேற்பட்ட காணி விற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ அல்லது மூன்று துண்டுகளாகவோ பிரித்து விற்பதற்கும் சந்தர்ப்பம் உண்டு. இரண்டு துண்டுகளுக்கு ஒழுங்கை முகப்பும் ஒரு துண்டிற்கு 12 அடி தனிப்பாதையும் உண்டு.

தொடர்புகளுக்கு: 021 222 1031


## வட்டுக்கோட்டை அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தின் ஒத்திவைக்கப்பட்ட 39ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 39ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 23.10.2011 இல் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் நடைபெற்றபோது போதியளவு நிறைவு எண் இன்மையால் இக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

மேற்படி கூட்டம், எதிர்வரும் 29-01-2012 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணிக்கு, சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் (சித்தன்கேணிச் சந்திக்கருகாமையில்) நடைபெறவுள்ளது. சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் சம்பந்தமான தீர்க்கமான முடிவை அவசரமாகவும், அவசியமாகவும் சங்க அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்து, தீர்மானம் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

சங்கத்தில் அக்கறையுள்ள சகல அங்கத்தவர்களும் தவறாது இப்பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றி ஒத்துழைக்கவும். மேலும், 100 அங்கத்தவர்கள் சமுகமளித்தால்தான், அங்கத்துவப் பணம் மீளளிப்பு மற்றும் ஏனைய விடயங்களில் தீர்க்கமான முடிவை எடுக்க முடியும் என்பதையும் அறியத்


தொடர்பு:
0771495631

இ.ஆனந்தராசா
நிர்வாகி.

(7821) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருஞ் சுவரின் 'அருஞ்சாதனை'




விக்கெட்டில பந்து வந்து படுகிற மாதிரி ஏதாவது காந்தம் கீந்தம் ஒட்டியிருப்பாங்களோ? – டிராவிட்டின் சந்தேகம்

**'அனைவரும் சச்சினின் சாதனையை எதிர்பார்த்துக் காத்திருக்க ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஒரு சாதனையை நிகழ்த்திச் சென்றிருக் கிறார் டிராவிட்."**



இந்திய அணியின் 'பெருஞ் சுவர்' என்று டிராவிட்டை அழைத்த காலம் மலையேறி விட்டது. தூணாக நிற்பதற்கு பதில் தொடர்ந்து 'போல்டாகி' சொதப்புகிறார். நேற்று முன்தினம், ஆஸ்திரேலியாவின் ஹரிஸ் வேகத்தில் வீழ்ந்த இவர், டெஸ்டில் 54 ஆவது முறையாக 'போல்டானார்'. இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக முறை 'போல்டான' வீரர்கள் வரிசையில், ஆஸ்திரேலியாவின் அலன் போடரை (53) பின் தள்ளி முதலிடம் பிடித்தார். டிராவிட் கடைசியாக விளையாடிய பத்து இன்னிங்சில், எட்டு முறை 'போல்டானார்'. இந்தியாவின் சச்சின் (48), தென்னாபிரிக்காவின் கலிஸ் (45), நியூசிலாந்தின் ஜோன் ரெய்ட் (44) ஆகியோர் 'டொப்-5' வரிசையில் உள்ளனர்.

**தொடரும் சோகம்**

ஆஸ்திரேலிய மண்ணில், இந்திய அணியின் சோகம் தொடர்கிறது. பேர்த் டெஸ்டில் தோல்வி அடைந்த இந்திய அணி, மீண்டும் ஒரு முறை தொடரை கைப்பற்ற முடியாமல் ஏமாற்றியது. இதுவரை பத்து முறை டெஸ்ட் தொடரில் பங்கேற்க ஆஸ்திரேலியா வந்துள்ள இந்திய அணி, ஒரு முறை கூட தொடரை வென்றதில்லை. மூன்று முறை (1980-81, 1985-86, 2003-04) சமன் செய்துள்ளது. ஏழு முறை (1947-48, 1967-68, 1977-78, 1991-92, 1999-2000, 2007-08, 2011-12) ஆஸ்திரேலியா கிண்ணம் வென்றது.

**இன்னிங்ஸ் வெற்றி**

பேர்த் டெஸ்டில், ஆஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. இது, பேர்த் மைதானத்தில் பதிவு செய்யப்பட்ட 12 ஆவது இன்னிங்ஸ் வெற்றி. இதில் ஆஸ்திரேலிய 9 முறை, மேற்கிந்தியத்தீவுகள் 3 முறை இன்னிங்ஸ் வெற்றி பெற்றன. (15)

# வரட்டும் அழிப்பம்?

ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் ஆட்டங்களில் படுதோல்வியை சந்தித்துள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கு இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் நாராயண சுவாமி ஸ்ரீநிவாசன் ஆதரவு தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு வரும்போது அதற்கு நாம் பதிலடி கொடுப்போம் என்று அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணி தனது உள்நாட்டு சூழ்நிலைகளில் சிறப்பாக விளையாடுகிறது. அவர்கள் இங்கு வரும்போது அது வித்தியாசமாக இருக்கும் என்று அவர் நேற்று திங்கட்கிழமை கூறினார்.

இந்தியாவுக்கு அடுத்ததாக நியூஸிலாந்து அணி வருகிறது. அதன்பின் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகள் வரவுள்ளன. இந்த மூன்று அணிகளையும் எமது சொந்த மண்ணில் நாம் தோற்கடிப்போம். அவர்களால் இங்கு எம்மை வெல்ல முடியாது. இதனால் நாம் மிக மகிழ்ச்சியடைவோம் என்று என். ஸ்ரீநிவாசன் கூறினார்.

ஏனெனில் இங்கிலாந்தில் இந்திய அணியை இங்கிலாந்து வென்றபோதிலும் இந்திய மண்ணில் இங்கிலாந்து 5-0 விகிதத்தில் தோல்வியுற்றமை இதற்கு சிறந்த உதாரணமாகும் எனவும் அவர் கூறி னார்.

இந்திய அணியுடனான முதலாவது டெஸ்ட்டில் 122 ஓட்டங்களால் வென்ற ஆஸ்திரேலிய அணி 2 ஆவது டெஸ்ட்டில் ஓர் இன்னிங்ஸ் 68 ஓட் டங்களாலும் 3 ஆவது டெஸ்ட்டில் ஓர் இன்னிங்ஸ், 37 ஓட்டங்களாலும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி கடந்த ஏப்ரல் மாதம் உலகக்கிண்ணத்தை வென்றபின் வெளிநாட்டு மண்ணில் தொடர்ச்சியாக 7 டெஸ்ட் ஆட்டங்களில் தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் சுற்று த் தொடர் எதிர் வரும் செப்டெம்பர் மாதமே நடைபெறவுள்ளது. இந்திய அணியின் அடுத்த வெளி நாட்டு டெஸ்ட் தொடர் 2012 இறுதியில் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது.

என். ஸ்ரீநிவாசன் ஐ.பி.எல் லின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் ஆவார். அந்த அணிக்கும் எம்.எஸ். டோனியே தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அணியின் தோல்விகள் குறித்து முன்னாள் தலைவர்களான கபில் தேவ், ஸ்ரீகாந்த் ஆகியோர் விசனம் தெரிவித்திருந்தனர். (15)




ஆஸ்திரேலிய பகிரங்க ரெனிஸ் தொடரின் மகளிருக்கான முதல் சுற்றுப் போட்டியில் பேலாரஸின் விக்டோரியா அசரென்கா வெற்றி பெற்றுள்ளார். பிரித்தானியாவின் ஹீத்தர் வொட்சனை 6 க்கு ஒன்று, 6 க்கு பூஜ்ஜியம் என்ற செட் கணக்கில் அவர் வெற்றிபெற்றார். (15)

# டோனிக்கு வந்தது தடை

இந்திய அணிக்கு சோதனை மேல் சோதனை. தாமதமாக பந்துவீசிய விவகாரத்தில், டோனிக்கு ஓர் டெஸ்ட் ஆட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டது. நான்காவது டெஸ்டுக்கு அணித்தலைவர் பொறுப்பை சேவாக் ஏற்கிறார்.

இது குறித்து ஐ.சி.சி. வெளியிட்ட அறிக்கையில், நடத்தை விதிமுறையின்படி தாமதமாக பந்துவீசினால், ஒரு பந்து பரிமாற்றத்துக்கு வீரர்களின் ஆட்ட சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபராதமாக விதிக்கப்படும். அணித் தலைவருக்கு இரண்டு மடங்காக அபராதம் அதிகரிக்கப்படும். இந்திய அணி இரண்டு பந்து பரிமாற்றங்கள் தாமதமாக பந்துவீசியதால், வீரர்களுக்கு 20 சதவீதம், டோனிக்கு ஒரு ஆட்டத் தடை மற்றும் 40 சதவீதம் அபராதம் விதிக்கப்படுகிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறியுங்கள் பதவியை!

## மூத்த வீரர்கள் ஆவேசம்

ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து இந்திய அணி மோசமான தோல்வியை தொடர்ந்து லக்ஸ்மன் உள்ளிட்ட மூத்த வீரர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. 6 இன்னிங்சில் விளையாடியுள்ள லக்ஸ்மன் வெறும் 102 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். சராசரியாக 17 ஓட்டங்கள் வீதம் ஒரு அரைசதம் மட்டும் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு இங்கிலாந்து தொடரிலும் லக்ஸ்மன் மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தியுள்ளார்.

இதனிடையே ஆஸ்திரேலியா தொடர் முடிந்ததும் லக்ஸ்மன் ஓய்வு பெற்றுவிடுவார் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் அணித்தலைவர் டோனியிடம் கேட்டதற்கு, தற்போது எனக்கு இது பற்றி தெரியாது. இது பற்றி பதில் கூற விரும்பவில்லை. இதுபோன்ற தகவல்கள் எங்கிருந்து கிளம்புகின்றன என்று தெரியவில்லை.

லக்ஸ்மன் கூறாதவரை இது போன்ற ஊகங்களுக்கு பதில் கூற விரும்பவில்லை. இந்தத் தொடரில் லக்ஸ்மனையோ அல்லது ஹோக்லியையோ மூன்றாவது வீரராக களமிறக்குவது பற்றி எண்ணவில்லை. ராகுல் டிராவிட் 3 ஆவது வீரராக தொடர்ந்து களமிறங்கி வருகிறார். அதில் சிறப்பாக விளையாடியும் உள்ளார் என்று கூறினார்.

டிராவிடும் இந்தத் தொடரில் குறைந்த ஓட்டத்துடனே ஆட்டம் இழந்து வெளியேறியுள்ளார். அணித் தலைவர் டோனியும் கடந்த இங்கிலாந்து தொடர் மற்றும் ஆஸ்திரேலியா தொடரிலும். சிறப்பாக விளையாடவில்லை. இதனையடுத்து அவரது அணித் தலைவர் பதவியை பறிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளது. (15)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் செயற்படமாட்டா!

கொழும்பு, ஜன.17

ஜெனிவா மாநாடு மட்டுமல்ல, எந்தவொரு மாநாட்டிலும் இலங்கைக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் செயற்படா என அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதியின் ஆலோசகர்களுள் ஒருவரான அஸ்வர் எம்.பி.

மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு எதிராக சதிவலை விரித்து வருகின்றது. இதற்கு முஸ்லிம் நாடுகள் ஒருபோதும் துணைபோகா என்றும் அவர் கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட மக்கள் புரட்சியையடுத்து அந்நாடுகளில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஜெனிவா மாநாட்டின்போது முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் என்றும், இதன் பின்னணியில் மேற்கத்தேய நாடுகள் உள்ளன என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பாக கேட்டபோதே அஸ்வர் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது ஜனாதிபதி பலஸ்தீனத்துக்கு ஆதரவாக 30 வருடங்களாகக் குரல்கொடுத்து வருகின்றார். அதுமட்டுமன்றி, முஸ்லிம் நாடுகளுடன் அந்யோன்ய மான உறவைப் பேணுகின்றார்.

கட்டார் அமீர் இலங்கை வந்தபோது அவரை கட்டுநாயக்க விமானநிலையம் சென்று நேரடியாகவே பூரண மரியாதையுடன் வரவேற்றார். இதிலிருந்தே ஜனாதிபதியின் பண்பாடு சிகரம் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்படவுள்ளன எனக் கூறப்படுவதெல்லாம் போலியான கதைகளாகும். அந்நாடுகள் எம்முடனேயே இருக்கின்றன. ஜெனிவா மாநாடு மட்டுமல்ல, எந்தவொரு மாநாட்டின்போதும் எமக்கு ஆதரவாகவே அவை செயற்படும் - என்றார்.


## சுதேச மருத்துவர்களுக்கான கலந்துரையாடல்

காலம்:- 23/01/2012 திங்கட்கிழமை மதியம் 2மணி
இடம்:- வட இலங்கை சுதேச வைத்தியசபை மண்டபம் 188B, மானிப்பாய் வீதி, (வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்)
சுதேச வைத்தியத்திலீடுபடும் BSMS, DAMS, DAM, BAMS, RIMP பரம்பரை வைத்தியர்கள்) சகல சித்த ஆயுள்வேத வைத்தியர்களுடனும் பல முக்கியமான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவேண்டி உள்ளதால் தவறாது அனைவரும் சமூகம் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வடமாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் மற்றும் வடமாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் ஆகியோரும் இதில் கலந்துகொள்ள உள்ளனர்.

குறிப்பு:- மதியபோசனத்தில் கலந்துகொள்ளவுள்ளவர்கள் பின்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(0771882340, 0775594147)

Dr.சு.ஸ்ரீவிக்னேஸ்வரா
தலைவர் - வட இலங்கை
சுதேச வைத்தியசபை.

Dr.ஜெ.ஜெயலன்
செயலாளர் - வடஇலங்கை
சுதேச வைத்தியசபை

## வீட்டில் இருந்தவாறே பணம் சம்பாதிக்க வேண்டுமா?

குறைந்தது 10 பிள்ளைகளைச் சேர்த்து உங்கள் வீடுகளில் கணினிப் பயிற்சி நெறிகளை நீங்கள் ஆரம்பிக்கலாம். கணினிப் பயிற்சிக்குத் தேவையான கணினிகள், தளபாடங்கள் அனைத்தும் எம்மால் வழங்கப்படும். அக்கணினிப் பயிற்சி நெறிகளை நடத்த முன்வருவோருக்கு எமது நிறுவனத்தால் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

**MCN COMPUTER PARK,**
**VELLIRUVAI ALVAI EAST,**
**ALVAI**
**T.P.: 0212262744**


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சிவசுப்பிரமணியம் ரவிந்திரராஜா

| தோற்றம் | திதி | மறைவு |
|---|---|---|
| 15.05.1960 | நவமி | 27.01.2011 |

*நீங்கள் எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தாலும்*
*உங்களின் நினைவுகள் என்றும் எங்கள்*
*இதயத்தில் இருந்துகொண்டே இருக்கும்*
*உங்களது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்*



புதுவளவு தும்பளை,
பருத்தித்துறை

மனைவி, மகள்,
சகோதரர்கள்

## மரண அறிவித்தல்
### இரத்தினம் சின்னமணி



புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சின்னமணி (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினத்தின் (ஐயா) பாசமிகு மனைவியும், இந்துநேசன் (சுவிஸ்), குகநேசன் (பிரான்ஸ்), தவநேசன் (கனடா), நேசமலர், கிருஷ்ணசுகி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணிம், கோபால சிங்கம், தவமணி, நடராசா, தவராசா (சுவிஸ்), தர்மலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற சதீஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆகாஷ் (சுவிஸ்), அவன்ஷ் (சுவிஸ்), நிஷ்வன் (பிரான்ஸ்), இந்துஜன், சிந்துஜன், கானகன் (சுவிஸ்), ஆதித்யன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மு.ப. 8.00 மணி முதல் 11.50 படிவை Kalubowila Peiris peterson Lane, Wellawatta, (Sathaya) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு Kalubowila Peiris சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரியாலை.

தகவல்: நடராசா
(ராசன்-சகோதரன்)

## மீனவர்கள் விடுதலை

யாழ். நெடுந்தீவுக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட நீர்கொழும்பு மீனவர்கள் ஐவர் மற்றும் இந்திய மீனவரும் இருவருமாக 7 பேரும் மன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எஸ்.எம் மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நெடுந்தீவுக் கடலில் வைத்து இந்திய மீனவர் இருவரையும் தாக்கினர் என நீர்கொழும்பு மீனவர் மீதுகடந்த வெள்ளிக்கிழமை விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்டது.

அதேவேளை காற்றினால் தாம் திசை மாறி நெடுந்தீவு கடற்பரப்பினுள் தமது படகு வந்துவிட்டதாக விசாரணையில் இந்திய மீனவர் தெரிவித்தனர். இந்த எல்லைப்பரப்பில் தாம் வர இதுவே காரணம் என்றனர்.

விசாரணையின் பின்னர் இரு தரப்பினரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களை விடுதலை செய்தார் நீதிவான். (4)

## தமிழினிக்கு விளக்கமறியல்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவி எனக் கூறப்படும் தமிழினி நேற்றுமீண்டும் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படாத விடுதலைப் புலி உறுப்பினர்களைவிடுதலைசெய்யுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை தமிழினி தொடர்பிலும் அமுல்படுத்துமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கேட்டுக்கொண்டார்.

எனினும் இது குறித்து ஆராய்ந்த பிரதம நீதவான் ரஷ்மி சிங்கம்புலி அவ்வாறான நிவாரணம் கிடைக்க வேண்டுமெனின் சட்டமா அதிபரிடம் விடயங்களை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட் டார்.பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் சந்தேநபர் குறித்த விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.இந்நிலையில் எதிர்வ ரும் 30 ஆம் திகதி வரை சந்தேகநபரை தொடர்ந்து [illegible] உத்தரவிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்
### கமலாதேவி (மணி) புஸ்பராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி புஸ்பராசா கடந்த 09.01.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் அருமை மகளும் காலம்சென்ற புஸ்பராசாவின் (புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும் காலம்சென்ற மகாதேவாவின் அன்புச் சகோதரியும் ஜெயக்குமார் (லண்டன்), ரதி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் சுஜாதா, சிறீகரன் ஆகியோரின் அன்பு மாமியும் குணநாயகி, காலஞ்சென்ற சௌந்தரநாயகி, செல்வநாயகி, காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் லக்ஷ்மன், சங்கர், துளசி, சிறிசங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.01.2012 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு லேன்,
அரியாலை.

தகவல்
ரதி சிறீகரன் (மகள்)

### திருமதி முருகேசபிள்ளை அன்னம்மா



இளவாலை, விளானைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை அன்னம்மா நேற்று (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசபிள்ளையின் அன்பு மனைவியும், கணேசபிள்ளையின் (பட்டயக்கணக்காளர், லண்டன்) பாசமிகு தாயும், மனோகரி (லண்டன்), சோமசுந்தரம், மகேஸ்வரன், செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மாமியும், நாகம்மா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான கந்தையா, பீதாம்பரம், முருகேசு மற்றும் செல்லம்மா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, வேலாயுதபிள்ளை, தம்பிமுத்து, அமுதவல்லி, சிவயோகம் மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், உமையாள் (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), திவாரிகா (லண்டன்), சுகன்யா (லண்டன்), தேனுகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தியான், அமாயா ஆகியோரின் அன்புப் பூட்டியும், சகுந்தலாதேவி, சாரதாதேவி, இராசேஸ்வரி ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்:
த.சோமசுந்தரம்
(மருமகன்)

## கண்ணீர் அஞ்சலி



### கனகராயர் சிவபாலன்

பன்னாலை வர்த்தலம் கற்பகவிநாயகர் தேவஸ்தான அன்னதான சபைத் தலைவரும் பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் திருமண மண்டப நிறுவுநருமாகிய கனகராயர் சிவபாலன் அவர்கள் 16.01.2012 திங்கட்கிழமை காலமான செய்தி அறிந்து துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை

பன்னாலை வர்த்தலம் கற்பகவிநாயகர்
தேவஸ்தான அன்னதான சபையினர்.

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் (ஆண்) தேவை

சுன்னாகத்தில் உள்ள புத்தக விற்பனை நிலையத்திற்கு கடையில் வியாபாரம் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் 18 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும் சுன்னாகத்தில் இருந்து 4கி.மீ. எல்லைக்கு உட்பட்டவர்கள் தேவை.
நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
சுன்னாகம் 0770781660


# மரண அறிவித்தல்கள்

## ஜெயானந்தம் வசந்தராணி



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வதிவிட மாகவும் கொண்ட ஜெயானந்தம் வசந்தராணி (14.01.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து லிங்கம் - புனிதவதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தவானந்தம் மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் மருமகளும் ஜெயானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயக்கண்ணன் மற்றும் கஸ்தூரி, நிரோஷன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, கணேசலிங்கம், இன்பராணி, சுரேசலிங்கம் மற்றும் சந்திரலிங்கம் சண்முகலிங்கம், விஜயராணி, சாந்தலிங்கம் (லண்டன்), சிவராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தகுமாரி, றஜனி, சிறிகாந் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-15, மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.
தகவல்
கணவர்

## கனகராயர் சிவபாலன் (துரை)



*(இளைப்பாறிய கணக்காளர், CTB கோண்டாவில்)*

அம்பனைச் சந்தி, பன்னாலை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகராயர் சிவபாலன் (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராயர் (சின்னத்தம்பி) - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் திருமதி தவமணி சிவஞானம், பாலசுப்பிரமணியம், திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற இராமநாதர் சிவஞானம் மற்றும் திருமதி செல்வராணி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் செந்தூரனின் பாசமிகு மாமனும் பிருந்தாபன், பார்த்தீபன், வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி, கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
தகவல்
குடும்பத்தினர்

## திருமதி லூர்துமலர் அமிர்தநாதன்



கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி லூர்துமலர் அமிர்தநாதன் அவர்கள் 15.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தநாதன் அவர்களின் அன்பு மனைவியும் எலிசபெத், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமலோதயராணி, தேவராஜா, புஸ்பராஜா (இந்தியா), ஆனந்தராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தேவதயாளன் மற்றும் பிறேமறஞ்சினி, மலர்விழி (இந்தியா), லெபோஜினி ஆகியோரின் மாமியும் எட்வின், சுஜித், லசியா, துஷாந்த் (Dimo Auto Mobile Training School, Colombo), கொன்சிகா (Abans, Chavakachcheri), காலஞ்சென்ற சாளினி, நிறோஜித் (BMS Institute, Colombo), சன்யா (இந்தியா), சந்தோஷ் (இந்தியா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (18.01.2012) புதன்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கச்சாய், புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
தகவல்
பிள்ளைகள்

# இரு இளைஞர்கள் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.17

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு இளைஞர்களினதும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் நிராகரிக்கப்பட்டதையடுத்து அவர்கள் இருவரும் யாழ். நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் கைது செய்யப்பட்டிருந்த இருவரினதும் விசாரணைகள் நிலுவையில் இருந்து வந்தன. யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ. விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போதே யாழ். கரவெட்டி மற்றும் மட்டக்களப்பு கற்குடா எனும் இடங்களைச் சேர்ந்த இருவரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

யாழ். கரவெட்டியைச் சேர்ந்த இராசேந்திரன் நிருத்தன் என்ற இளைஞன் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13ஆம் திகதி கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்ட நான்கு குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. இவருக்கு எதிராக இருந்த ஒரேயொரு சான்று இவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம்மட்டுமே. முன்னர் யாழ். மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் பின்னர் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தன. பின்னர் மீண்டும் யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணை தொடர்ந்தது.

இந்த நிலையிலேயே சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது சட்ட விதிமுறைகளுக்கு அமைய சட்டத் தேவைப்பாடுகளுக்கு அமைய பதிவுசெய்யப்படவில்லை எனவும் சந்தேக நபரால் சுயமாக விரும்பி குறித்த வாக்குமூலம் அளிக்கப்படவில்லையென்பதும் குறுக்கு விசாரணையிலிருந்து தெரியவந்தது. இதனையடுத்து அவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது.

சந்தேக நபர் மீதான வழக்கைத் தொடர்ந்து நடந்த வேறு சான்றுகள் இல்லையென சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்தே அவர் நிரபராதியென நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பு கற்குடாவைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெகதீஸ் என்ற இளைஞன் 2009 மே மாதத்தில் 16ஆம் திகதி ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறை வைக்கப்பட்ட இவர் பின்னர் யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு இவர் மீதான வழக்கு விசாரணை ஆரம்பமானது.

இவருக்கெதிராகவும் இருந்த ஒரேயோரு சான்று இவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகும். விசாரணையின் போது இவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மன்றினால் ஏற்கமுடியாது நிராகரிக்கப்பட்டது. வேறு சான்று இல்லாததனால் அவரை மன்று விடுதலை செய்தது. இந்த இரண்டு நபர்களுக்கும் சார்பாக சட்டத்தரணி மு.றெமீடியஸ் வாதாடியிருந்தார். (த-4)

# வருடாந்தம் 1600 பேர் நீரிழ் மூழ்கிப் பலி

வருடாந்தம் நீரில் மூழ்கி 1600 பேர் உயிரிழப்பதாக இலங்கை உயிர் பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது. இதனைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீரில் மூழ்குபவர்களை காப்பாற்றச் சென்று உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதாகவும் அச் சங்கம் மேலும் கூறியுள்ளது. (ச)


## உடனடி வேலைவாய்ப்பு

தன்னம்பிக்கையுடன் குறுகிய கால இலவசப் பயிற்சிநெறியினைப் பூர்த்திசெய்து தனிநபர்களை சமூகத்திற்கு வெளிக்கொணர்ந்த GDM Management நிறுவகம் உங்களுக்கும் அந்த வாய்ப்பை வழங்க முன்வருகின்றது.
Team Leader - 07
Supervisor - 04
* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(தனிப்பட்ட சலுகைகள் உண்டு, தங்குமிட வசதி செய்து தரப்படும்)
O/L தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0777968485 OR 0776451694
(ஆரியகுளம் சந்தி, அருகில்)



## ஒரே கூரையின் கீழ்

உடல் தொடர்பான பாதுகாப்பு வழிவகைகள்

**Marlbo Trading Company**

நாங்கள் உங்களது வாசலுக்கு அண்மையாக வந்துள்ளோம்




யாழ்ப்பாணம்
சர்வதேச வணிகக் கண்காட்சி
3 ஆவது தொகுதி

2012 , Jan 20, 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள எமது 142 ஆம் இலக்க விற்பனைச் சாவடிக்கு வருகை தாருங்கள்

**Marlbo Trading Company**
SG Arcade, 2nd Floor, No. 441/7,
Sri Sangaraja Mawatha,
Colombo 10.

Tel: 0112-437659 / 0112-335305 / 0112-345289
Fax: 0112-438229
E-mail : marlbo@sltnet.lk, mtcsl@eureka.lk
Web : www.marlbotrading.com

கண்காட்சிக் காலப்பகுதியில் சகல தொடர்புகளுக்கும், யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டியவர்கள்:
*Sooriyasena : 0777879050*
*Ranjith : 0773676996*

சாவடி இல. 142


## Calling for Tender – Teaching Hospital, Jaffna.

***EXTENSION NEW BLOOD BANK SITE SHED***

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Extension New Blood Bank Site Shed, T.H., Jaffna up to 10.00am on 08.02.2012.Tender form may be collected from Director,TH, Jaffna up to 03.02.2012on payment on non refundable deposit of Rs.1,000/-

02. Tender will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening of Tenders.

03. Tender forms are issued only to contractors, who have a valid registration in Grade C9 (Old scheme Grade M8) andabove inthe field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Director, Teaching Hospital, Jaffnaor deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 08.02.2012.

05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, T.H., Jaffna.

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital, Jaffna.
Copy to: CECB, TH, Jaffna


## Wanted



- **Hardware Technician with Net working**
- **Hardware Trainee**
(பயிற்சிக் காலத்தில் அலவன்ஸ் வழங்கப்படும்)

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரக் கோவையை
cborecruit@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி அனுமதியின்றி எவரும் மூச்சுக்காட்டக் கூடாது

## ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு, ஜன.17

கட்சியின் மத்திய செயற்குழுவின் அனுமதியின்றி உறுப்பினர்கள் பகிரங்கமாகக் கருத்து வெளியிடவோ அல்லது கூட்டங்களை நடத்தவோ முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்று ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கட்சியின் சம்மேளனத்தை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. கட்சியின் செயற்குழுவுக்குப் புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இடம்பெறும் முதலாவது செயற்குழுக் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. சமகால அரசியல் விவகாரங்கள், கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் உட்பட முக்கிய பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட்டனர் எனக் கூறப்படும் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கட்சி அங்கத்துவத்திலிருந்து நிறுத்தப்படுவர் என எதிர்ப்பார்க்கப்பட்டது.

ஆனால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கும் நோக்கில் ஒழுக்காற்று விசாரணைக் குழுவொன்றும் நேற்றைய கூட்டத்தின்போது நியமிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க எம்.பி. கூறியவை வருமாறு:-

இன்றைய செயற்குழுக் கூட்டத்தின்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தோம். குறிப்பாக அரசால் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அரசு அவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவரும் பட்சத்தில் எமது கட்சி உறுப்பினர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்தும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

கட்சி சம்மேளனத்தை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுவதாகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்குழுக் கூட்டத்தின்போது உறுதியளித்தார். கட்சியின் எதிர்கால செயற்பாடுகளை எவ்வாறு ஒருமித்த நோக்குடன் முன்னெடுப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

கட்சியின் முக்கிய சில முடிவுகளை உறுப்பினர்கள் ஒருமித்த குரலிலேயே வெளிப்படுத்தவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது - என்றார். (ங-சி)

# தமிழ் மக்களுக்குச் சுயாட்சி வழங்கும் தீர்வுக்கு ஆதரவு

## உலகத் தமிழர் பேரவை

கொழும்பு, ஜன.17

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்நாட்டின் ஆட்சிக்கட்டமைப்பு அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் அவர்களுக்கு மாற்ற முடியாத சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனவும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போரில் வென்ற இலங்கை அரசானது, தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்தல் அவர்களின் விடுதலையை மறுத்தல், உடைமைகளைப் பறித்தல், அவர்களை நிரந்தர அடிமைகளாக்குவதற்கான திட்டத்தைச் செயற்படுத்தல் ஆகியவற்றை தொடர்ச்சியாகக் குவித்து அவர்களை நிரந்தர அடிமை நிலைக்குத் தள்ள எத்தனிக்கின்றது.

மேற்கூறிய அடக்குமுறைகளை எம்மக்கள் வேறு வழியின்றி அமைதியாகச் சகித்து வாழ்ந்து வரும் இவ்வேளையில் நாம் எம்மிடையே இருக்கக்கூடிய வேறுபாடுகளைக் களைந்து தற்போதுள்ள அரச முறையை மாற்றியமைப்பதற்கு எமது உறுதிப்பாட்டை வலிமைப்படுத்த வேண்டும். ஆயுதப் போராட்டம் முடிவடைந்தாலும் இனப்பிரச்சினை முடிவடையவில்லை என நாம் நம்புகின்றோம்.

இலங்கையில் கடந்த ஓர் ஆண்டு காலமாக தேசியப் பிரச்சினைக்கு நிலையானதும் கண்ணியமானதுமான ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கு தமிழ் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது என்பதை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம்.

அத்தீர்வானது தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை அங்கீகரிக்க வல்லதாகவும் அவர்களுக்கு அவர்களின் வரலாற்றுரீதியான வாழ்விடங்களில் மாற்ற முடியாத சுயாட்சி உரிமையை வழங்கக்கூடியதாகவும் நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பை மாற்றி அமைப்பதாகவும் இருப்பது அவசியம்.

இத்தகைய திட்டமொன்றுக்கு இணக்கம் காணப்பட்டால் அதை அமுலாக்குவதற்கு நாம் ஆதரவளிப்போம். இத்தகைய ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் அதை உண்டியாக அமுல்படுத்துவதற்கும் இலங்கை அரசை ஊக்குவிக்குமாறு சர்வதேச சமூகத்தை நாம் வலியுறுத்துகிறோம்'' என உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (ங-சி)

# சடலம் மீட்பு

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தியை அண்மித்த பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை யாழ். பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த பொ.நந்தபாலன் (வயது 51) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் கிருஷ்ணா

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நாளை புதன்கிழமை கிளிநொச்சி மற்றும் யாழ்.மாவட்டங்களுக்கு பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றவுள்ளார். நாளை காலை வன்னிப் பகுதிக்கு வருகை தரவுள்ள எம்.எஸ். கிருஷ்ணா கிளிநொச்சி, முல்லைத்தீவு, வைத்தியசாலைகளுக்கு இந்திய அரசின் அன்பளிப்பாக 28 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களைக் கையளிப்பார். அத்துடன் இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி, சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலையையும் அவர் கையளிப்பார். (த-15-14-17)

# முகத்துவாரத்தில் மீள்குடியமர தமிழருக்கு அனுமதி மறுப்பு

1 »

னர் மக்களை இப் பகுதியில் குடியேற்றுவதாகக் கூறி அழைத்து வந்த அரசு அவர்களைக் கருநாட்டுக் கேணிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக இடைத்தங்கல் முகாமில் தங்க வைத்தது. அதன் பின்னர் கடந்த ஆண்டு முற்பகுதியில் முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 105 குடும்பங்களும் கொக்கிளாய் புளியமுனை கிராமத்தில் குடியமர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆயினும் முகத்துவாரத்தில் தற்போது 247 பெரும்பான்மையின மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அங்குள்ள தமிழ் மக்களின் காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பெரும்பான்மையின மக்கள் கடற் தொழில் செய்வதற்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இப்பகுதிகளில் தமிழ் மக்களை மீளக் குடியேற்றுவதற்கோ, முகத்துவாரம் கடலில் தொழிலில் ஈடுபடுவதற்கோ இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை எனவும், இதனால் தாங்கள் வாழ்வாதார உதவிகள் கூட இன்றி தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-6)

# புலியுடன் சேர்ந்து நாட்டை குழப்ப ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழு முயற்சி

1 »

கடிக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக எமது நாட்டு மக்கள் 30 வருடங்களாகப் பல்வேறு துன்பங்களை அனுபவித்துள்ளனர். எனவே, மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதற்கு கடுகளவேனும் நாம் இடமளிக்கப்போவதில்லை. அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

இவ்வாறானதொரு குழு புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு நாட்டில் அசாதாரண நிலைமையைத் தோற்றுவிக்க முயற்சிப்பது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாகக் கவனம்செலுத்தி வருகின்றனர் - என்றார் அவர். (த-சி)

# பொன்சேகாவின் மனு 31 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, ஜன.17

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளில் பங்குபற்ற தன்னை அனுமதிக்குமாறு கோரி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த ஆணை கோரும் விண்ணப்பம் ஜனவரி 31ஆம் திகதி விசாரிக்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளில் கலந்து கொள்ளவும் தனது அதிகாரங்கள், உரிமைகள், தனக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை அனுபவிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சரத் பொன்சேகா நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

# பேச்சு காத்திரமாக நகர இந்தியா இலங்கைக்கு அழுத்தம் தரட்டும்

1 »

மொழிகள் வழங்கியபோதும் அவை எதுவும் காப்பாற்றப் படவில்லை. 13 ஆவது திருத்தத்தை தாண்டி அதிகாரங்கள் பகிரப்படலாம் என்று தெரிவித்தவர்கள் இப்போது, 13 ஆவது திருத்தத்தை விட குறைவான அதிகாரங்களைக்கூட பகிர தயாராக இல்லை.

13 ஆவது திருத்தத்தையும் தாண்டிய அதிகாரத்தையும் தமிழர்களுக்கு பகிர்வதாக உங்களுக்கு, இலங்கை ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் தந்த உறுதி மொழிகள் எவையும் காப்பாற்றப்படவில்லை. மாறாக 13 ஆவது திருத்தத்தைவிட குறைந்த அதிகாரத்தை பகிர்வதற்குக் கூட தயாராக அவர்கள் இல்லை

எனவே பேச்சு இப்படியே போக முடியாது. தமிழ் மக்கள் இந்தப் பேச்சு தொடர்பில் எங்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர். தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டால் இந்தப் பேச்சைத் தொடர்ந்து நடத்த முடியாது.

பேச்சு தொடர்பான சிக்கல் தீராவிடின் தமிழ் மக்களுக்கான பிரச்சினையும் தீராது. இந்தியாவினது பிரச்சினையும் தீராது. ஆகவே தமிழ் மக்களின் நலன் கருதி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை, இலங்கை அரசை பொறுப்புக் கூறும் கடமையிலிருந்து பாதுகாத்திருக்கின்றது. இறுதிக் கட்ட போரில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைக்கு அறிக்கையில் எதுவும் குறிப்பிடப் படவில்லை.

வெளிப்படையானதும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கூடியதுமான விசாரணை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டால் மாத்திரமே இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும். அதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். இந்த விடயங்களை இந்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியும் சரி மற்றும் அமைச்சர்களும் சரி ''வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற முடியாது. மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது'' என்று நாடாளுமன்றத்துக் குள்ளேயும் வெளியேயும் கூறிவருகின்றனர். இவ்வாறான அதிகாரங்கள் இல்லாமல் எவ்வாறு மாகாண சபையை நடத்துவது ?

இந்தியாவில் மாகாணங்களுக்கு இதனைவிட அதிகளவான அதிகாரங்களை வழங்கியுள்ளீர்கள். ஆனால் அதனைவிட குறைவான அதிகாரங்களைக் கேட்டால் கூட தரமுடியாது என்கிறார்கள்.

மேலும் நீங்கள் முன்னர் பயணம் செய்தபோது இருந்த கள நிலைமைகள்தான் இப்போதும் வடக்கில் இருக்கின்றன. இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்கள குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம், தமிழ் மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படாமை போன்றவை தொடர்கின்றன - இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தாம் பிரச்சினைகளை முன்வைத்தார்கள் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பாக தான் இலங்கை அரசுடன் கலந்துரையாடுவார் எனக் கிருஷ்ணா தெரிவித்தார் - எனவும் அவர் மேலும் கூறினார். (உ-15)

# வடமராட்சிக் கடலில் திடீரென தோன்றி மறைந்த தீப்பிளம்பு

1 »

வடமராட்சி பருத்தித்துறை இன்பருட்டிக் கடற்கரையில் இருந்து கடலில் சுமார் 200 மீற்றர் தூரத்தில் திடீரென தீப்பிளம்பொன்று தோன்றி சுமார் அரை மணி நேரமாகத் தொடர்ந்து கடலில் எரிந்தவாறே காட்சி அளித்ததாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். கடலில் எரிந்த தீப்பிளம்பு அணைந்த கையோடு கடற்றொழிலாளர்கள் இருவர் சம்பவ இடத்தை நோக்கி படகில் விரைந்தனர். அப்போது சிலிண்டரின் பாகம் ஒன்று கடலினுள் மிதந்த வண் ணம் இருந்தது. அதனை மீட்டுக்கொண்டு அவர்கள் கரைக்கு வந்தனர். கடலுக்குள் மூழ்கியிருந்த சிலிண்டர் ஒன்றிலிருந்து வாயு கசிந்ததாலேயே இந்தத் தீப்பிளம்பு ஏற்பட்டிருக்கலாம் என்று மீனவர்கள் கருதுகின்றனர்.

கடற்படை கப்பல்களில் பயன்படுத்தப்படும் சிலிண்டரின் பாகம் ஒன்றே கடலில் மிதந்த வண்ணம் மீட்கப்பட்டது.

(ங-14-319)

# சபையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் அதிகாரம்

1 »

ஆளும் கட்சி உறுப் பினர்கள் 7 பேரும் எதிர்க்கட்சியில் ஐ.தே.க உறுப்பினர்கள் இருவர், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டுக்கான சபையின் பொறுப்புக்கள், கடமைகள், அதிகாரங்கள் அனைத்தையும் சபைத் தலைவர் 10 உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து வழங்கினார். மக்களுக்கான அபிவிருத்தியில் அனைத்து உறுப்பினர்களும் ஈடுபடும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தலைவர் அங்கு தெரிவித்தார்.

இதன் மூலம் மன நிறைவுடன் மக்களுக்கான பணியை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்த முன் மாதிரிகையான நடவடிக்கையை ஏனைய பிரதேச சபைகளும் கடைப்பிடித்தால் அனைத்து உறுப்பினர்களும் மக்கள் பணிகளில் ஈடுபட முடியும் எனக் கூறப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் காணி என்ற ஒன்று இலங்கையில் எங்கும் இல்லை



## காணி அமைச்சர் தெரிவிப்பு

தமிழர்களின் காணி என்று ஒன்று நாட்டில் இல்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், இலங்கையர்களின் காணி என்று ஒன்று மட்டுமே நாட்டில் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப்பிரச்சினை தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளை இல்லா தொழிக்கும் வகையில் நாம் எதுவித நடவடிக் கைகளையும் முன்னெடுக்கமாட்டோம்.

தீர்வு விடயத்தில் அரசுக்குள் பிரச்சினையி ருந்தால், அதனை தீர்த்துக்கொண்டு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் முக்கியமாகக் கூறி யுள்ள கருத்துகள் வருமாறு:-

இந்த நாட்டிலுள்ள மிகப்பெரிய பிரச் சினை காணி பிரச்சினையாகும். புலிகள் கூட காணிக்காகத்தான்செத்துமடிந்தனர். காணி யால் பெற்றோர், பிள்ளைகளுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாட்டிலுள்ள வழக்குகளில் 75 சதவீதமானவை காணி பிரச்சினையுடன் தொடர்புபட்ட வழக் குகளாகும்.

ஒருநாள் தாயொருவர் ''நான் எப்போது இறந்து போவேன்'' என்று தனது மகன் தன்னிடம் கேட்கின்றார் எனக் கூறினார். தாயின் பெயரிலுள்ள காணியை உரிமை யாக்கிக்கொள்ளும் அவாவில் தாயின் உயி ரையே அவர் மதிக்க மறுக்கின்றார். அந்தக் கதையைக் கேட்டதும் என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

மகனின் அரவணைப்பில் அந்தத் தாய் உள்ள போதும் அவரின் மகன் காணி கோரி தகராறு செய்கின்றான் என எனக்குத் தெரியவந்தது. அதனால் நான் ஆத்திரமுற்றிருந்தேன்.

கடுங்கோபத்துடன் அந்த தாயிடம், ''உங்கள் மகன் எங்கே இருக்கின்றான்?'' எனக் கேட்டேன். அதற்கு அந்தத் தாய், ''ஐயா! தயவுசெய்து எனது மகனை ஒன்றும் செய்துவிடாதீர்கள்'' என உருக்கமான முறையில் கேட்டார். அன்றும் என் கண்க ளிலிருந்து கண்ணீர் வந்தது. இவ்வாறான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் கொடூரம்தான் இந்தக் காணி பிரச்சினையாகும்.

நாட்டிலுள்ளகாணி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 100 வருடங்கள் தேவைப்படும் என அதிகாரிகள் என்னிடம் கூறினர். அப்படியானால், நான் வகிக்கும் அமைச்சுப் பதவியால் எதுவித பிரயோசனமுமில்லை என நான் கூறினேன். இந்தப் பிரச்சினைகளை 10 வருடங்களுக்குள் முடிக்குமாறு அதிகாரிகளை வலியுறுத்தினேன்.

'பிம்சவிய' என்ற வேலைத் திட்டத்தின் கீழ் காணிகளை அளந்து, காணிகளுக்கு இலக்கங்கள் வழங்கி, காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வாறான உரிமைப்பத்திரங்களை இலகுவில் வங்கியில் அடகுவைக்கலாம்.

வடக்கு, கிழக்கில் அரசு, காணிகளை அப கரித்து வருகின்றது என சுமத்தப்படும் குற்றச் சாட்டுகள் போலியானவை. அங்கு வாழும் மக்கள் இதுபற்றிக் கூறவில்லை. மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் எம் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

30 வருடங்களாகத் துன்பங்களை எதிர்நோக்கிய தமிழ்மக்களுக்கு சாதாரண உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவே நாம் முயற்சிக்கின்றோம். தமிழ்மக்களின் உரிமைகளை இல்லாதொழிக்கும் வகையில் நாம் ஒருபோதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டோம். இந்த நாட்டில் தமிழர்களின் காணியென்று ஒன்றுமில்லை. இலங்கையர்களின் இடம் என்றுதான் உள்ளது. காணி ஊடாகக் கூட இனத்தை வேறுபடுத்தமாட்டோம்.

காணி பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளை தினந்தினம் கூட்டமைப் பினர் கொண்டுவந்தவண்ணமுள்ளனர். காணி பிரச்சினை தொடர்பாக நான் நாடாளுமன்றில் வைத்து வழங்கிய பதிலை யடுத்து அவர்களால் பதிலடி கொடுக்க முடியாமல்போனது.

என்னைப் பொறுத்தமட்டில் சாதி, மதம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு வேலை செய்பவன் நான் அல்லன். மக்கள் சேவைக்கே எனது மனதில் முதலிடம். மீண்டும் தமிழ்மக்களுடன் இணைந்து வாழ்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கி யமாகக் கருதுகிறேன்.

தமிழர்களின் உரிமைகளுக்குச் சவாலாக நாம் திகழமாட்டோம். தீர்வொன்றை வழங்கும் முனைப்புடனேயே அரசு உள்ளது. தீர்வை பெற்றுக்கொள்ளும் தரப்பு இதயசுத்தியுடன் செயற்படவில்லை. அவர்கள் சர்வதேசத் தையே நாடுகின்றனர் - என்றார் அவர்.

**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம், பிறவுண் வீதி ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 0772203080

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Silver கலர் TOYOTA ALTION கார் உடன் விற்பனைக்கு உண்டு. (Reg. in 2006)
தொடர்பு இல. 0777177592
0789979349

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

ஆனைக்கோட்டைச் சந்திக்கும் மானிப்பாய் சுதுமலைச் சந்திக்கும் இடையில் (28.12.2011) புதன்கிழமை மாலை பெறுமதியான தங்கநகை ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
உரியவர்கள் மட்டும் வருகைதந்து சரியான ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 0777448668
Barnabas
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்

*புவியியல்*
திரு. P.S.V. தினேஸ்

என்னிடம் கல்விகற்று யாழ். முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து
- A/L புவியியலில் A தர சித்தி பெற விரும்புகிறீர்களா?
- மாவட்ட தேசிய ரீதியில் முன்னணிப் பெறுபேறு பெறவிரும்புகிறீர்களா?

இன்றே இணையுங்கள்

ஆரம்பம்: 20.01.2012 (11 மணி)

| | |
|---|---|
| திங்-புதன் | சூழல் முகாமைத்துவம் (11-12) |
| செவ்-வியா | சூழல் மூலகம் (11-12) |
| வெள்ளி | மானிடப்புவியியல் (11-12) |
| சனி, ஞாயிறு | செய்முறைப்புவியியல் (11-12) |

- அலகு ரீதியான மீட்டல் பரீட்சை
- 10 இறுதி மாதிரிப் பரீட்சை
- வினாத்தாள்களும் பரிசீலித்து உடன் கையளிக்கப்படும்.
- மாதத்தில் 40 மணித்தியால வகுப்பு

கடின முயற்சி வெற்றியின் அடிக்கல்

**புதிய தாசன் கல்வி நிலையம்**
ஜெற் மோட்டோர்சடி. கே.கே.எஸ் வீதி சுன்னாகம்.

**A/L 2013 DAY CLASS**
கலை வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| பொருளியல் திரு.வரதராஜன். | அரசியல் திரு.சி.சுகாஷ். |
| தமிழ் திரு. சத்தியவேந்தன் | புவியியல் திரு. குமரன் |
| வணிகக்கல்வி திரு. முரளி | அளவையியில் திரு. E.S.பவன். |
| இந்துநாகரிகம் இந்து சமயம் திரு. சுரேஸ் | வரலாறு திரு.சுதன். |
| கணக்கீடு திரு. பகீரதன். | வணி/ புள்ளி பொது அறிவு திரு. தவசேகர். |
| நாடகமும் அரங்கியலும் திரு. றமேஸ் | விவசாயம் பிரபல ஆசிரியர். |

ஆரம்பம்- 18.01.2012 புதன்கிழமை
நேரம் - காலை 8 மணி.

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

புதிய பிரிவு ஆரம்பம் – 18.01.2012 (புதன் கிழமை)

அறிமுக இலவச வகுப்பு 17.01.2012 (இன்று)

| 182 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | இலங்கை வங்கி மாடி சங்கானை |
|---|---|
| காலை 9.00 - 10.00 O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள் | மாலை 4.00 - 5.00 O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள் |
| காலை 11.00 - 12.00 பல்கலைகழகம் தெரிவுபெற்றோர் | மாலை 5.00 - 6.00 அரச, தனியார் அலுவலர்கள் |

அனுமதி, புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

**ஷாம்சன் இங்கிலீஷ்- 3மாத பயிற்சி நெறி**

இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தால் பேச முடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தமையாலாகும்.

ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புததகத்தின் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட தாய் மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!

எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாய் - தந்தையருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப் பட்டறையில் (WORK SHOP) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 21.01.2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (இம் முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)

ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப 8-10 பிரிவு III பி.ப 01- 03
பிரிவு II மு.ப 10- 12 பிரிவு IV பி.ப 03- 05

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL: 0776214567

# மரண அறிவித்தல்கள்

## *மாப்பாணர் நடராசா*



புலோலியைப் பிறப்பிடமாகவும், மணியம் வளவு, புலோலி தெற்கு, புலோலியை வசிப்பிட மாகவும் கொண்ட மாப்பாணர் நடராசா 15.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான மாப்பாணர்- பாறு வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா- வள்ளிப்பிள்ளை தம் பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அரு ணாசலம், கதிரேசு மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களனா சிவசம்பு, சிவபாக்கியம், மற்றும் வீரபத்திரர் மகாதேவா ஆகியோரின் மைத்துனரும், கல்யாணி, ராஜ்குமார், தமிழ்ச்செல்வன், நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவ ணபவன், மேனகா, தர்சினி, தாரணி ஆகியோரின் மாமனும், திவ்யா, கஜானன், மகிஷா, அனுஷ்கா ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியம் வளவு, புலோலி தெற்கு, புலோலி.*

தகவல்: குடும்பத்தினர்.

## *இளையதம்பி செல்லத்துரை*

உமா இல்லம் சரசாலை தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இளையதம்பி செல்லத்துரை நேற்று (16.01.2012) கொழும்பில் காலமானார்.

அன்னார் உமாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா , தேவவதனி, மலர்விழி, குகதாஸன், உருத்திரப்பிரியா, ரதிப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உமா இல்லம், சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: தேவவதனி நாகநாதன் (மகள்).

## *நித்தியானந்தசர்மா சறோஜினிதேவி*



உடுவில் கற்பக்குணப்பிள்ளையார் கோயில டியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி, சிவஞா னப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமா +கவும் கொண்ட நித்தியானந்தசர்மா சறோஜினி தேவி நேற்று (16.01.2012)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வா. பாலசுப்பிரமணியக்குருக்கள் (சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் தேவஸ் தான பிரதம குரு) காலஞ்சென்ற பவானியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமிக்குருக்கள் (நீர்வேலி கந்தசாமி ஆலயம்)- காமாட்சியம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும், நித்தியானந்தசர்மாவின் அன்பு மனைவியும், மங்களேஸ் வரசர்மா, ஜோதீஸ்வரசர்மா, மயூரதி ஆகியோரின் பாசமிகு தாயும், வாகீஸ்வரியின் அன்புச் சகோதரியும், வெங்கடேஸ்வரசர்மா- சுப் பிரமணியக் குருக்களின் (ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ் தானம், சொய்சாபுர, மொரட்டுவ) மைத்துனியும், கோபிகிருஷ் ணசர்மா, சேபிதா, கோபிதாசசர்மா ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

சிவஞானப்பிள்ளையார் தேவஸ்தானம், சங்குவேலி, மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.